Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් ஜூலை 07-13, 2002

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 467

## இனி ஐக்கியத்துக்கு புதிய சவால்

## கிழக்கில் உருவாகும் பதற்றம்

## சூட்டணி குழறுபடிக்



## நினைத்து நினைத்து சிரிக்க...

## ஆன்மீகம்

### இறை சித்தத்திற்குப் பணிந்து நட



மனித வாழ்வானது சோதனைகள், சோகங்கள், இடர்கள், வேதனைகள் கலந்தது தான். ஆனால், இவையனைத்தும் என்றுமே நிரந்தரமானவையல்ல. சில வேளைகளில் "எனக்கு மட்டும்தானா இந்தச் சோதனைகள்" என நாம் சலிப்புறுகின்றோம். ஏனெனில் எம்மை விடத் துன்பப்படுபவர்கள் இவ்வுலகில் உள்ளனர் என்பதை நாம் சிந்தித்துப் பார்ப்பதில்லை. அவ்வாறு ஒப்பிட்டுப் பார்த்தால் எமக்கு வந்தவை துன்பங்களே இல்லை என்ற உண்மையை நாம் உணருவோம்.

எவ்வளவு பெரிய தடைகள் உன் வாழ்வில் வந்தாலும் "இறைவனின் சித்தம் என்னில் நிறைவேறட்டும்" என்று கூறிக்கொள். இறைவன் தான் அன்பு செய்பவனை அதிகமாகச் சோதிப்பார் என்று வேதாகமம் கூறுகின்றது. பிரச்சனைகள், சவால்கள், வரும்பொழுது, "என்னிலும் பெரியவர், என்னைக் கவனிக்கத் தொடங்கி விட்டார்" என மகிழ்ச்சி கொள். "என்னைப் பராமரித்து வழி நடத்துபவர் என்னோடு இருக்கின்றார்" என உறுதிகொள். இறைவன் உன்னைப்பற்றி வகுத்துள்ள திட்டத்தை, அவர் சித்தத்தை மாற்ற எண்ணாதே. ஏனெனில் அவர் நன்மையைத் தவிரத் தீமையை ஒரு போதும் செய்ய மாட்டார். எனவே நாம் எச் சந்தர்ப்பத்திலும் இறை சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து பொறுமையுடன் நடக்க வேண்டும்.

செல்வி.வ.மரிய சுசிலா- சிலாபம்.

### கடவுள் உங்கள் பக்கம்

வறுமை, நோய், பயம் என்று எது வந்தாலும் இறைவனை நம்பி அவன் மீது பழியைப் போடுங்கள். அவன் ஆட்டும் வரை ஆட்டட்டும் என்று நம்பிக்கையுடன் வேடிக்கை பாருங்கள். உங்களை நீங்களே வேடிக்கை பார்க்கக் கற்றுக் கொண்டால் உத்தம புருஷனாக மாறுவீர்கள். வாழ்க்கை ஒரு சக்கரம். அது சுழலும் வரை நீங்களும் சுழல்வீர்கள் அது நின்றால், நீங்களும் நிற்பீர்கள். உங்கள் கையில் எதுவும் இல்லை. இறை உணர்வு, தன்னம்பிக்கை இவை இரண்டு மட்டுமே உண்டு. இவை இரண்டும் இருந்தாலே போதும், இறைவன் என்றும் உங்கள் பக்கம்தான்.

ரீ.குணவர்த்தன, களுவாஞ்சிக்குடி.

### அற்புதத் திருமறை அல்-குர்ஆன்

உலக முடிவுவரை மானிட கோடிகள் அனைத்துக்கும் நேரிய, சீரிய வழிகாட்டிக் கொண்டிருக்கும் ஒப்பற்ற கலங்கரை விளக்குத்தான் அல்குர் ஆன்.

அல்குர் ஆன் மனித வாழ்வின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் உரிய காரணத்தைத் தெளிவுபடுத்தி எதையும் சிந்தித்துச் செயலாற்றத் தூண்டுகிறது. இது இல்லாததை எடுத்துக் கூறிச் சிந்தனையில் சிக்கலை ஏற்படுத்தவில்லை.

இறை மறையைப் பின்பற்றினால் ஏற்படக்கூடிய வெற்றியையும், இதனை மறுத்தால் ஏற்படக்கூடிய தோல்வியையும் நாளை மறுமையில் நாம் காணலாம்.

அல்லாஹ் தன் திருமறையில் கூறுகின்றான். இவர்கள் பூமியில் பிரயாணம் செய்யவில்லையா? அவ்வாறு செய்தால் இவர்களுக்கு முன்னிருந்தோரின் முடிவு என்னவாயிற்று என்பதை இவர்கள் கண்டு கொள்வார்கள். அல்குர் ஆன் 12: 109

சிக்கலான பிரச்சனைகளைச் சுலபமாகத் தெளிவுபடுத்த உதாரணங்கள் தேவைப்படுகின்றன. இந்த அடிப்படையில்தான் அல்குர் ஆன் முன்னையோர்களை உதாரணம் காட்டி அவர்களுக்கு ஏற்பட்ட உயர்வு தாழ்வுக்கான காரணங்களை விளக்குகிறது.

எம்.சி. கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.464

பரிசுக்குரிய கவிதை

### அரவணைப்பு

தெருவினில் இருந்தாலும்
கருவினில் பிறவாத
கன்றுக்குப் பாலூட்டும்
இப் பிராணிக்கு- இறைவன்
பேசக் கற்றுக்கொடுத்தால்
எத்தனை அநாதைகள்
அரவணைக்கப்படும்!

எம்.கே.அல்-தமிஷ்,
188, கண்டி வீதி, திஹாரிய.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### எடுத்துக் காட்டு!

தாய் என்று நினைத்து
நாயிடம் பால் குடிக்கும்
ஆட்டுக்குட்டியே! இந்தப்
பாரினிலே உள்ள மதி
கெட்ட மனித ஜென்மங்களுக்கு
உன் செயல் ஓர் எடுத்துக்காட்டு!

ஏ.ராணி, ராகம.



### சான்று!

இனங்கள்
வேறுபட்டாலும்
தாய்மையின்
குணங்கள் எப்போதும்
ஒன்றுதான் என்பதற்கு
இதுதான் சான்றோ!

அப்துல் சகாப்தீன்
ஹப்புத்தளை.

### பா(ட)சம் புகட்டுவோம்...!!

இனவெறியெனும்,...
சாக்கடைக்குள்...
இரத்த வெள்ளத்தில்
மனித உயிர்கள்...!!
பகுத்தறிவில்லா...
ஐயறிவு ஜீவன்கள்
நாம்! பாசமெனும்
ஒரே போர்வைக்குள்...!!

மும்தாஜ்.ஏ.முத்தலிப்
அநுராதபுரம்.

### ஒற்றுமைக்கொரு சான்று

பாசத்திற்கு இப்படியொரு
சான்றென கின்னஸைத்
தேடாமல்,
ஒற்றுமைக்குப் பகரமாக
ஜாதிமத பேதமின்றி வாழ்ந்திடு
மானிடா!

ஏ.எஸ். அஹமத் சியாத்- நிந்தவூர்-11.

### வருவதும் வராததும்

நாய்ப்பால் குடித்தாலும்
ஆட்டுக்குட்டிக்கு நாய்க்குணம்
வராது- தன் தாய்ப்பால் குடித்தும்,
மனிதனுக்கோ
நாய்க்குணம், நரிக்குணம்
எல்லாமே வரும்!

அ.சந்தியாகோ -கண்டி.

### வேற்றுமை

வாயில்லா ஜீவன்கள்
அதற்கிடையில் எவ்வளவோ
ஒற்றுமை- ஆனால் வார்த்தை
இருந்தும் நம் மனிதர்க்கிடையில்- இவ்
ஒற்றுமைதான் வேற்றுமை
எது எப்படியோ
நாலு பேருக்கு பாடம் புகட்டும்
நாய்க்கு மீண்டும் ஒரு
நன்றி!

நா. நிரோஸ், வாச்சிக்குடா.

### புதுயுகம்

மாற்றாந்தாய் மனம் நீக்கி
ஆட்டுக்குட்டிக்கு முலையிரங்கும்
நாயாரே! ஒற்றுமைக்குள்
வேற்றுமை கண்டு
வேதனைக்குள்ளாகும்
காலத்தில், வேற்றுமைக்குள்
ஒற்றுமை கண்டு புதுயுகம்
படைக்கப் புறப்பட்டு விட்டீரோ?

இராமஜெயபாலன், கொக்குவில்.

## கவிதைப் போட்டி இல.467



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 13.06.2002

கவிதைப் போட்டி இல.467
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### புரிந்து கொள்ளுங்கள்!

மாமிசம் உண்ணும்
நாய் கூட
புல் உண்டு பால்தரும்
ஆட்டுக்குட்டிக்கும் பால் கொடுக்கிறது
புரிந்துணர்வை உணர்ந்து
கொண்டதால்

ஏ.எப்.எம்.நியாட்,
முள்ளிப்பொத்தானை.

### புரியவில்லை!

உன் சேய் பசித்திருக்க
மாற்றான் பிள்ளைக்கு நீ- உன்
மடியினில் பால் சுரப்பதெல்லாம்
மனசின் பெருந்தன்மையா- இல்லை
மனிதன் தந்த உணவுண்டு
மனம் மாறித்தான் போனதுவோ
ஒன்றும் புரியவில்லை எந்தனுக்கு!

க.யோகேஸ்வரன், கஹகல்லையூர்.

## வாசக[ர்] சாலை

மில்லேனியத்தின் மடிதனிலே
முதலாவது தசாப்தம் தனை
வரவேற்று நிற்கும்
என் உயிரோடு உறவாடும்
என் இனிய தினமுரசே...
●●●
பார்க்கும் விழிதனிலே... தேன் முரசாய்
தழுவும் கரம் தனிலே... தின(வெடுத்த) முரசாய்
படிக்கும் மனம் தனிலே... போர் முரசாய்
தூங்கிய தமிழனை விழித்தெழ வைத்து.
துரோகிகள் விதித்த சதிவலைதனில் வீழ்ந்து
வீர முரசாக மீண்டும் நீ எழுந்து
சொல்லில் அடங்காத - தியாகங்கள்
பல நீ செய்து
வந்த பகைவரை - தூசென நீ மதித்து
எழுந்த தடைகளை தகர்த்தெறிந்து
வெற்றி நடை போட்டு
அற்புத(ங்கள்)ம் படைத்த-
பத்தாண்டு முரசே சென்று வா....
மீண்டும் தமிழ் மரபைக் காக்க!
●●●
பொல்லாத உலகம் தனிலே
பொல்லாத மனிதர்களின்
பொல்லாத கொடுஞ் செயலால்
கொலையுண்ட தமிழனுக்காய்
உலக வாழ் தமிழ் நெஞ்சங்களில்
எழுச்சி வார்த்தைகளை நீ விதைத்து
விடுதலைத் தீயை வளர்த்து
ஈழத்தாயின் விடுதலைக்காய்
பேனாவின் முனைதனிலே
பகைவனை எரிக்கும் கொடுஞ் சொற்களை
நீ தொடுத்து
அற்புதனின் முரசில் ஏற்றி
எதிரிகளைச் சுட்டெரித்து பத்தாண்டுள் வரும்
முரசே சென்று வா....
●●●
இனவெறி பிடித்த பேய்களின்
ஆக்கிரமிப்புப் பாதங்கள்
எம் தாய் மண்ணின்
குரல் வளையை நெரித்து
ஏறி நின்று தாண்டவம் ஆட
கேட்பதற்கே நாதியற்று
காப்பாற்ற எவருமின்றி
எமை ஈன்ற தாய் மண்
உயிருக்காய்ப் போராட
நாங்களே....
எங்கள் உயிர் காக்க
சுய நலப் போர்வையால்
உடல் தனை இறுகப் போர்த்து
அகதிகளாகவே
பெற்ற மண்ணை விட்டு வெறியேற...
தமிழ் ஈன்ற வீரமகனாய்
அற்புதமாய் நீ தோன்றி
மரணத்தின் பொறிதனிலே
இறுகவே கால் பதித்து
சிம்ம சொப்பனமாய்
நீ திகழ்ந்தாய் கொடியவர்களின்
கண் முன்னே
பேனாவின் முனையைவிட
துப்பாக்கி முனையே பெரிதெனக் கொண்ட
சிங்களத்தின் கொடியவர்கள்
கொடுந் தீயினை வைத்தனர்
எம் தாய் மண்ணின் தலை மீதினிலே
எம் தேசமோ அதில் எரிந்து நிற்க
நீயோ...
சிங்களத்தின் தலை நகரின்
அடிவயிற்றிலேயே தளம் அமைத்து
உறவிழந்த தமிழருக்காய்
உறுதியான பாலம் அமைத்து
துப்பாக்கி முனையைவிட
பேனாவின் முனையே அதிகம்
வலிமை கொண்டதென...
சிங்களத்திற் கெதிராகவே
பேனாவின் முனைதனிலே
கொடுஞ் சொல் நீ தொடுத்து
கொடியவர்க் கெதிராக
நெருப்பு வரிகளால்
கொடும் போர் நீ தொடுத்து
எதிரியை மட்டுமல்ல.
நாவின் வலிமையினால்
பேசும் ஆற்றல் கொண்ட
துரோகிகளையும் சுட்டெரித்த
பத்தாண்டில் பாதம்
பதிக்கின்ற தினமுரசே...
இறுமாப்புக்கலந்த மகிழ்வோடு
உனை வழியனுப்புகின்றோம்
சென்று வா... புதிய தெம்போடு.
●●●
கவர்ச்சிகரப் பேச்சினிலே
கேட்போர் மதி மயங்க
தமிழை மட்டும் உச்சரிக்கும்
சிங்களத்தின் சூரியன்.
கதிரவனை இறுகணைத்து
மரண வாசலை அலங்கரித்து.
கொடுங்கோல் ஆட்சி புரிந்த
ஆட்சியாளரின்
கவர்ச்சிகரமான சிரிப்பினிலே
சர்வ தேசமும் தள்ளாட
சிங்களத்தின் கருவுக்குள்ளேயே
அற்புதமாய் நீ முளைத்து
துரோகிகளின் கண்களுள்ளும்
முள்ளாக நீ வளர்ந்து
தமிழிற்கே ராஜாவாய்
உலகத் தமிழர் நெஞ்சங்களிலும்
அற்புத ராஜாவாய்- நீ வளர்ந்து
வந்த சோதனைகளை
தோழில் சுமந்து
வேதனைகளை நெஞ்சோடு
அரவணைத்து
சாதனைகள் பல படைத்த
புத்தாண்டுப் போர் முரசே
என் உளமார்ந்த பாராட்டுக்களுடன்
உனக்கு நான் விடை தருகின்றேன்
சென்று வா. மீண்டும் உனக்காக நாமிங்கு

ஆர். சிவநேசன்,
இலண்டன், ஈஸ்ட் கம்



என் பிரியத்திற்குரிய
முரசே!
தித்திக்கும் தேன்
தமிழில் எத்திக்கும்
உன் புகழ்
மணம் பரப்பி
நித்தமும்
உனை நேசிக்கும்
வாசகர்களின்
சித்தத்தை
மகிழ்வித்து- எம்
தேசத்தில்
வித்தாய் ஊன்றி
முளைத்து,
சத்தங்களின்றி
சேவைகள் பல
புரியுமுனக்கு
முத்தங்களோடு
வாழ்த்துக்கள்
பலகோடி!

எம்.பி.ஷேக்முஹம்மத்,
மாவனல்லை.

## உங்கள் பக்கம்

### மலையகத்தின் மற்றொரு அழிவு

மலையகத்தில் தற்போது மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு வரும் மேல் கொத்மலை மின் உற்பத்தித் திட்டம் மலையகத்திற்கு ஏற்படவுள்ள மற்றுமொரு அழிவு என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை எனப் பலரும் கூறுகின்றனர். ஏன் என்றால் ஏற்கனவே இதே போல பல இடங்கள் நீரினால் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. அதுவும் இலங்கையின் முதுகெலும்பு என வர்ணிக்கப்படும் தோட்டத் தொழிலாளர்களின் பகுதிகளில் இவ்வாறான வேலைகளை மேற்கொள்வது மக்களிடையே தற்போது ஒரு வித அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே மஸ்கெலியா, மவுசாகல நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டது .அதனால் குறிப்பாகப் பாதிக்கப்பட்டது தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களே! அவசர அவசரமாக நீர் நிறைந்து கொண்டிருக்கும்போதே பலர் தமது உடைமைகளை விட்டு வெளியேறினர். அது மட்டுமல்ல சுமார் பதினைந்துக்கும் மேற்பட்ட தேயிலைத் தோட்டங்களும், பல தொழிலாளர் குடியிருப்புகளும் நீரில் மூழ்கடிக்கப்பட்டன. அத்துடன் ஐந்துக்கும் மேற்பட்ட பாரிய தேயிலைத் தொழிற்சாலைகள் இன்றும் அவற்றின் பொருட்கள் அகற்றப்படாமலேயே நீரில் மூழ்கியுள்ளன.

இதே போலவே ஹட்டன், டிக்கோயாவுக்கு அருகில் அமைந்திருக்கும் காசல்ரீ நீர்த்தேக்கத்திலும் பல தேயிலைத் தோட்டங்களும், குடியிருப்புக்களும், தொழிற்சாலைகளும் நீரில் மூழ்கிப் போயின. அதே போலத்தான் தற்பொழுது மேற்கொள்ளப்படவுள்ள மேல் கொத்மலை மின் உற்பத்தித் திட்டத்தினாலும் பாதிப்படையப் போவது மலையகத் தோட்டத் தொழிலாளர்களே. மலையக மக்களே! கொஞ்சம் விழிப்பாய் இருங்கள். நாம் சிறிது கண் மூடினாலும் எம் மேல் மண்ணைப் போட்டு மூடிவிடுவார்கள். இதனால் எமக்கு எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை. அன்று அமரர் தொண்டமான் இருந்து இந்த நடவடிக்கையைத் தடுத்தார். ஏன்? அவர் நினைத்திருந்தால் அன்றே அதை நடைமுறைப்படுத்தியிருக்கலாம். இதனால் பல தீமைகள் இருப்பதை அன்று அவர் சுட்டிக்காட்டியே அதைத் தடுத்தார். இன்று தடுக்க யார் இருக்கிறார்கள்?

வெள்ளம் வருமுன் அணை போட வேண்டும் என்பார்கள். இது உண்மைதான். நாம் எதிலும் விழிப்பாக இருக்க வேண்டும். மலையகமே விழித்தெழு! கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் நமக்கு எதற்கு!

நலன் விரும்பி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

**கிழக்கு கலவரங்களின் எதிரொலி**

# இடைக்கால நிர்வாகம் குறித்து முஸ்லிம் காங்கிரஸுக்குள் அதிருப்தி!

கடந்த வாரம் கிழக்கின் மூதூர் மற்றும் வாழைச்சேனைப் பகுதிகளில் இடம்பெற்ற இன வன்முறைகளையடுத்து, எதிர்காலத்தில் வடக்கு-கிழக்கின் இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் ஒப்படைக்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்ற கடுமையான சர்ச்சை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குள் தோன்றியுள்ளது.

கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கும் புலிகளுக்கும் இடையிலான உறவு சீர்கெட்டுப் போயுள்ள நிலையில் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தைக் கையளிக்க அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்குப் பகிரங்கமாக ஆதரவு தெரிவிக்க முடியாத நிலைக்கு முஸ்லிம் காங்கிரஸ் தள்ளப்பட்டுள்ளதாகக் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இது விடயத்தில் கட்சிக்குள் முரண்பட்ட கருத்து நிலவுகிறது. எமது மக்களின் நலன் கருதி நாம் எங்களது முன்னைய முடிவுகளை மீள் பரிசீலனை செய்ய வேண்டி ஏற்பட்டிருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

சமாதானத்தைக் குழப்பியவர்கள் என்ற பழி எம்மீது விழுந்து விடக்கூடாது என்பதற்காகவே நாம் பொறுமை காத்துவருகிறோம். ஆனாலும், முஸ்லிம் மக்கள் மீதான அத்துமீறிய கெடுபிடிகளைத் தொடர்ந்து அனுமதிக்க முஸ்லிம் காங்கிரஸ் தயாராக இல்லை என்றும் அவர் கூறினார்.

வாழைச்சேனை மற்றும் ஒலுவில் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்த அமைச்சர் ரவூப் ஹக்கீம், புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள சில அம்சங்களை மாற்றியமைக்குமாறு தான் பிரதமரிடம் கோரியிருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் தான் செய்துகொண்ட ஒப்பந்தத்தைப் புலிகள் மீறி விட்டதாகவும் ரவூப் ஹக்கீம் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந் நிலையில், கிழக்கில் முஸ்லிம் மக்கள் மத்தியில் தோன்றியிருக்கும் அதிருப்தி அலையை மீறி இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் ஒப்படைப்பதை ஆதரிக்க முடியாதெனக் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.கள் கட்சித் தலைமையை வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர்.

## கொல்லப்பட்ட சகோதரர்களின் சடலங்களை ஒப்படைக்க மறுப்பு

வாழைச்சேனையில் கடந்த வாரம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்கள் பேத்தாளை என்ற இடத்தில் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது:- சமையற்காரர்களான ஹயாத் முகமட் ஜனுடீன் (வயது 24) ஹயாத் முகமட் ஜனூஸ்தீன் (வயது 20) ஆகிய இரண்டு சகோதரர்களும் மற்றொருவரும் பேத்தாளையில் உள்ள ஐஸ் வாடி கனகரட்ணம் என்பவரின் வீட்டில் நடைபெற்ற திருமண வைபவத்தில் சமைப்பதற்காகக் கடந்த 26ஆம் திகதி சென்றுள்ளனர்.

இவர்கள் மூவரும் கனகரட்ணம் என்பவரின் வீட்டில் தங்கியிருந்த சமயம் 27ஆம் திகதி வாழைச்சேனைப் பகுதியில் கலவரங்கள் வெடித்தன.

கனகரட்ணத்தின் வீட்டில் இருந்த இந்த இளைஞர்கள் இருவரையும் கலகக்காரர்கள் பிடித்து, கொன்று புதைத்துவிட்டனர். மூன்றாமவர் தப்பிவிட்டார்.

இந்தக் கொலை தொடர்பாக, தகவலறிந்த பிரதேச முஸ்லிம் தலைவர்கள் இளைஞர்கள் புதைக்கப்பட்ட இடத்திற்கு மாவட்ட நீதிபதி கபூர், சட்ட மருத்துவ அதிகாரி தட்சணாமூர்த்தி சகிதம் சென்று, சடலங்களைத் தோண்டி எடுத்து நல்லடக்கத்திற்காக முஸ்லிம்கள் வாழும் பகுதிக்குக் கொண்டுவரும் போது, இடையில் வைத்துச் சுமார் 300 பேர் கொண்ட கலகக்காரர்களால் இடைமறிக்கப்பட்டனர்.

சடலங்களைக் கொண்டு செல்ல அனுமதிக்க முடியாதெனக் கூறிய அவர்கள் அதே இடத்தில் உடல்களை எரிக்க வேண்டும். மறுத்தால் சடலங்களை எடுத்து வந்தவர்கள் கொலை செய்யப்படுவர் என எச்சரித்துள்ளனர். நீதிபதியும், மருத்துவரும் மாத்திரம் அந்த இடத்திலிருந்து செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் சடலங்களை எடுத்து வந்தவர்களின் முன்னிலையிலேயே அவற்றை கலகக்காரர்கள் எரியூட்டியுள்ளனர்.

இஸ்லாமிய முறைப்படி இறுதிக் கிரியைகளை மேற்கொள்ள உடல்களைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு பலமுறை கேட்டும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை எனச் சம்பவ இடத்திலிருந்த ஒருவர் தெரிவித்தார்.

## சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரல் தயார்!

தாய்லாந்து சமாதானப் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் சகிதம் நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விடார் ஹெல்கெசன் மற்றும் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் இவ்வார இறுதியில் இலங்கை வரவுள்ளனர்.

இவர்களினால் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான கேள்விக் கொத்துக்கள் அரசுக்கும் புலிகளுக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தன. அவற்றுக்கான பதில்கள் இரு தரப்பினராலும் நோர்வேயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஹெல்கெசனின் இவ்வார விஜயத்தின் பின்னர் புலிகள் மீதான தடை தொடர்பில் முக்கிய தீர்மானம் மேற்கொள்ளப்படலாம் எனத் தெரியவருகிறது.

இந்த விஜயத்தை அடுத்துப் பேச்சுவார்த்தைக்கான திகதி அறிவிக்கப்படவிருப்பதாக சமாதான செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஹர்த்தால்களை ஒழுங்குசெய்ய வேண்டாம்
### கண்காணிப்புக் குழு புலிகளிடம் கோரிக்கை

ஹர்த்தால்களை ஒழுங்கு செய்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு புலிகள் இயக்கத்தைக் கேட்டுள்ளது.

தொடர்ச்சியாக நடத்தப்படும் ஹர்த்தால்களால் இனங்களுக்கு இடையிலான முறுகல் நிலை வலுவடைவதாகவும், வன்செயல்கள் இடம்பெற ஏதுவான சூழ்நிலை தோன்றுவதாகவும் எதிர்காலத்தில் ஹர்த்தால் நடத்துவதற்கு மக்களைத் தூண்ட வேண்டாம் என யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் கேணல் ஃபர்ஹாவ்டே தமிழ்ச்செல்வனிடம் கேட்டிருக்கிறார்.

கடந்த வெள்ளிக்கிழமை வன்னியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்த அவர் கிழக்கில் இடம்பெற்ற வன்செயல்கள் குறித்துச் சுட்டிக் காட்டியதுடன் இனிமேல் ஹர்த்தால்களை ஏற்பாடு செய்ய வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கோரிக்கைக்குத் தமிழ்ச்செல்வன் சாதகமாகப் பதிலளித்ததாகவும் இனங்களுக்கு இடையிலான நல்லுணர்வைக் கட்டியெழுப்ப உறுதியளித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நட்டஈடு வழங்குவதாக அமைச்சர்கள் வாக்குறுதி

கடந்த வாரம் கிழக்கின் வாழைச்சேனைப் பகுதியில் இடம்பெற்ற கலவரங்களின் போது கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது.

இவர்களில் 12 முஸ்லிம்களும் 2 தமிழர்களும் அடங்குவர். சம்பவத்தின் போது கொல்லப்பட்ட இரண்டு தமிழர்களும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து நகருக்குள் வந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களது மரணம் தொடர்பாக புலிகள் தரப்பு கருத்தெதனையும் தெரிவிக்கவில்லை.

வன்செயல்களின் போது மேலும் 80 பேர் வரை காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பொலிஸ் நிலையச் சந்தியில் இருந்து வாழைச்சேனை நகர் வரையிலான பகுதியில் இருந்த இரு இனத்தவருக்கும் சொந்தமான 110 கடைகள் தீக்கிரையாக்கப்பட்டதனால் நகரம் சாம்பல் மேடாகக் காட்சியளிக்கிறது. அழிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி குறித்த பூர்வாங்க மதிப்பீடுகள் நடைபெற்றுள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசரமாக நட்டஈடு பெற்றுக் கொடுக்கப்படும் என்று கிழக்குக்கு விஜயம் செய்த அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், மிலிந்த மொறகொட ஆகியோர் பாதிக்கப்பட்ட மக்களிடம் வாக்குறுதியளித்தனர்.

## "கலவரத்தின் பின்னணியில் சிறையதிகாரிகள்"

தென்னிலங்கையின் தங்காலை சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரங்களின் பின்னணியில் சிறை அதிகாரிகள் சிலருக்கும் தொடர்பிருக்கலாம் என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தக் கலவரத்தில் சிறை அதிகாரிகள் சிலர் சூத்திரதாரிகளாக இருந்தனர் என்ற வகையில் தகவல்கள் கிடைத்திருப்பதாகவும், இது குறித்து விரிவான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாடொன்றில் அமைச்சர் அமரதுங்க கூறினார்.

இலங்கை இராணுவத்திலிருந்து தப்பியோடிப் பின்னர் கைதுசெய்யப்பட்ட சுமார் 400 சிறைக் கைதிகள் தங்காலைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிறன்று இந்தக் கைதிகளின் ஒரு பிரிவினர் சிறை அதிகாரிகளைத் தாக்கிவிட்டு ஆயுதங்களைக் கைப்பற்றியதுடன் சிறைச்சாலையைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

மறுநாள் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் ஜோன் அமரதுங்க ஆகியோர் கைதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து சிறைக் கலவரம் சுமுகமான முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

முன்னதாக சிறைக் கைதிகளுக்கும், பொலிஸாருக்கும் இடையில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் குறைந்தபட்சம் 6 பேர் காயமடைந்தனர். ■

## விமானப்படைத் தளபதியின் சங்கடம்!

கார் விபத்து ஒன்று தொடர்பான விசாரணையை எதிர்கொள்வதா? அல்லது பதவியை இராஜினாமாச் செய்வதா? என்பது குறித்து முடிவு செய்யத் தனக்கு சிறிதளவு கால அவகாசம் வழங்குமாறு விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

விமானப்படைத் தளபதியும், இலங்கை விமானப் படையின் கனிஷ்ட தரத்தில் உள்ள இளம்பெண் ஒருவரும் பயணம் செய்த கார்,இரண்டு வாரங்களுக்கு முன்னர் கொழும்பு, பொரளையில் வைத்து லொறி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. நள்ளிரவு நேரத்தில் இந்த விபத்து நடந்தது. விமானப்படைத் தளபதி குடிபோதையில் காரைச் செலுத்தி வந்ததாகச் சம்பவ இடத்தில் நடந்த விசாரணையில் அறியப்பட்டுள்ளது.

ஆனால், மறுநாள் பொரளை பொலிஸ் நிலையத்தில் ஜயலத் வீரக்கொடி வழங்கிய வாக்குமூலத்தில் தனது சாரதியே காரைச் செலுத்தியதாகவும் வேறு எவரும் தன்னுடன் பயணம் செய்யவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த முரண்பட்ட வாக்குமூலத்தையடுத்து விமானப்படைத் தளபதி பலத்த விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டார்.

இதன் பின்னர் விபத்து குறித்த விசாரணையை எதிர்கொள்வதா? அல்லது பதவி துறப்பதா? என இரண்டில் ஒன்றை முடிவு செய்யுமாறு விமானப்படைத் தளபதியை, அரசாங்கம் கேட்டிருந்தது. ■

## வானொலி தேசிய சேவை தமிழுக்கு வழங்கிய கௌரவம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் மலையகத் தமிழ் மக்களுக்கென நடாத்தப்பட்ட ஒரே ஒலிபரப்பு சேவையான கண்டிச் சேவை எவ்வித முன்னறிவித்தலுமின்றித் திங்கட்கிழமை முதல் நிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் தேசிய சேவையில் தமிழ் ஒலிபரப்புக்களுக்காக வழங்கப்பட்ட நேரமும் கணிசமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் தேசிய சேவையின் மதிய நேர ஒலிபரப்பு (செய்தியறிக்கை உட்பட) நிறுத்தப்பட்டுள்ளது.

காலை, இரவு ஒலிபரப்புகளிலும் தேசிய சேவையில் தமிழ் நிகழ்ச்சிகளுக்கான நேரம் அரை மணித்தியாலத்தினால் குறைக்கப்பட்டுள்ளது. ■

## இப்படியும் ஒரு கொடுப்பனவு!

தமது மருத்துவ மனைக்கு இருதய சத்திர சிகிச்சைக்காக நோயாளி ஒருவரை அனுப்பி வைக்கும் மருத்துவருக்கு 10 ஆயிரம் ரூபா அன்பளிப்பாக வழங்கத் தீர்மானித்துள்ளதாகக் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றின் நிர்வாகம் அறிவித்துள்ளது.

குறிப்பிட்ட வைத்தியசாலையின் இருதய நோய் சத்திர சிகிச்சைப் பிரிவின் தலைவரினால் இது தொடர்பான கடிதம் மருத்துவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சை அவசியமில்லாத நோயாளிகளைக் கூட அதற்குத் தூண்டும் வகையில் மருத்துவர்களுக்கு வழங்கப்படும் மறைமுக இலஞ்சமாக இந்தக் கொடுப்பனவு பலராலும் நோக்கப்படுகிறது.

அப்பலோ மருத்துவ மனையின் கிளை ஒன்று கொழும்பில் திறக்கப்பட்டதன் பின்னர் முன்னணி தனியார் வைத்தியசாலைகளுக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள போட்டி காரணமாக இவ்வாறானதொரு அறிவிப்பைக் குறிப்பிட்ட தனியார் மருத்துவமனை விடுத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. ■

# முரசம்

## குழப்பங்களுக்கு உடன் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

நாடு பெரும் குழப்பத்துக்குள்ளாகியுள்ளது.

ஒருபுறம் கிழக்கு மாகாணத்தில் கலவரங்கள் தோன்றி இன்னும் பதற்ற நிலை நீடித்த வண்ணமே உள்ளது.

மறுபுறம் தெற்கிலும் எதிர்பாராத அசம்பாவிதங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தோன்றுகின்றன. தங்காலைச் சிறைச்சாலைச் சம்பவம் போன்றவை சாதாரணமாக நிகழக்கூடியவையாகிவிட்டன. இதேவேளை நாட்டின் பொருளாதார நிலை வீழ்ச்சியடைந்து செல்கிறது. விலையேற்றங்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் அரசாங்கம் திணறுகிறது. பிரதமரே இவை குறித்து நாட்டு மக்களை அமைதிப்படுத்தும் வகையில் உரையாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவற்றுக்கு மத்தியில் புலிகளும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் படைகளை கோயில்கள், பாடசாலைகளிலிருந்து உடனடியாக வெளியேற்றும்படி அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து வருகிறார்கள்.

ஆனால் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் அவ்வாறு படையினரை உடனடியாக அகற்றுவது அசாத்தியமெனத் தெரிவித்துள்ளார். படைகளின் நடவடிக்கைகள் குறித்தும் தமது தரப்பு அதிருப்திகள் குறித்தும் புலிகள் தொடர்ச்சியாக ஹர்த்தால்களை நடத்தி வருகிறார்கள். ஹர்த்தால்களை நடத்துவதைத் தவிர்த்துக் கொள்ளும்படி கண்காணிப்புக் குழுவினர் புலிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். ஹர்த்தால்கள் கட்டு மீறிக் கலவரங்களாக வெடிக்கும் நிலைக்குச் சென்றுள்ளது. இவற்றுக்கு மத்தியில் அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் புலிகள் தலைவர் பிரபாகரனுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளதெனக் குற்றம் சாட்டியுள்ளார். மேலும் அரசாங்கத்துடனான யுத்த நிறுத்த ஒப்பந்தம் பாதுகாப்புப் படைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாதெனவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும் புலிகள் தலைவர் பிரபாகரன், ஹக்கீமுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை முறையாகப் பேணும்படி கிழக்கு மாகாணப் புலிகள் தலைமைகளுக்கு அறிவுறுத்தியும் உள்ளார். சமாதான முயற்சிகள் ஆரம்பித்து அதன் முன்னேற்றங்களில் ஒரு படிநிலை உயர்வு காணப்பட முன்னரே இத்தகைய நிலைமைகள் தலைதூக்கியுள்ளன. எனவே நிலைமையை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்து நாட்டில் தலைதூக்கும் பல்வேறு புதிய குழப்பங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு உகந்த சூழ்நிலை தேவை என்பதால்தான் உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளாது யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பன மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும்கூட சூழ்நிலை மோசமாகிச் செல்லுமானால் இவற்றை மேற்கொண்டது அர்த்தமற்றதாகிவிடும். இந் நிலையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்காது மேலும் காலம் கடத்திச் செல்வது இதர பிரச்சினைகள் மேலோங்க வழிவகுத்து சூழ்நிலையை மேலும் மோசமாக்கிவிடும்.

எனவே அரசாங்கம் சமாதான நடவடிக்கைகளில் துரிதமாகச் செயற்படுவது அவசியம்.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# இன ஐக்கியத்துக்குப் புதிய சவால்

# கிழக்கில் உருவாகும் பதற்றம்

நரன்

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சமாதான முயற்சிகளில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு அடுத்த கட்டமான சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு கால் வைக்க சகுனம் பார்த்தபடி இருக்கும் இத் தருணத்தில் துர்க்குறியாக நிகழ்ந்தேறியுள்ளது கிழக்கு மாகாணக் கலவரங்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பும் எத்தனங்கள், அல்லது அப் பேச்சுக்களில் எதிர்பார்க்கப்படும் முடிவுகளை ஏற்க மறுக்கும் எதிர்ப்புகள் சிங்களத் தீவிரவாதிகளிடமிருந்தே தோற்றமெடுக்குமென எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக கிழக்கில் சிறுபான்மையினர் மத்தியிலிருந்து இதற்குச் சவாலாக இக் கலவரங்கள் வெளிக்கிளம்பியுள்ளன.

இக் கலவரங்கள் எப்படி ஏற்பட்டனவென்பது ஏற்கெனவே சகலருக்கும் தெரிந்துவிட்ட விடயம்.

மூதூரில் ஓரிடத்தில் கல்லுடைக்கும் தொழிலாளிகள் சிலுவைகளை அமைத்துள்ளார்கள். அவற்றை இனந் தெரியாதவர்கள் உடைத்துள்ளார்கள். அதுகுறித்து புலிகள் மோட்டார் சைக்கிளில் வந்த முஸ்லிம் இளைஞர் ஒருவரைத் தாக்கியுள்ளார்கள். அதனையடுத்து புலிகளின் காரியாலயத்தை அவ் விளைஞரின் நண்பர்கள் தாக்கி உடைத்துள்ளார்கள். இதற்கெதிராகப் புலிகள் மூதூரில் ஹர்த்தால் ஒன்றை நடத்தினர். அதன்போது அங்கு ஏற்பட்ட கலவரத்தில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டனர். ஆயிரக் கணக்கானவர்கள் இடம்பெயர்ந்தனர். அதனை எதிர்த்து வாழைச்சேனையில் முஸ்லிம்கள் ஒரு ஹர்த்தால் நடத்தினர். அந்த ஹர்த்தாலின்போது தமிழ் இளைஞர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் தீக்கிரையாக்கப்பட்டதையடுத்து வாழைச்சேனையிலுள்ள 110 கடைகள் எரிக்கப்பட்டன. இதில் 12 கடைகள் தமிழர்களதும் மீதி முஸ்லிம்களதுமாகும். இச் சம்பவம் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையிலான பாரிய கலவரமாக வெடித்தது. உயிர்ச்சேதம் பொருட்சேதங்களுடன் கிழக்கு மாகாணத்தின் இதர பகுதிகளுக்கும் பரவியது. சட்டம் ஒழுங்குகளை மீறிய பெரும் பதற்றம் அங்கு நிலவுகிறது.





இவற்றின் தொடக்கம், தொடர்ச்சி, என்ற வரிசையை மட்டும் நோக்குவதால் இக் கலவரங்களின் காரணத்தை விளங்கிக்கொள்ள முடியாது.

உண்மையில் இங்கு நிகழ்ந்தேறிய சம்பவங்கள் இக் கலவரங்களைத் தோற்றுவிக்கவில்லை.

இச் சம்பவங்கள் வெறுமனே ஒரு சிறு தீப்பொறிதான்.

ஆனால் பற்றிக் கொள்வதற்கான பெற்றோல் அங்கு அடித்தளத்தில் இருந்துள்ளது.

இல்லையேல் தனிப்பட்ட ஒருசிலர் சம்பந்தப்பட்ட ஒரு சாதாரண சம்பவம் எப்படி ஒரு கலவரமாக உருவாக முடியும்?

இலங்கையின் ஜனாதிபதி பிரேமதாசா, உணர்ச்சி பொங்கும் ஒரு மேதின ஊர்வலத்தில் வைத்தே கொல்லப்பட்டும் அது கலவரமாக வெடிக்காதிருக்க, சின்னஞ்சிறிய மூதூர்ச் சம்பவம் இத்தகைய ஒரு பெரும் கலவரத்தைத் தோற்றுவித்துள்ளதானது சிந்திக்கத் தக்கது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின்னான கால கட்டத்தில் முஸ்லிம்கள் பாரிய பாதிப்புகளுக்கு உள்ளாகியிருந்தார்கள்.

முஸ்லிம் பொலிஸார் தனியாகப் பிரிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டது, காத்தான்குடிப் பள்ளிவாசல் படுகொலைகள், பொலனறுவை எல்லைக் கிராமப் படுகொலைகள், வடக்கிலிருந்து முஸ்லிம்கள் அகற்றப்பட்டமை போன்றவை அவர்களுக்கு தமிழ் ஆட்சிகள் பற்றிய சந்தேகங்களையும், இருப்புக்கும் பாதுகாப்புக்குமான உத்தரவாதங்கள் குறித்த அச்சத்தையும் ஏற்படுத்தியிருந்தன.

அத்துடன் தமது பாதுகாப்பையும், கலாசாரத் தனித்துவத்தைப் பேணக்கூடிய அரசியல் உரிமைகளையும் கொண்ட தமக்கான தீர்வு ஒன்றுபற்றி அவர்கள் சிந்திக்க விழைந்தார்கள்.

முஸ்லிம்கள் ஒரு தேசிய இனமென்ற எண்ணக்கரு பல்வேறு வாதப் பிரதிவாதங்களோடு அவர்கள் மத்தியில் தோற்றம் பெற்றுள்ளது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில்கூட முஸ்லிம்கள் குறித்த தீர்வுகள் சேர்க்கப்படவில்லையென்ற மனக்குறையை அவர்கள் கொண்டிருந்தார்கள்.

அதற்கு முன்னர் திம்புப் பேச்சுவார்த்தைகளில் தமிழ்ப் போராட்டத் தலைமைகள் முன்வைத்த கோட்பாடுகளில் மலையகத் தமிழர் பற்றி முன்வைக்கப்பட்டிருந்தும்கூட முஸ்லிம் மக்கள் பற்றி எதுவுமே கூறப்படவில்லையென்ற குறைபாட்டைத் தெரிவித்து வந்தனர்.

முஸ்லிம்கள் தமக்கான தீர்வுகள் குறித்து சிந்திக்கத் தொடங்கியதன் பின்னால் அவர்கள் பல்வேறு தீர்வுத் திட்ட மாதிரிகளைக் காலத்துக்குக் காலம் வெவ்வேறு அரசியல் அரங்கங்களில் முன்வைத்தாலும் அவைகுறித்து எவ்விடத்திலுமே இதுவரை அங்கீகாரம் கிட்டவில்லை.

முன்னர் முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்த முஸ்லிம் தனிமாநிலக் கோரிக்கைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி முஸ்லிம் காங்கிரஸ"டன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் தமது அரசியல் ஆதாயத்துக்காகச் சம்மதித்திருந்தாலும் இப்போது அதையிட்டு மௌனம் சாதித்துக்கொண்டு புலிகளுடனான பேச்சுவார்த்தையை மட்டுமே வலியுறுத்தி வருகிறது.

இதேவேளை இம் முஸ்லிம் தனிமாநிலக் கோரிக்கை வலுவிழந்துவிட்ட நிலையில் முஸ்லிம்களுக்கான பாதுகாப்பையும் உரிமைகளையும் உறுதிப்படுத்தும் அரசியல் ஏற்பாடொன்று அவசியமென அவர்கள் உணர்கின்றனர்.

இப்போது நிகழும் சமாதான முயற்சிகளில், யுத்த நிறுத்தத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், மற்றும் நிகழவுள்ள அரசியல் பேச்சுவார்த்தைகளில் அத்தகைய ஏற்பாடுகள் தவறவிடப்படுவதாக அவர்கள் அஞ்சுகிறார்கள்.

அத்தோடு தற்போது நடைமுறையிலுள்ள யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தம்மீதான வரி, மற்றும் நிதி அறவீடுகள், விவசாயக் காணிகள் மற்றும் கால்நடைகள் அபகரிப்பு ஆகியவற்றை நிறுத்தவில்லை என்றும், இவற்றைக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிடுவதில் எவ்வித பயனுமில்லை என்ற நிலை காணப்படுவதாகவும் அவர்கள் விசனிக்கிறார்கள்.

இதேவேளை புலிகள் தலைவர் பிரபாகரனுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூஃப் ஹக்கீமுக்கும் இடையில் இருவரும் கைச்சாத்திட்டு மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்கூட நடைமுறையில் கிழக்கில் இவற்றை நிறுத்துவதாக இல்லையென அவர்கள் அதிருப்தியடைந்துள்ளார்கள்.

இவற்றை விட அரசாங்கமோ, அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகளோ, இவற்றைத் தடுப்பதாகவும் இல்லையெனவும் அவர்கள் குறைப்படுகிறார்கள்.

இத்தகைய அதிருப்திகளும், தமக்குள்ள நெருக்கடியினை எங்கும் வெளிப்படுத்த முடியாத நிலைமையும், தமது மனக்குறைகள் உதாசீனப்படுத்தப்படுவதான உணர்வும் பத்திரிகைகள் மற்றும் தொடர்புச் சாதனங்கள் இவற்றை இருட்டடிப்புச் செய்வதான விசனமும் ஒருங்கு சேர்ந்தே இத்தகைய கலவரமாக வெடித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூஃப் ஹக்கீம் இதுகுறித்துக் கூறுகையில் வாழைச்சேனையில் சில முஸ்லிம் மாற்றுத் தரப்பினரால் ஹர்த்தால் நடத்தப்பட்டாலும் அந்த ஹர்த்தாலுக்கு முஸ்லிம்கள் எடுபடக்கூடியதாக அவர்கள் மத்தியில் நிலவிய அதிருப்திகளே காரணமாக இருந்தனவெனச் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஏற்பட்டு வந்த ஒரு விரிசல்தான் கலவரமாக வெடித்தது.

ஆனால் கலவரம் என்பதே மிகப்பெரும் விரிசலொன்றைக் கிழக்கு மாகாணத்தில் ஏற்படுத்தி விட்டது.

கலவரத்துக்குப் பின்னான சம்பவங்களென்பன ரவூஃப் ஹக்கீமுக்கு, தான் புலிகள் தலைவர் பிரபாகரனுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நம்பிக்கையீனத்தைத் தோற்றுவித்து விட்டது.

அவர் பகிரங்கமாகவே புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறியுள்ளார்கள் என்று குற்றம் சாட்டுவதற்கு வழிகோலியுள்ளது.

அதேவேளை யுத்த நிறுத்த ஒப்பந்தமானது பாதுகாப்புப் படைகள் தமது கடமையைச் செய்வதைத் தடுக்க முடியாதெனக்கூறி அரசாங்கத்திடம் பாதுகாப்புப் படைகளை பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும்படி தான் கோரவுள்ளதாகவும் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இக் கலவர காலத்தில் நடந்த தங்காலை சிறைச்சாலையைக் கைதிகள் கைப்பற்றிய விடயத்துக்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து முற்றுப்புள்ளி வைத்துள்ளது. அதுபோல் இதேவேளை உருகொடவத்தை பொலிஸ் கைதியின் மரணத்தால் ஏற்பட்ட குழப்பத்துக்கு பிரதமரே நேரில் தலையிட்டு நடவடிக்கை எடுத்துள்ளார். ஆனால் கிழக்கில் கலவரங்கள் நிகழ்ந்து நீடித்துக்கொண்டிருக்கும் போதும் அரசாங்கம் அவற்றை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவில்லை என்பது இங்கே பாரிய குறைபாடாக உணரப்பட்டுள்ளது.

எனினும், மீண்டும் ரோந்து நடவடிக்கைகளில் படைகளை ஈடுபடுத்த வேண்டிய நிலை அரசாங்கத்துக்குத் தோன்றுமானால் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கும் அது ஒரு கேள்விக்குறியாகி விடலாம்.

எவ்வாறு ஹர்த்தால்கள் கட்டுப்பாடுகளை மீறிச் செல்கின்றனவோ, அதுபோலவே பாதுகாப்புப் படைகளது ரோந்துகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பனவும் புலிகளுடனான உரசல்களுக்கும் மோதல்களுக்கும் வழிகோலிவிடக் கூடும்.

ஆயினும் தமிழ்ப் பகுதிகளில் புலிகளின் பக்கபலம் இருக்குமானால் பாதுகாப்பற்ற முஸ்லிம் பகுதிகள் படைகளின் பக்கபலத்திலேயே தங்கியிருக்க வேண்டியவர்களாவார்கள்.

ஹக்கீமின் இக் கோரிக்கை அதனையே உறுதிப்படுத்துவதாக உள்ளது.

இந் நிலைமையானது புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு மட்டுமன்றி, எதிர் நோக்கும் பேச்சுவார்த்தைகளிலும் சில கேள்விகளை எழுப்பியுள்ளது.

இவை வெறும் கலவரங்கள் என்ற தன்மையுடன் நின்றுவிடாது பேச்சுவார்த்தைகள் மற்றும் தீர்வு முயற்சிகளில் பாரிய எதிர் விளைவுகளைத் தோற்றுவிக்கும் விவகாரமாக எழுந்துள்ளது.

இக் கலவரங்கள் அரசியல் ரீதியான தளர்வுகளையும், உளவியல் ரீதியான பாதிப்புகளையும் சிறுபான்மை இனங்களுக்கிடையிலான முறுகல் நிலையையும் தோற்றுவித்துள்ளது.

பேச்சுவார்த்தைகளில் புலிகளின் பிரதான கோரிக்கையான இடைக்கால நிர்வாகத்திற்கு முஸ்லிம் தரப்பினர் சம்மதிப்பார்களா? என்ற கேள்வி இப்போது எழும்பியுள்ளது.

அத்தோடு பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை ஒரு கட்டாயமாக வலியுறுத்தும் அவசியம் அவர்களுக்குப் பெரிதும் எழுந்துள்ளது.

இதற்குப் பின்னரும் முஸ்ஸிம்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் தொடருமானால் அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் என்ன நிலைப்பாட்டை எடுக்கப் போகிறது என்பதும் உணர்ச்சிபூர்வமான விடயமாகியுள்ளது. அவ்வாறு கடும் நிலைப்பாடெதையும் எடுக்காது மென்போக்கில் அதன் அரசியல் தொடர முடியாதென்ற நிர்ப்பந்தங்கள் அதன் தலைக்கு மேல் அதிகரித்துவிட்டனவென்பதும் யதார்த்தமாகும்.

இதேவேளை ஹக்கீமே அதிருப்தி தெரிவித்துள்ள நிலையில், புலிகளுடனான ஹக்கீமின் உடன்படிக்கையை முஸ்லிம்களுக்கான நம்பிக்கை உத்தரவாதமாக முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்தும் வெளிக்காட்ட முடியாத நிலைமை தோன்றிவிட்டது.

அத்தோடு முஸ்லிம் காங்கிரஸ"க்கு எதிர்க்கட்சியாக விளங்கும் பேரியல் அஷ்ரப்பின் தேசிய ஐக்கிய முன்னணி இந் நிலைமையை தனக்கு அறுவடையாக்கிக் கொள்வதற்கு இடமளிக்காத அரசியலையும் முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, அரசாங்கம் -புலிகள்-முஸ்லிம் காங்கிரஸ்-முல்லிம்கள் என்ற புள்ளிகளின் சமநிலைக்கான இணைப்புக் கோடுகள் எங்கே தெறிக்கும் என்பது இப்போது கேள்வியாகியுள்ளது.

இந் நிலைமைகளிலிருந்து எவ்வாறு அடுத்த கட்ட அரசியல் நகர்வை மேற்கொள்வது என்பதே சமா தான விரும்பிகள் சிந்திக்க வேண்டிய பொறுப்பு வாய்ந்த விடயமாகும்.

# கிழக்கு உணர்த்தும் யதார்த்தங்கள்

சமூகங்களை மோத விடுவதன் மூலம் தமது நலன்களை, அரசியல், இராணுவ இலக்குகளை அடைய முயலும் சக்திகள் பற்றி மக்கள் சற்று எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

90 களின் முற்பகுதியில் முஸ்லீம் மக்களுக்கெதிரான நடவடிக்கைகள் படுகொலைகளாகவும் , சொந்த இடங்களை விட்டு வெளியேறுவதற்கான நிர்ப்பந்தங்களாகவும் இருந்தன.

அவமான உணர்ச்சியும், கோபமும் அவர்களிடம் எழுந்தன. ஆனால் பெருவாரியான முஸ்லீம் மக்கள் ஏறத்தாழ முழுவதுமாகவே தமிழ் மக்களின் போராட்டத்திற்கு எதிராக இருக்கவில்லை. வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற முஸ்லீம் மக்கள் நினைத்துக் கூடப்பார்க்கவில்லை என்றே கூறலாம்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லீம் மக்களிடையே ஆழமான சமூக, பொருளாதார உறவுகள் நிலவுகின்றன. இரத்தமும் தசையுமான இச்சமூகங்களைப் பிளவுபடுத்தி இனச்சுத்தீகரிப்பை நிகழ்த்த இரு தரப்பிலும் உள்ள சில சக்திகள் முனைகின்றன.

இதற்குத்தூண்டுகோலான சர்வதேச மறை கரங்களின் செயற்பாட்டையும் நாம் மறுத்துவிடமுடியாது. பி.பி.சி செய்தியாளர் ரிசன் அவர்களின் செய்தியில் இப்படி இடம்பெற்றிருக்கிறது.

இடைக்கால நிர்வாகம் புலிகளின் கைகளுக்குச் செல்லப்போகிறது, தங்களுக்கு ஒன்றுமில்லை என்ற ஆதங்கம் கட்டாய பண வசூல், மற்றும் கெடுபிடிகள் முஸ்லீம்களுக்கு சர்வதேச ரீதியாக உள்ள தொடர்புகள், என்பவை இதற்குக் காரணமாகக் கூறப்பட்டது. இதற்குத் தெளிவான ஆதாரம் இல்லை.

பிரிட்டிஸாரிடமிருந்து இந்த நாட்டின் அரசியல்வாதிகள் கடன் வாங்கிய பிரித்தாளும் கொள்கைப்படி 1980களில் தமிழ் தேசியவிடுதலைப்போராட்டம் ஆரம்பித்ததிலிருந்து முஸ்லீம்களையும் தமிழர்களையும் மோதவிடும் தந்திரோபாயத்தைக் கையாண்டுவந்திருக்கிறார்கள் .

இலங்கையில் இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவு 80களின் முற்பகுதியில் உருவாக்கப்பட்டதிலிருந்து இந்த நாட்டில் தமிழ், சிங்கள மக்களை மோதவிட்டு தமது இருப்பைத் தக்க வைக்கும் ஒரு பாரம் பரியம் பராமரிக்கப்பட்டு வந்தது.

அதேவேளை முஸ்லீம் மக்களும் ஈராக் அமெரிக்காவுடனான போரில் சதாம் ஹுசைன் தொடர்பாகவும், உயர்வான எண்ணங்களைக் கொண்டிருந்தார்கள். செப்டெம்பர் 11 சம்பவத்தை அடுத்து பின்லேடன் கூட குறிப்பிடத் தகுந்த பாதிப்பை முஸ்லீம்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்க முடியும்.

இலங்கையின் பேரினவாத அரசியல்வாதிகள், சிறுபான்மை தேசிய இனங்களை மோதவிடுவதன் மூலம் தமது நலன்களைத் தக்கவைத்துக் கொள்ளமுடியும் என்று கனவு கண்டனர்.

முன்னர் சிங்கள மக்களைத் தமிழ், முஸ்லீம் மக்களுக்கெதிராகத் தூண்டிவிட்டு நடத்திய விளையாட்டின் ஒரு புதிய பரிணாமமாகவே அது அமைந்திருந்தது.

ஆனால் துரதிஸ்டம் என்னவென்றால் அதன் தொடர்ச்சியாக அந்தந்தச் சமூகங்களில் உருவாகிய அடிப்படைவாத உணர்வுகள் சமூகங்களிடையே நிலைமையை மேலும் மோசமடையச் செய்தன.

1990களின் முற்பகுதியில் காத்தான்குடிப் பள்ளிவாசலில் நடைபெற்ற படுகொலைகள், ஏறாவூர் படுகொலைகள் போன்றன, யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம்கள் கட்டாயமாக வெறியேற்றப்பட்டமை போன்றவை முஸ்லீம் மக்களின் மனதில் ஒரு நிரந்தரத் தீ எரிந்து கொண்டிருக்க வழிவகுத்தன.

இத்தகைய சம்பவங்களின் விளைவால் ஸ்ரீலங்கா அரசபடைகளின் பிரசன்னமும், அவசரகாலச் சட்டமும் கூட முஸ்லீம்களின் இருப்பிற்கு, பிழை சரிக்கப்பால் தவிர்க்க முடியாத தேவையாகிவிட்டது.

தமிழ் மக்கள் தரப்பில் இவை பெரும் அச்சுறுத்தலாகவும் அழிவிற்கு வழிவகுப்பனவாகவுமே அமைந்துள்ளன. அவ்வாறு ஒடுக்கப்பட்ட இன சமூகங்கள் என்ற ரீதியில் ஒன்றாக உரிமைகளுக்காக போராட வேண்டிய சமூகங்களின் நலன்கள் எவ்வாறு முரண்படுகின்றன. எங்கே முரண்பட்டன என்பதும் ஆய்வுக்குரிய விடயங்களாகும்.

மாற்றுச் சமூகங்களின் மீதான துவேசம் நீறுபூத்த நெருப்பாக இருக்கும் நிலையில் இப்போது ஏற்படும் அரசியல் மாற்றங்கள் பற்றிய விழிப்புணர்ச்சியும், எச்சரிக்கையுணர்வும் முஸ்லீம்கள் மத்தியில் மேலோங்கியுள்ளன.

தமிழர்களின் ஒருபகுதியினரைப் பொறுத்தவரை ஒருதீங்கும் வராது என்ற நம்பிக்கையில் சீவிக்கலாம். ஆனால் முஸ்லீம்களைப் பொறுத்தவரை வடக்கு-கிழக்கின் நிர்வாகம் ஒரேயடியாக புலிகளின் கைக்குச் செல்வது ஒரு அச்சத்தை ஏற்படுத்தும் விடயமாக உணர்த்தப்படுகிறது.

அந்த அச்சம், அபாயகரமான எல்லைகளுக்கு முஸ்லீம் மக்களை அழைத்துச் செல்லலாம்.

யூன் 20ந் திகதி மூதூரில் இருதயபுரத்திலுள்ள உயரமான ஒரு இடத்தில் நாட்டப்பட்டிருந்த சிலுவைகளை பிடுங்கியதில் சில விசம சக்திகள் சம்பந்தப் பட்டிருக்கின்றன. அதன் தொடாச்சியாக புலிகளின் காரியாலயத்திற்கும் சேதம் ஏறபடுத்தப்பட்டது.

ஆனால் உடனடியாகவே இந்தப்பிரச்சனையைப் பெரிதாகாமல் தடுத்திருக்கலாம்.

ஆனால் "மௌனம் சம்மதம்" என்பது போல் செயற்பட்டு வன்முறை மூதூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி, கல்முனை, அக்கரைப்பற்று எனப் பரவுவதற்கு அனுமதிக்கப்பட்டது துரதிஸ்டமானது.

இஸ்ரேலின் ஏரியல் சரோன் போல் விரோத மனப்பான்மை காட்டினால் சர்வதேச சமுகத்தின் ஆதரவைப் பெற்றுவிடலாம் எனக் கருதுகிறார்களோ என்னவோ தெரியாது.

ஏனெனில் இன்றைய உலகில் ஏரியல் சரோன்களுக்கு மரியாதை அதிகம்.

சுமார் 7பேர் வரை உயிரிழந்து, நூறு பேர்வரை காயமடைந்து. நூற்றுக்கு மேற்பட்ட இரு சமூகங்களின் கடைகள், பேருந்துகள் ஏனைய சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன.

ஒரு வரலாற்று விதியை விளங்கிக் கொள்ள வேண்டும். இரணியன் வானத்திலும் பூமியிலும் தன்னைக் கொல்லமுடியாது என்ற வரத்தைப் பெற்றிருந்தான். ஆனால் இங்கு முஸ்லீம் மக்கள் வானத்திலும் பூமியிலும் வாழமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஏனெனில் பேரினவாதத்தின் பாதிப்புக்கள் ஒருபுறம். அடுத்து பிட்டும் தேங்காய்ப் பூவுமாய் இரண்டறக் கலந்து வாழும் சமூகத்தினுள்ளிருந்து வரும் அச்சுறுத்தல்.

பேரினவாதத்தாலும் அன்னிய சக்திகளாலும் முன்னொரு காலத்தில் எறியப்பட்ட கயிற்றை இந்த இரு சமூகங்களின் தீவிரவாத சக்திகளும் விழுங்கிக் கொண்டுள்ளன என்றே எண்ணத் தோன்றுகிறது. இடையிடையே மோதல்கள் பிரச்சனைகள் வந்தபோதும் காக்கா முகம்மதுவும் கந்தையா அண்ணரும் அன்னியோன்னியமாகத்தான் வாழ்ந்தார்கள். அதில் ஆழமான விரிசல் இன்னும் விழவில்லை.

இந்தச் சமூகங்கள் இரண்டும் ஒன்றின் வளர்ச்சிக்கு மற்றது தடையாக இல்லாமல் பரஸ்பர புரிந்துணர்வுடன்தான் வாழவேண்டும். எந்தச் சமூகமும் மற்றைய சமூகத்தின் மீது மேலாதிக்கம் செய்ய முயற்சிக்கக் கூடாது.

இதேவேளை இவர்கள் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள், இவர்கள் முஸ்லீம்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற அரசபோக உணர்வின் கொடிய வியாதிகளுக்கும் உள்ளாகக் கூடாது.

அப்படி ஒரு விடயம் நிரந்தரமானதோ யதார்த்தமானதோ அல்ல.

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவன கால வகையினனே."

எல்லோருக்கும் ஞாபகமிருக்கும். தமிழருக்கு தந்தை செல்வாவின் தலைமை, அதன்பின் தளபதி அமிர்தலிங்கத்தின் தலைமை, பின் மிதவாதத் தலைவர்களில் நம்பிக்கை இழப்பு.

தமிழர்கள் தம்மை ஒரு தேசமாகக் கருதும் போக்கு வலுவடைகையில் அவர்களின் அரசியல் தலைமையும் மாற்றம் பெற்றுச் சென்றது.

முஸ்லீம்கள் குறிப்பாக தம்மை ஒரு தேசமாகக் கருதும் போக்கு வளர்ச்சியடைந்துள்ளது.

அது ஏனைய சமூகங்களால் உணரப்படவேண்டும். அவர்கள் ஒரு தேசமாக இருப்பதற்குரிய நியாயங்கள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

அவர்களின் தனித்துவத்தை அங்கீகரிக்காத தமிழ்ச் சமூகம் தான் சுதந்திரமாக இருக்கமுடியாது.

சில யதார்த்தங்கள் எமது பிற்போக்கான மரபுகள், மனப் போக்குகளுடன் ஒத்துவரமாட்டா. அவை ஜீரணிக்க முடியாதவையாக இருக்கவும் கூடும் .

தமிழ் சமூகம் முஸ்லீம்களின் உரிமைகளைத் தெளிவாக வெளிப்படையாக அங்கீகரிக்க வேண்டிய வரலாற்றுக் காலகட்டம் வந்துவிட்டது.

முஸ்லீம்கள் ஒரு தேசம் என்பதை அங்கீகரிக்காவிட்டால் வரலாறு அவர்களை ஒரு தேசமாக உருவாக்கும். ●

**-தாகூர்-**

# மலையகத்துக்குத் தேவை தீர்க்கதரிசனத் தலைமையே

**மலையகப் பிரச்சனைகள் தொடர்பாகப் பல மலையக இளைஞர்கள் மிக விழிப்பாகவே உள்ளனர். "கும்பலில் கோவிந்தா" போடுகின்ற வகையினரை மீறிச் சுய சிந்தனையுடன் எழுதுவோரை முரசு எப்போதும் தட்டிக் கொடுக்கும். மலையகப் பக்கத்துக்காக அக்கறை கொண்ட அபிமானி ஒருவர் அனுப்பி வைத்த கட்டுரை இது!**

அன்று முதல் இன்றுவரை சிறுபான்மையின மக்கள் மீது ஆதிக்கம் செலுத்திய பேரினவாத அரசுகள் தொடர்ந்தும் மலையகத் தொழிலாளர்களின் அடிப்படை நலன்களைப் புறக்கணித்தே வந்துள்ளன. காலத்துக்குக் காலம் சிங்கள, தமிழ் அரசியல்வாதிகள் தங்களின் சுய நலன்களுக்காக இம்மக்கள் சமூகத்தைப் பலிக்கடாக்களாக்கினர். அதன் தொடர்ச்சியே இன்று தொழிலாளர் சமூகம் என்ற நிலையைப் புறக்கணித்து, தமிழின நலன்கள் முதன்மைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

மலையக மக்களில் பெரும்பான்மையானோர் தொழிலாளர்கள் என்ற அடிப்படையிலும், தமிழர்கள் என்ற அடிப்படையிலும் ஒடுக்கப்படுகிறார்கள் என்பதே உண்மையாகும். மலையகப் பெண்கள், சிறுவர்கள் இந்த நாட்டில் அதிகூடிய ஒடுக்குமுறைகளைச் சந்திக்கிறார்கள்.

ஆங்கிலேயர் காலத்திலும் சரி, அதற்குப் பின்னரும் சரி, தொழிலாளர்கள் ஒவ்வொரு சிறு விடயத்திலும் தமது உரிமையைப் போராட்டத்தின் மூலமே பெற்று வந்திருக்கின்றனர் என்பது வரலாற்று உண்மை. இன்று அதையெல்லாம் மீறி சிறுபான்மையினர், தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் என்ற பதத்துக்குள் இவர்களின் உரிமைகள் தொடாந்தும் மறுக்கப்பட்டுவருகின்றன. சர்வதேச ரீதியிலான இடதுசாரிகளின் வீழ்ச்சியும், உலகளாவிய முதலாளித்துவ எழுச்சியும், பொருளாதார நெருக்கடியும், வளங்கள் முறையாகப் பங்கிடப்படாமையும் காரணமாக இலங்கையில்கூட தொழிலாளர் சக்தி மிக மோசமாக இன ரீதியாகப் பிளவுப்பட்டுப் போய்விட்டதை இருபக்கத்திலும் உள்ள இனவாத சக்திகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

நமது நாட்டில் தோன்றியுள்ள இன முரண்பாட்டுச் சூழலில் மலையக மக்களும் கடந்த ஏழு தசாப்தங்களாகச் சிக்கவைக்கப்பட்டிருக்கிறார்கள். இன்று மலையகத் தலைமைகளைத் தமிழ் அடிப்படைவாத சக்திகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதில் அக்கறையுடன் இருக்கின்றார்கள் என்பதைக் கடந்த ஏப்ரல் மாதம் புலிகளின் தலைவருடனான சந்திப்பில் மலையகத் தலைமைகளைத் தனித்தனியாகக் கையாண்ட விதம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இதுவரை மூத்த தலைவர்கள் செய்ய முடியாத இந்த விடயத்தைப் புலிகள் செய்திருக்கின்றனர். மலையகத் தலைவர்கள் சிலருக்குத் தலைப்பாகை கட்டிவிட்டுப் பொங்கு தமிழ் நிகழ்வுகளில் பொங்கியெழ வைத்திருக்கின்றமை - மீண்டும் இந்தத் தொழிலாளர் சமூகத்தின் அழிவு எவ்வாறானதாக இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கையில் பயமாகவே இருக்கிறது.

கடந்த காலங்களில் எமது மூத்த தலைவர்கள் வடக்கு - கிழக்கு இயக்கங்களின் பிரசாரக் கருவிகளாகச் செயற்படவில்லை. அவர்கள் தமக்கேயுரிய ஆளுமையைக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று மலையகத்தின் ஒரு தலைவரை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி, அவரைப் பொங்கியெழ வைத்திருப்பதன் பின்னணியையும் நாம் சற்று ஆழமாக யோசிக்க வேண்டியிருக்கிறது. இதில் மலையக மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். புதுவருட தின சந்திப்பின் போது மலையக இளைஞர்களில் பலர் மாவீரர்களாக மரணித்திருக்கின்றார்கள் என்று பிரபாகரனே கூறியிருக்கின்றார்.

எதிர்காலத்தில், வேள்விக்காக கோயில்களில் வளர்க்கப்படும் ஆடுகள் போல் இளைஞர்கள் தொடர்ந்தும் பலியாகக் கூடாது. இது வரை இயக்க மோதல்களில் கொல்லப்பட்ட மலையக இளைஞர்கள், இயக்கங்களில் இருந்து மாவீரர்களானவர்கள்பற்றிப் பெற்றோருக்கே தெரியாது. மலையக சமூகம் இழப்பதற்கு ஒன்றுமில்லாத சமூகம், அவர்களிடம் இழப்பதற்கு உயிர்தான் மிச்சம். அதையும் பலிகொடுக்க எமது புதிய தலைமைகள் ஊக்கப்படுத்தக் கூடாது. இது மலையக மக்களைத் தவறாக வழிநடத்தும் செயலுமாகும்.

> **ஜீவாதாரப் பிரச்சனைகளுக்கு உரிய தீர்வையோ, வழிவகைகளையோ கொண்டிராது உணர்ச்சிவசப்படும் அரசியலைத் தொழிலாளர்கள் மத்தியில் உருவாக்குவதன் மூலம் இந்தச் சமூகத்தைத் தமது அற்ப அரசியல் நலன்களுக்காக அதள பாதாளத்திற்குக் கொண்டு சென்றுவிடும் கைங்கரியத்தில் யாரும் ஈடுபடாதிருப்பது இந்தச் சமூகத்திற்குச் செய்யும் பெரு நன்மையாக இருக்கும்.**

மலையக மக்களுக்கான கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், குடியிருப்பு, போக்குவரத்து, மின்சாரம் போன்ற அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலையில் அவற்றுக்காகவே மக்கள் போராட வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். உதாரணமாக, மலையக மக்கள் விழிப்புணர்வுள்ள சமூகமாக மாற்றமடைய வேண்டுமானால் கல்வி அறிவுள்ள சமூகமாக மாறவேண்டும். அதை அடைய வேண்டுமானால் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் மலையக சமூகம் உள்ளது. பெருமளவிலான ஆசிரியர் பற்றாக்குறை தொடர்கின்றது. உயர் கல்வியை எமது சமூகத்தின் விகிதாசாரத்துடன் ஒப்பிடுகையில் விரல் விட்டு எண்ணக்கூடிய தொகையினர்தான் பல்கலைக் கழகம் சென்றுள்ளனர்.

இலங்கையின் சராசரிக் கல்வி வளர்ச்சியோடு ஒப்பிடுகையில், இச்சமூகம் பின்தங்கிய நிலையில் தான் இருக்கிறது. குறிப்பிட்ட பாடங்களில் மாணவர்கள் திறமையான நிலையை எட்ட வேண்டுமானால் தகுதியுடைய ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். பின்தங்கிய பிரதேசம் என்ற வகையில் கல்வி வாசனை உருவாக தனியான பல்கலைக் கழகம் உருவாக்கப்பட வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

கணனித் துறையிலும், தொழில்நுட்பத் துறையிலும் கல்லூரிகள் உருவாக்கப்படல் வேண்டும். வெறுமனே கட்டடங்கள் மாத்திரம் எழுப்பப்பட்டால் போதாது. அதேபோல் சுயமான பொருளாதார கட்டமைப்பு இல்லாத நிலையில் தோட்டத் தொழிலாளிகளாகவே பரம்பரை பரம்பரையாக வாழ விதிக்கப்பட்ட இந்த துரதிஷ்டசாலிகளுக்கு மாற்று வழிதான் என்ன?

கல்வியிலும் பொருளாதாரத்திலும் சுயமான நிலையில் வாழும் ஒரு சமூகம் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதற்கான வலுவான நிலையைக் கொண்டிருக்கும். மலையக மக்கள், தாங்களும் இந்த நாட்டினது தேசிய இனமாக வளர்ச்சியடைவதற்கான கட்டுமானங்கள் உருவாக்கப்படவேண்டும்.

ஜீவாதாரப் பிரச்சனைகளுக்கு உரிய தீர்வையோ, வழிவகைகளையோ கொண்டிராது உணர்ச்சிவசப்படும் அரசியலைத் தொழிலாளர்கள் மத்தியில் உருவாக்குவதன் மூலம் இந்தச் சமூகத்தைத் தமது அற்ப அரசியல் நலன்களுக்காக அதள பாதாளத்திற்குக் கொண்டு சென்றுவிடும் கைங்கரியத்தில் யாரும் ஈடுபடாதிருப்பது இந்தச் சமூகத்திற்குச் செய்யும் பெரு நன்மையாக இருக்கும்.

இதையெல்லாம் கவனத்தில் கொள்ளாத மலையகத் தலைவர்கள் சிலர் தமிழின உரிமைக் கோஷம் என்று சம்பந்தமில்லாமல் பொங்கி எழுவதனால் தொழிலாளர்களுக்கு எந்தவித நன்மையும் ஏற்படப் போவதில்லை என்பதை மக்கள் சிந்திக்கத் தவறக்கூடாது.

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களைப் போல் மலையக மக்களும் மொழி ரீதியாக ஒன்றுபட்டிருந்தாலும் இரு பிரதேச மக்களுக்கிடையில் தனித் தன்மை வாய்ந்த பிரச்சனைகள் இருக்கின்றன. அவை தனித்துவமான வழிகளிலேயே தீர்வு காணப்படல் வேண்டும். தற்போதைய சூழலில் பொறுப்பற்ற குறுகிய நலன்களை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையை மலையக மக்களுக்குள் திணிக்க முற்பட்டால் அது அடுத்தவொரு பேரழிவுகளுக்குள் கொண்டு போய்விடும் என்பதில் சந்தேகமில்லை.

இன ரீதியான அச்சுறுத்தல் என்று குறிப்பிடும் பொழுது யுத்தத்தின் மூலமும், இன வன்முறைகள் மூலமும், குடியேற்றத்தின் மூலமும் அதனைச் சந்திக்கிறார்கள்.

வாக்குரிமை பெற்ற குறுகிய காலத்திலேயே அந்த வாக்குகளை அவர்களே அபகரித்துக் கொள்ளுதல், அபிவிருத்தி என்ற போர்வையில் சில ஆயிரம் பேருக்கு (தகுதியில்லாதவர்களுக்கு) வேலை வாய்ப்பு பெற்று கொடுத்து அடுத்த சமூக முன்னேற்றத்தை உருக்குலைப்பது, பள்ளிக்கூடக் கட்டடங்கள் இருந்த போதும் தகுதிவாய்ந்த ஆசிரியர்களை நியமிக்க முயற்சிக்காமல் கல்வியில் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே வைத்திருத்தல். இதன் மூலம் ஓரளவு கல்வியுடனான தொழிலாளர்களாக நிரந்தரமாக வைத்திருத்தல், சில நூறு பேருக்குக் கிராம சேவகர், பொலிஸ் பதவி, சில ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுப்பதன் மூலம் பிரச்சினைகள் மக்கள் மத்தியில் இருந்து எழுவதைத் தணித்தல், இவ்வாறான மறைமுகமான, வஞ்சகமான பாரபட்சங்கள், புறக்கணிப்புக்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு தொடர்ந்தும் தமிழினத் தலைவர்கள் என்று சுயபிரலாபம் செய்பவர்களுக்குப் பலியாகி விடாமல் எம்மை நாமே பாதுகாத்துக் கொண்டு யதார்த்தமாகவும், தீர்க்கதரிசனமாகவும் செயற்படக்கூடிய தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்பவேண்டிய வரலாற்று அவசியம் எழுந்துள்ளது. ■

**-பெரியசாமி-**

# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் **குளியலறை உபகரணங்களை**

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்



**Naveen Ceramic** No.307, George R.De Silva Mawatta, Colombo-13. Sri Lanka.

Tel : 345197-8 Fax : 335637

Dir : 543256 Mobile : 077-383313

*E-mail- naveence@srilanka.net.*

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.


# காட்டுப் பகுதி ஊடாகப் புதிய வீதி நிர்மாணம்

**"தென் தமிழீழம்"** எனப் புலிகள் அழைக்கும் கிழக்கு மாகாணத்தை வடபகுதியுடன் இணைக்கும் தரை வழிப்பாதையொன்றைக் காட்டுப் பகுதிகளுக்கூடாக அமைப்பதில் புலிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, பொலனறுவை, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களின் எல்லைப் பகுதிகளில் இராணுவம் நுழைய முடியாத அடர்ந்த காட்டுப் பகுதிகளுக்கூடாகப் புலிகள் அமைக்கும் புதிய நெடுஞ்காலை செல்கிறது.

புலிகளின் புதிய காட்டுப் பாதை நிர்மாணப் பணிகளுக்காக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள பொதுமக்களின் வாகனங்கள் கட்டாய ஒழுங்குமுறையில் பெறப்படுகின்றன. சமீபத்தில் ஓட்டமாவடி முஸ்லிம் விவசாயிகளின் ஏராளமான உழவு இயந்திரங்களும் வீதி நிர்மாணப் பணிகளுக்காகப் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டன.

தற்போதுள்ள கொழும்பு-மட்டக்களப்பு, திருகோணமலை- மட்டக்களப்பு நெடுஞ்சாலையில் படையினரும், பொலிஸாரும் நிலை கொண்டுள்ளனர்.

புலிகள் நிர்மாணிக்கும் தற்போதைய காட்டுப் பாதை மூலமாகப் புலிகள் வடபகுதியிலிருந்து தென் தமிழீழத்திற்குப் படையினரின் கண்களில் படாது செல்ல முடியும். இந்த வீதி அதிக அகலமானதும் நவீனமானதுமான நெடுஞ்சாலையாக நிர்மாணிக்கப்படுகிறது.

புலிகளின் பகுதிகளிலுள்ள வீதிகளின் நிர்மாணப் பணிகளுக்காகக் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலிஸாஹிர் மௌலானா 'நோறாட்' நிறுவனத்தினூடாகப் பெருமளவு நிதியினைப் பெற்றுக் கொடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

# தமிழர்களின் பண்பாட்டு

## விழுமியங்களைப் பாதுகாப்போம்

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்தி களியாட்ட நிகழ்வுகள், உல்லாசப் பயணங்கள், விளையாட்டு, இன்னிசை நிகழ்ச்சிகள் எனும் போர்வையில் தமிழ் மக்களின் பண்பாட்டைச் சீர்குலைத்து சிந்தனையைச் சிதறடித்து, தேசப் பற்றுணர்வை உடைத்துவிடப் படையினர் முனைந்து நிற்கிறார்கள்.

இவ்வாறு "தமிழர்களின் கலாசார பண்பாட்டு விழுமியங்களை இறுதிவரை கட்டிக் காப்போம்" எனும் தலைப்பில் புலிகள் இயக்கத்தின் மட்டக்களப்பு, அம்பாறை அரசியல் பிரிவு வெளியிட்டுள்ள பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"தடை செய்யப்பட்ட ஒளி நாடாக்களைக் காண்பித்து, பாலியல் சேஷ்டைகளைச் செய்து, விளையாட்டு நிகழ்ச்சிகளில் மது பானங்களும் பரிசாக வழங்கப்படுகின்றன. இளம் சந்ததியினரின் சிந்தனையைத் திசை திருப்பி எமது சமூகக் கட்டமைப்பையே உடைத்து, கல்வியையும், கலாசாரத்தையும், பண்பாட்டுக் கோலங்களையும் அழித்து விடத் திட்டமிடுகிறார்கள்.

சமாதான நல்லுறவு என்ற போர்வையில் தமிழ் மக்களின் தேசப்பற்றுணர்வைச் சீர்குலைக்கும் இத்தகைய தந்திரங்களை மக்கள் உணர்ந்து விழிப்பாக இருந்து எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்" என்று புலிகள் விடுத்துள்ள துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அதிபர் தடுத்து வைப்பு!

4 ஆண்பிள்ளைகளில் ஒருவரைப் போராட்டத்திற்கு ஒப்படைக்குமாறு விடுக்கப்பட்ட கட்டளையை பாடசாலை அதிபர் ஒருவர் உதாசீனம் செய்ததால் அவர் கடந்த மூன்று வாரங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு-சந்திவெளியிலுள்ள பாடசாலையொன்றின் அதிபருக்கே இக் கதி நேர்ந்துள்ளது. "வீட்டுக்கொரு போராளி" என்ற கோரிக்கைக்கு அமைவாக மேற்படி அதிபரிடமும் அவரது ஆண்பிள்ளைகளில் ஒருவரைத் தருமாறு பலமுறை உத்தரவிடப்பட்டிருந்தது. எனினும் அவர் இதற்கு உடன்படாததால் கடத்திச் செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

குடும்ப உறவினர்கள் சென்று தடுத்து வைக்கப்பட்டுள்ள அதிபரைப் பார்வையிடவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த விடயம் கண்காணிப்புக் குழு மற்றும் சர்வதேச அமைப்புக்களுக்கும் தெரியாத வண்ணம் இது தனிப்பட்ட விவகாரம் என்று காரணம் கூறப்பட்டுள்ளதாம்.


## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**

142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.

சந்தைக்கு எதிர்ப்பக்கமாக

Tel: 074-519754

## சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கான திருமண வைபவங்களுக்கான சேவை

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையில் சமய முறைப்படி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மற்றும் பதிவுத் திருமணம் தங்குமிட வசதி, தங்குமிடங்களில் சமைத்து சாப்பிடும் வசதி, போக்குவரத்து வசதிகள் அனைத்தும் சிறந்த முறையில் குறைந்த செலவில் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: சிங்கப்பூர்
N.Thanga T.Prince,
No. 5, Starlight Road, Singapore- 217758,
Opposite Rangoon Road,
Tel: 2974924-2978619, 90466925 H.P: 98501222

தொடர்பு: இலங்கை
P.Rajan
H.P: 072-840708, 348349.

## Wedding

PHOTOGRAPHER

No. 27/23A, Madampitiya Road, colombo-15.

Stills Vinoth 077-321345

TEL: 527933

## சிங்கப்பூரில் தங்குமிடவசதி

சிங்கப்பூரில் திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வருவோருக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். இலவச விமான நிலைய வாகன வசதி, சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.

விபரத்திற்கு:-

**LINGAM WEDDING SERVICE**

10, Anson Road, # 15-14 International Plaza, Singapore 079903

எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி எண்:

அப்பு: 0065-975 14 941

e-mail: lingam_wedding@hotmail.com

श्रीविष्णुसहस्रनामस्तोत्रम्

## MEDITATION YOGA POWER

ஆயுர்வேதத்தில் சோதிடம் கூறும் மாந்திரீக மருத்துவம்
தூரதேச மந்திர உட்சாடன வசிய ஆஹர்ஸ்ண பிராண தியானயோக ஆண்மீக அலைகள் (Cosmic Vibration) மருத்துவம்




MAHARISH MAHESHYOGI

MY GURU

ஹிமயமலை மஹாரிஷிகளின் குருசிஷ்ய மஹாமாந்திரீக மருத்துவ நிபுணர் ஜேர்மன் ஹோமியோபதி சீன அக்குப்பங்சர் இந்திய சித்த ஆயர்வேத மருத்துவ மனோதத்துவ யோகசிகிச்சையாளர்
(டாக்டர் "மந்திரயோகி")
YOGI.DR. T. MYLVAGANAM
R.H.M.D.- D Acu-(இலங்கை) P.I.S.M (இந்தியா)
Registered by Ministry of Health S.L.M.C. NO.061

விதியினால், அல்லது சதியினால் பிரிந்த காதலர்கள், கணவன்-மனைவி குடும்பங்கள் எங்கிருந்தாலும் ஒன்று சேர, வெறுப்பவர்கள் வேண்டியவர்கள் வந்து உறவாக உதவிபெற,தகாத ஆண் பெண் உறவை போதைவஸ்தை மறப்பிக்க, தீயசக்திகளினால் ஏற்பட்ட தீராத உடல் நோய் மனநோய் பிரச்சனைகளைத் தீர்த்து, எத்துன்பங்களும் அணுகாமல் உடல், வீடு வளவு, வியாபார நிலையங்கள்,வாகனங்களை காவல் செய்ய காதல் திருமணம் பெற்றோர்கள்தடையாக இருப்பவர்களின் சம்மதங்களுடன் நிறைவேற கல்வி, தொழில், வியாபாரம் வெளிநாட்டுப் பிரயாணம் வேறுகாரியத்தடைகள் ஏற்படாமல் நினைத்த செய்கின்ற போகின்ற காரியங்கள் வெற்றிபெற,வேறு நன்மையான காரியங்களுக்கு தீங்கில்லாத தெய்வீக மஹா மந்திர யந்திர வசிக வைத்தியங்கள் செய்து கொள்ள வரமுடியாதவர்கள் கடல் கடந்த வெளிநாட்டவர்கள் பதிவுத் தபால் பக்ஸ்,தொலை பேசி மூலம் தொடர்புகொண்டு மனோதத்துவ மாந்திரீக ஆன்மீக மருத்துவ அறிவுரை களோடு எல்லா மதத்தினர்களுக்கும் ஏற்ற இஷ்ட தெய்வ அனுக்கிரஹ மந்திர சித்தியோடும் யோகசக்தியோடும் செய்யப்படும் புனித பரிகார பொருட்களை துரித விசேட தபாலில் பெற்றும் தூரதேச ஆகாய அஹர்ஸ்ண மந்திர உட்சாடன பிராண தியானயோக ஆண்மீக அலைகள் மருத்துவ முறைப்படியும் உடன் நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.இதுவரையில் இப்புனித சேவையை அறியாத அவசியம் தேவைப்படும் வெளிநாட்டில் இருப்பவர்களின் நன்மைக்காக குருசக்தி நிலயத்தின் பிரதம குரு யோகி டாக்டரிடம் பலன்கள் பெற்ற பல்லாயிரக்கணக்கான அன்பர்களில் சுவிஸ் நாட்டில் இருக்கும் ஓர் அன்பரின் அனுசரணையுடன் இந்த உண்மைகள் வெளியிடப்படுகின்றன.



GURUSACKTHY CENTER
KALLADY - BATTICALOA(P.O)
(SRI LANKA)

குரு சக்தி நிலையம்
இராமகிருஷ்ணபுரம் றோட்
கல்லடி மட்டக்களப்புP.O
ஸ்ரீலங்கா

ரெலிபோன் - பக்ஸ்
உள்நாட்டவர்களுக்கு 065-24872 காலை 8 இருந்து இரவு 9 மணி வரை
வெளிநாட்டவர்களுக்கு 00946524872 காலை 8 இருந்து இரவு11 மணி வரை
கடல் கடந்த வெளிநாட்டவர்களுக்கான விஷேட சேவை
Registered by Ministry of Hindu Religious & Cultural Afairs.

## தெய்வீக மருத்துவம்

**National Theiveega Sakthy Foundation**
**International Interregious Traditional & Medical & Divine Service**

சர்வதேச சமூக மாந்திரிக மருத்துவ தெய்வீக சேவை
Government Approved Charity Regd No: - HA/4/BT/219

டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P, J.P. (SL)

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த, காதலர்கள் கணவன் மனைவி ஒன்று சேர. வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீய பழக்கம், மனிதத் தீமை, மருந்திடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைச்சக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்)

Theiveegam SriLanka
Head Office
Colombo 04.

Tele / Fax:065-24825 - 078 610098
வெளிநாட்டவர்களுக்கு,
Tele / Fax: - 0094 78610098

மட்டக்களப்பிலும் சந்திக்கலாம்

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
" DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE "

## மலையாள மாந்திரிக வசியம்


உங்கள் வாழ்க்கையில் தொடர்ந்தும் தோல்வியா? நிம்மதியில்லையா? உங்கள் ஆசைகள் நிறைவேறவில்லையா? இதோ உங்களுக்கு ரிஷிகள் கையாண்ட மாபெரும் மலையாள மாந்திரிக சக்தி கவசம் என் கையில் உண்டு. கணவன்,மனைவி பிணக்குத் தீர்ந்து சுகபோக வாழ்வு பெற, பிரிந்த காதல் ஒன்று சேர, காதல் கைகூட, தீரா நோய் தீர, குழந்தைப் பாக்கியம் கிட்ட, திருமணம் நடக்க, கல்வியில் பெறுபேறு கிட்ட, குபேர வாழ்வு பெற, அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகக் கணிப்பு என்றுமே பிழைத்ததில்லை. நடப்பது, நடக்கப்போவது, நடக்க இருப்பது, இன்று,இந்த மாதம், இந்த வருடம் உங்களுக்கு எப்படி எனத் தெரிந்து அறிந்து செயல்பட ஜாதக ரீதியாகவும், கைரேகை ரீதியாகவும், காண்ட அடிப்படையிலும் அன்றன்றாட நிகழ்வுக்குத் தக்கவாறு அனுசரித்துச் செயற்பட மலையாள மாந்திரிக சித்தர் டாக்டர் P.K. சாமி (J.D.G.A.N) J.P அவர்களைச் சந்தியுங்கள். வெளிநாட்டவர்களுக்கு விஷேச சலுகை உண்டு. மாந்திரிக சக்திக்குப் பெருமிதம் எமது 39 வருட சேவையே! இவ்வரிசையில் நாம் ஒருவரே!

**இனி என்னைப் பற்றி**

அன்றன்றாடு அருள் சக்தி வழங்கிவரும் அம்மன் துர்க்கையின் அருள் அவ்வப்போது எனக்குக் கிடைக்கின்றது. இவைகளை ஒட்டியே இந்தச் சோதிட மலையாள மாந்திரிக நிறுவனம் ஒரு மாபெரும் P.K.SAMYASSOCIATE (PVT) LTD வரையறுக்கப்பட்ட நிறுவனமாகச் செயல்படுகின்றது. இதையொட்டியே வாங்கும் பணத்திற்கு ரசீது வழங்குகின்றோம்.

★ அதி விசேஷமாக வெளிநாட்டவர்களுக்கு ஏனோதானோ என்றில்லாது அவர்களின் எண்ணங்களை எண்ணியவாறு செயல்திறனைக் காட்டியதனாலேயே அவர்களின் ஆயிரக்கணக்கான ஆசீர்வாதக் கடிதங்கள் என்னிடம் இருக்கின்றன.

★ உண்மைச் சேவை என்பதால் எனக்குப் பேராசிரியர் பட்டம் தந்தார்கள். கலாநிதி பட்டம் கிடைத்தது. அகில இலங்கை சமாதான நீதவானாக நியமித்தார்கள். கருணாகர பூசணம் பட்டம் கிடைத்தது. பங்களாதேசத்தில் சோதிட ஆராய்ச்சித்துறையில் என்னை அங்கத்தவராகச் சேர்த்துக்கொண்டார்கள். இன்னும் எத்தனை எத்தனையோ பட்டங்கள். இதற்குக் காரணம் எனது உண்மையான, மனச்சாட்சிக்கு விரோதமற்ற சேவையே! இனி உங்கள் குறை என்ன?



**இத்துறையில் விசா, மாஸ்டர் கார்ட் வசதி மற்றும் இன்ரர்நெட், வெப் சைட், ஈ மெயில், ஃபக்ஸ் வசதிகள் எம்மிடம் மாத்திரமே உண்டு.**

இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை. நுவரெலியாவில் மாத்திரமே கிளைக் காரியாலயம் உண்டு.

**கொழும்பில்**
162, கொட்டாஞ்சேனை வீதி,
மேபீல்ட் வீதி
(லிட்டில் ஃப்ளவர் பாலர் பாடசாலைக்கு முன்),
கொழும்பு-13.
தொலைபேசி: 466271, 466571, 342463, 466620, 431137, 466820
தொலைநகல்: 00941-344831

**நுவரெலியாவில்**
33, டெய்லி ஃபெயார் கொம்பிளெக்ஸ்,
கண்டி வீதி, நுவரெலியா.
தொலைபேசி: 052-22508, 35097, 23093, 23336, 23570
தொலைநகல்: 00945-235097
ஈ.மெயில்: drpksamy@sltnet.lk
வெப் சைட்: www.imexpolanka.com/drsami

அலசுவது-இராஜதந்திரி

# குட்டையைக் குழப்பும் விஷமச் சக்திகள்

ஆயுதங்களின் வெடி ஓசை கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக வடக்கு-கிழக்கில் ஓய்ந்து காணப்படுகின்றது. மக்கள் கெடுபிடிகளின்றி இருந்து வரும் இத் தருணத்தில், வடக்கு-கிழக்கில் புதிய வடிவில் அச்சுறுத்தல்கள் தலைகாட்டுவதையே அவதானிக்க முடிகின்றது.

புலிகளுக்கும், பிரதமர் ரணில் அரசாங்கத்துக்கு மிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டதன் முக்கிய நோக்கம், வடக்கு-கிழக்கில் சுமூக நிலையைத் தோற்றுவிப்பதாகவே இருக்கின்றது.

இச் சுமூக நிலை படைத் தரப்புக்கும், புலிகளுக்குமிடையே மட்டுமல்லாது, வடக்கு -கிழக்கில் இருந்து வரும் அனைத்துத் தரப்புகளுக்குமிடையே விரிவான முறையில் ஏற்பட வேண்டுமென்பதே எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

ஆனால் வடக்கு-கிழக்கில் ஆங்காங்கே ஏற்பட்டு வரும் மோதல்கள் வடக்கு-கிழக்குப் பிரச்சனையை ஒரு புதிய கோணத்தில் திசைதிருப்பி விடுமோவென்ற எண்ணத்தையே ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

வடக்கு-கிழக்கில் தமிழ்- முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையினராக இருந்து வருகின்றனர். ஆனால், கடந்த காலங்களில் இம் மக்களிடையே பிளவுகளையும், பிணக்குகளையும் ஏற்படுத்துவதன் மூலம் வடக்கு-கிழக்கு மக்களின் அரசியல் அபிலாசைகளை மலினப்படுத்த பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் காரணமாகப் பல்வேறு பிரச்சனைகள் வடக்கு- கிழக்கின் தமிழ், முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்டிருந்தன. தமிழ், முஸ்லிம் மக்கள் தமிழையே தாய்மொழியாகக் கொண்டு, வடக்கு -கிழக்கில் அனைத்து வளங்களையும் தம்மிடையே பகிர்ந்து வருவோராக இருக்கின்றனர்.


ஆனால், துரதிஷ்டவசமாக அவ்வப்போது வடக்கு - கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களிடையே ஏற்படும் பிரச்சனைகள், இரு தரப்பினருக்குமிடையே பல்வேறு விதத்திலுமான பாதிப்புகளையே ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

வடக்கு - கிழக்கில் வாழ்ந்து வரும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையிலான தொடர்புகள் நெடுங்காலப் பழமை வாய்ந்தவை. மத ரீதியாக முஸ்லிம்கள் வேறுபட்டிருந்தாலும் மொழி ரீதியாக அவர்கள் தமிழையே தாய்மொழியாகக் கொண்டிருக்கின்றனர்.

இலங்கையின் இனப் பிரச்சனை முஸ்லிம் மக்களையும் வெகுவாகவே பாதித்ததாகவும் இருக்கின்றது. வடக்கு - கிழக்குப் பிரச்சனைக்கு எட்டப்படும் தீர்வு முஸ்லிம் மக்களுக்கும் உரிய பலனைத் தரவேண்டியதாகவே இருக்கின்றது.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் என்ற ரீதியிலும், தமிழ் மக்களுக்கு அடுத்தபடியாக இருந்து வருகின்ற ஒரு சிறுபான்மை சமூகத்தினர் என்ற வகையிலும் இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சிகளில் முஸ்லிம் மக்களினதும் பங்களிப்பு நிறையவே இருக்க வேண்டியதாகின்றது.

இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலும் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழ்ந்து வருகின்றனர். ஆனால், வடக்கு-கிழக்கு முஸ்லிம் மக்கள், நாட்டின் ஏனைய பகுதியில் இருக்கும் முஸ்லிம் மக்களைப் போலன்றி கடந்த இரு தசாப்த கால இனப்பிரச்சனையின் தாக்கத்தை வெகுவாகவே அனுபவித்தவர்களாகவும் இருக்கின்றனர்.



இந் நிலையில் வடக்கு-கிழக்கில் ஓர் அரசியல் தீர்வைக் காண்பதற்கான பயணத்தில் முஸ்லிம் மக்கள், தமிழ் மக்களிலிருந்து வேறுபடுத்தப்பட முடியாதவர்களாகவே இருக்கின்றனர்.

கடந்த வாரங்களில் மூதூர்ப் பிரதேசத்திலும், அதனைத் தொடர்ந்து கிழக்கிலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்தவர்களிடையே மோதல் நிலை ஏற்பட்டிருந்தது.

இதில் வர்த்தக நிலையங்கள், மற்றும் பொதுச் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டதுடன், இரு தரப்புக்குமிடையே கொந்தளிப்பு நிலை ஏற்பட்டிருந்தது.

ஆயினும் இரு தரப்பையும் சேர்ந்த பெரும்பாலான மக்கள் வெளிப்படுத்திய பொறுமை, சகிப்புத் தன்மை என்பவை காரணமாக நிலைமை மோசமடைவது தவிர்க்கப்பட்டிருந்தது.

ஒரு பரந்துபட்ட சமாதான சூழ்நிலை கொண்டு வரக்கூடிய அனுகூலங்களை உணர முடியாத விஷமச் சக்திகளே கிழக்கில் கடந்த வாரங்களில் அடாவடித்தனங்களில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

மூதூர்ப் பிரதேசத்தில் புலிகளின் அலுவலகமொன்று தாக்கப்பட்டதையடுத்து கிழக்கில் பிரச்சனை தோன்றியிருந்தது. இதன் பின்னர் ஏனைய பகுதிகளுக்கும் விரிவடைந்திருந்தது.

மூதூர்ப் பிரச்சனை தோன்றுவதற்கு முன்பதாக வடக்கிலும் வேலணைப் பகுதியில் புலிகளின் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இத் தாக்குதலில் படைத் தரப்பைச் சேர்ந்தோர் ஈடுபட்டிருந்தமையும் விசாரணைகளின் போது தெரியவந்திருந்தது.

கடந்த பெப்ரவரி மாதம் புலிகளுக்கும், பிரதமர் ரணில் அரசுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது முதல் சமரச முயற்சிகளைக் குழப்பும் சக்திகளும் மிக விழிப்பாகவே இருந்து வருகின்றன.

இந் நிலையில் இச் சக்திகளை இனங்கண்டு அவற்றின் பிடியில் சிக்காதிருப்பதன் மூலமே தீர்வு முயற்சிகளுக்கான ஆரோக்கியமான சூழலொன்றைக் கட்டியெழுப்ப முடியும்.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை வடக்கு - கிழக்குப் பிரச்சனைக்குத் தீர்வொன்று காணப்பட வேண்டியதன் அவசியம் பெரிதும் உணரப்பட்டுள்ளதையே கடந்த ஏழு மாத காலத்தில் நடந்து முடிந்த பொதுத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஆனால், இனப்பிரச்சனைத் தீர்வுக்கான களமாக இருக்கும் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் புதியதோர் கோணத்தில் பிரச்சனைகள் தோன்றுவது விசனத்துக்குரியதாகவே இருக்கின்றது.

சர்வதேச மன்னிப்புச் சபையைச் சேர்ந்த உயர் மட்டக்குழுவொன்று அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தது.

இலங்கையின் கடந்த இரு தசாப்த கால யுத்த நிலைவரத்தைச் சர்வதேச மன்னிப்புச் சபை இடையறாது கண்காணித்து வந்திருந்தது.

பல்வேறு விதத்திலும், மிக மூர்க்கத்தனமான முறையிலேயே வடக்கு-கிழக்கில் அடிப்படை மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்ததை அவதானிக்க முடிந்தது.

மக்கள் வாய் மூடி மௌனிகளாக இருப்பதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியாத நிலையே கடந்த காலங்களில் நிலவியிருந்தது.


எனவே இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து எச்சரித்து வந்த சர்வதேச மன்னிப்புச் சபையின் உயர்மட்டக் குழு கடந்த வாரம் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்குப் பயணம் செய்ததோடு, புலிகள் தரப்பையும், கொழும்பில் அரச தரப்பையும் சந்தித்திருந்தது.

ரணில் - பிரபா புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின்னர் வடக்கு - கிழக்கில் இருந்து வரும் நிலைமையை ஆராய்ந்த சர்வதேச மன்னிப்புச் சபைப் பிரதிநிதிகள், கடந்த காலத்தில் இருந்ததை விட தற்போது மிக முன்னேற்றகரமான விதத்தில் அடிப்படை மனித உரிமைகள் பேணப்படுவதாகவும், ஒரு பீதியற்ற சூழல் வடக்கு - கிழக்கில் தோன்றி வருவதாகவும் தெரிவித்திருந்தனர்.

முள்ளின் மீது வீழ்ந்த சேலையை எடுக்கும் பாங்கிலேயே வடக்கு - கிழக்குப் பிரச்சனை அணுகப்பட வேண்டியதாக இருக்கின்றது.

இது விடயத்தில் நிதானம் தவறி, குழப்ப நிலைகளுக்கு இடமளிக்கும் பட்சத்தில் மிகவும் பாரதூரமான விளைவுகளே தோற்றம் பெறுவதாக இருக்கும்.

## அதிரடி அய்யாத்துரை



**எங்கட புனர்வாழ்வு அமைச்சு** வடக்கு கிழக்கு யுத்தத்தில இடம் பெயர்ந்த அகதிகளின்ர விபரம் கேட்டு ஒரு முழுப்பக்க விளம்பரம் செய்யுது பாத்தியளோ? பாத்திருக்க மாட்டியள். ஏனெண்டால் அந்த விளம்பரம் சிங்களப் பேப்பரில மட்டுந்தான் வருகுது. தமிழ் அகதிகள் பற்றிக் கேக்கிற விபரத்தக்கூட சிங்களப் பேப்பரில கேக்கிற அளவு இன்ரலிஜன்ரான ஆக்கள வைச்சுக் கொண்டு சிறுபான்மையினத்தவற்ற மனக்குறையளைத் தீக்கிற தெண்டால் முடிஞ்ச காரியமோ?

**தலைநகர்** தமிழ்ச்சங்கம் நடத்தின தலைமைத் தெரிவு, தலைமைகளைத் தெரிவு செய்ய நடந்ததா கதிரைகளைத் தெரிவு செய்ய நடந்ததாவெண்டு சந்தேகமுங்கோ. வாக்கெடுப்பில கைக ளுக்குப் பதிலா, கைகள் தூக்கிப் பிடிச்சிருந்த கதிரைகளத்தான் எண்ண வேண்டியிருந்துச்சாம். பதவியெண்டவுடன படிச்சவைக் குள்ள கூட ஊர்வாதம், குழுவாதமெல்லாம் புகுந்து படுத்திற பாடு.... ம்..... தமிழ் வாழ்க!

**அரசியல்வாதிகள்** சிறையில அடைக்கப்படுறதும் சிறையில இருந்தவை அரசாட்சிக்கு வாறதும். வாஸ்தவமெண்டக்க சிறைக் கைதிகள் ஒரு சேஞ்சுக்கு சிறையதிகாரிகளைக் கைதிகளாக்கி தாங்கள் சிறையதிகாரிகளாகியிருக்க ஆசப்பட்டதில என்ன தப்பு? உயிரோட பிடிபட்டவன் பொலிசுக்குப் போனால் பிணமா வாறான். பிணத்தை ஒருக்கா பொலிசுக்கு அனுப்பிப்பாத்தால் உயிராய் வருமோ என்னவோ? நாடு தலைகிழாகிக் கிடக்குது. நாங்களும் தலைகிழா நிண்டால்தான் இப்ப சீவிக்கலாம் போல கிடக்குது.

**யாழ். ஸ்ரான்லி** வீதியில இருக்கிற தன்ர மாகா லட்சுமிகரமான கட்டிடத்தின்ர மேல்மாடிய இருபத்தையாயிரத்துக்கு லேக்ஹவுஸ் தாரற்ர தலையில வாடைக்குக் கட்டிவிட்டிட்டார் அந்த மாகா கெட்டிக்கார ஈஸ்வர அமைச்சர். சமாதானப் பிழைப்பு எண்டது இதுதானோ...?

**தமிழரசுக்கட்சிக்கு** புத்துயிர் குடுக்கிறது துரோகம், இதை எவராலும் மன்னிக்க முடியாதெண்டு கூட்டணியின்ர புதுத் தலைவர் சங்கரி, யாழ்ப்பாணத்து வரவேற்புக் கூட்டத்தில முழங்கி யிருக்கிறார். முந்தியும் இவை துரோகம், மன்னிக்க முடியாதெண்டு முழங்கினதாலதான் 'டப் டப்' தண்டனைகள் துரையப்பாவில துடங்கி இவையின்ர தலைவர் அமிர்தலிங்கத்துக்கும்கூட தலை விதியாய் முடிஞ்சது. கூட்டணிக்குத் தலைமை தாங்க யாருமில்லாத தாலதான் தன்னைத் தெரிவு செய்திருக்கிறதாயும் பெருமை பேசியிருக்கிறார். அதுசரி கூட்டணிக்கு தலைமை செயலாளரின்ர கையிலயெல்லோ? சம்பந்தமானவர் என்ன சொல்லப்போறார்?

**இடைக்கால** நிர்வாகத்தை எடுக்கிறதெண்டால் புலிகள் தேர்தலில நிக்க வேணுமெண்டிறார் வெளிநாட்டமைச்சர் டிரோன். பிறகு எதுக்காம் பேச்சுவார்த்தை? இது நடக்கிற கதைதான் போ!

**மாவனெல்லைக்** கலவரத்தில வீரம் பேசி அரசையே கவிட்ட ஹக்கீம் இப்ப கிழக்கில மூண்ட கலவரத்தில என்ன செய்யப் போறாரெண்டுதான் எல்லாரும் பாத்தபடியிருக்கினம். மாவனெல்லைக்கே இன்னும் நஷ்டஈடு கிடைக்கேல்ல. இதுக்கு எப்பதான் கிடைக்கப் போகுதோ!

**கூட்டமைப்பில** எம்பி பதவி கிடைக்குமெண்ட 'பிரேமையில' காத்திருந்த புரட்சிகரக் கட்சித் தலைவர் கடைசியா தேசியப் பட்டி யல் வெற்றிடத்திலயும் இடமில்லையெண்டு கண்டபிறகு 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்' எண்டிட்டுக் குடும்பத்தோட கனடாவுக்குக் குடிபெயர்ந்திட்டாராம். கூட்டமைப்புப் பற்றிக் கேட்டால் இப்ப அது ஒரு குத்துவெட்டு அமைப்பெண்டு அவரே பொருமித் தள்ளுறாராம். இதுதான் அனுபவ ஞானமோ..? 'பட்டபின்னாலே வருகின்ற ஞானம் யாருக்கும் உதவா'தெண்ட பாடல் வரிதான் ஞாபகம் வருகுதுங்கோ.

# நெடுமியெருந்து

பிறேஸில் என்றொரு நாடு இருப்பது கூடத் தெரியாத பலருக்கு அங்கே றொனால்டோ என்றொருவர் இருப்பது தெரிந்திருக்கும். சமீப நாட்களில் அந்தளவு பிரபலமாகப் பேசப்பட்டவர் றொனால்டோ. நசாரியோ உலகக் கிண்ணத்தை பிறேஸில் கைப்பற்றுவதற்குப் பெரிதும் துணை நின்றவர் றொனால்டோ. போட்டித் தொடரில் மொத்தமாக 8 கோல்களைப் போட்டுத் தங்கக் காலணியைத் தனதாக்கிக் கொண்டார். 1998ஆம் ஆண்டு பிரான்ஸில் நடந்த இதற்கு முன்னைய உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் பிரான்ஸிடம் படு தோல்வி அடைந்தது பிறேஸில் அணி. அன்று தனது திறமையை வெளிப்படுத்த முடியாமல் போனதையிட்டு அழுதுகொண்டு மைதானத்தை விட்டு வெளியேறிய றொனால்டோ 4 ஆண்டுகளின் பின்னர் ஜப்பானின் யோகோஹாமா நகரில் வெற்றி வீரனாகக் கையுயர்த்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார். இறுதிப் போட்டியின் போது றொனால்டோவின் ஆதரவாளர்கள் மகிழ்ச்சிப் பெருக்கில் குதூகலிப்பதையும் கீழே உள்ள படத்தில் றொனால்டோவையுமே காண்கிறீர்கள்.




## "உதைபந்தாட்டக் கடவுள் பிரேஸில்காரராக இருக்கலாம்"

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஜேர்மனி அணி விளையாடிய விதம் குறித்து அந்த நாட்டுப் பத்திரிகைகள் பல்வேறு விதமான கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

குறிப்பாக அணியின் தலைவர் ஒலிவர்கானின் சிறு தவறினால் பிரேஸில் வீரர் இலகுவில் கோல் ஒன்றைப் பெற்றுக் கொண்டதையிட்டு ஜேர்மன் பத்திரிகைகள் கவலை தெரிவித்துள்ளன.

போட்டியின் 67 ஆவது நிமிடத்தில் றிவால்டோ அடித்த பந்து ஜேர்மன் அணியின் கோல் காப்பாளரும், கெப்டனுமாகிய ஒலிவர்கானின் கைகளில் பட்ட போதும் அவரால் அதனைப் பிடிக்க முடியவில்லை. கைகளில் பட்டுத் தெறித்த பந்தை றொனால்டோ இலகுவாக கோல் கம்பத்தை நோக்கி அடிக்க பிரேஸில் அணிக்கு முதல் கோல் கிடைத்தது.

"அந்தப் பந்து ஒலிவர்கானின் கையில் அல்ல ஜேர்மன் உதைபந்தாட்டத்தின் இதயத்தில் பட்டுத் தெறித்தது" என்று ஜேர்மன் நாட்டின் முன்னணி நாளிதழ் ஒன்று எழுதியிருந்தது.

"உதைபந்தாட்டக் கடவுள் பிரேஸில்காரராக இருக்கலாம்" என்று தனது மன ஆதங்கத்தைச் சோகமாக வெளிப்படுத்தியிருக்கிறது ஜேர்மனியில் பரவலாக விற்பனையாகும் "பில்ட்" தினசரி.

"கானுக்கு என்ன நடந்தது?" எனக் கேள்வி எழுப்பியிருக்கும் மற்றொரு பெர்லின் பத்திரிகை "சிலவேளை உலக உதைபந்தாட்ட வரலாற்றில் மிகத் திறமையான கோல் கீப்பரான கான் மோசமான விபத்தொன்றுக்கு முகம் கொடுத்தார். அந்த விபத்தில் பாரதூரமான தண்டனை கிடைத்து விட்டது எனக் கூறியுள்ளது.

பிராங்ஃபோட்டில் இருந்து வெளியாகும் ரண்டிஷூ செய்தித்தாள் இறுதிப் போட்டியைச் சற்று ஆவேசமாக விமர்சித்திருந்தது.

ஜேர்மனியின் கனவை பிரேஸில் தூசு போல் தவிடுபொடியாக்கி விட்டது என அப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

"மனிதன் என்ற வகையில் ஒலிவர்கானின் தவறுகளை மன்னிக்கலாம்" எனப் பல பத்திரிகைகள் தெரிவித்திருந்தன.

'பிரேஸிலிடம் தோற்றது குறித்துக் கவலையடையத் தேவையில்லை. உலகில் உள்ள மிக்ச் சிறந்த உதைபந்தாட்டக்காரர்கள் அவர்கள். ஆதலால் நமது வீரர்கள் கௌரவமாக நாடு திரும்பலாம்' என மற்றொரு செய்தித்தாள் எழுதியிருக்கிறது.

இதற்கிடையில் ஜேர்மன் அணியின் பயிற்றுவிப்பாளர் ருடிவோலர் சகலராலும் பாராட்டப்பட்டிருக்கிறார்.

அணியில் உள்ள எந்தவொரு முன்னணி வீரரையும் அளவுக்கு அதிகமாகத் துள்ளிக் குதிக்க ருடிவோலர் அனுமதிக்கவில்லை. அனைத்து வீரர்களும் தம்மைப் பற்றிச் சிந்திக்காமல் அணியைப் பற்றிச் சிந்திக்கும் வகையில் ருடிவோலர் நெறிப்படுத்தினார்.

இவரது வழிமுறையைப் பின்பற்றினால் எதிர்வரும் செப்டம்பரில் நடக்கவிருக்கும் தேர்தலில் வெற்றிபெறுவது அதிபர் ஜெரால்ட் ஸ்ஷோ டேர்ட்டுக்குச் சிரமமாக இருக்காது" என்று ஒரு செய்திப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.






உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி ஆரம்பமானதோடு ஜப்பானின் சந்து பொந்துகளிலெல்லாம் 'உதைபந்தாட்டக் காய்ச்சல்' தீவிரமாக நிலவியது. உலகக் கிண்ண இறுதிப் போட்டி நடைபெறுவதற்கு முன்னர் ஜப்பான் தென்கொரிய சிறுவர்கள் மோதுகிறார்கள்.



பட உதவி: நெட் பிரியன்



இந்தோனேஷியத் தலைநகரான ஜகார்தா மருத்துவமனை ஒன்றில் வயிற்றால் ஒட்டிப் பிறந்த பெண் குழந்தைகள். இக் குழந்தைகள் சத்திரசிகிச்சை மூலம் பிரிக்கப்பட உள்ளனர்.

குவிந்து கிடக்கும் பணத்தை எப்படிச் செலவு செய்வது என்று தெரியாமல் சிலர் தவிக்கிறார்கள். இப்படியானவர்கள் வாழும் அதே பூமியில் கோடிக்கணக்கானவர்கள் பட்டினி அபாயத்தையும் எதிர்நோக்குகிறார்கள். இதுதான் உலகம்! படத்திலிருக்கும் அம்மணி அணிந்திருக்கும் மார்பக உள்ளாடையின் விலை 15 இலட்சம் டாலர்கள். நம் நாட்டு மதிப்பில் பதின்மூன்றரைக் கோடி ரூபா. அமெரிக்காவின் பிரபல நகை விற்பனையாளர்களான "மோடிஸ் ஜூவலர்ஸ்" நிறுவனம் இந்த அட்டகாசமான "பிரா" வை அறிமுகம் செய்திருக்கிறது. 500 கரட்டினாலான 1500 சுத்தமான வைரங்கள் இதில் பதிக்கப்பட்டுள்ளன.

# கண்கட்டு வித்தை

**ஜெ**ருசலேம் நகரில் இஸ்ரேலியர்கள் பயணம் செய்த பஸ் ஒன்றின் மீது பாய்ந்த பலஸ்தீன தற்கொலைதாரி குண்டை வெடிக்க வைத்ததில் கடந்த வாரம் 15 பேர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் நடைபெற்று 24 மணிநேரம் கழிவதற்குள் மேற்குக் கரை நகரங்கள் பலவற்றின் மீதும் இஸ்ரேல் படையெடுக்கத் தொடங்கியது. பலஸ்தீனத்தில் இது வழமையென்றாலும் இம்முறை கைப்பற்றிய இடங்களை நீண்டகாலத்திற்குத் தம் வசம் வைத்திருக்கப் போவதாக இஸ்ரேலிய இராணுவம் அறிவித்துள்ளது. மேற்குக் கரையில் பலஸ்தீன அதிகார சபையினால் நிருவகிக்கப்பட்டு வந்த பல நகரங்களின் அன்றாடப் பணிகளை இஸ்ரேல் இராணுவம் கொண்டு நடத்தும்.


நகரங்களுக்குள் புகுந்ததும் இஸ்ரேலியப் படையினர் செய்யும் முதற் காரியம் அங்குள்ள கட்டுமஸ்தான இளைஞர்கள் அத்தனை பேரையும் கைது செய்து கூண்டில் அடைப்பது தான். இந்த நகரங்களில் இருந்தே தற்கொலையாளி உருவாகி வருவதாகக் கருதும் இஸ்ரேல் "இவர் பலஸ்தீன போராளியாக இருக்கலாமோ" என்று யார் மீதெல்லாம் சந்தேகப்படுகிறதோ அத்தனை பேரையும் பிடித்து அடைக்கிறது.






கைது செய்யப்பட்டு கண்கள் கட்டப்பட்ட நிலையில் முகாம்களுக்குக் கொண்டு செல்லத் தயார் நிலையில் இருக்கும் பலஸ்தீனர்களைத்தான் இங்கே காண்கிறீர்கள். இது சில வாரங்களுக்கு முன்னர் காஸாவில் பிடிக்கப்பட்ட படம்.


# கையடக்கம் மட்டுமல்ல....

**சி**ன்னஞ்சிறிய வடிவில் அட்டகாசமான செல்ஃபோன்களை தாராளமாகப் பார்த்திருப்பீர்கள். கையடக்கத் தொலைபேசி சிறிதாகிக் கொண்டே வந்து... அதுவே ஃபெஷனாக மாறி இப்போது செல்ஃபோனின் அளவை வைத்து ஆளை அளவிடும் நிலை வந்துவிட்டது. செல்ஃபோன்களின் அபிவிருத்தியும் நவீனத்துவமும் மேல்நாடுகளில் நம்மை விடப் பல மடங்கு முன்னேறிவிட்டது. ஃபோனின் அளவை வைத்து மகிழ்ந்து கொள்ளும் நிலையில்தான் நாம் இன்னும் இருக்கிறோம். நாளுக்கு நாள் புதுமைகளுடனும் வியக்கத்தக்க விதங்களிலும் கையடக்கத் தொலைபேசிகள், வாயடக்கத் தொலைபேசிகள், கண்ணடக்கத் தொலைபேசிகள் என்று சந்தைக்கு வந்தவண்ணமுள்ளன. அந்த வரிசையில் சில புதிய வரவுகள் இங்கே காணப்படுகின்றன. கையுறைகள், வாகனத் திறப்புப் பேனா, மேக்கப் செட், மணிக்கூடு, கத்தி, "சன்கிளாஸ்" இப்படிப் பல்வேறு பாவனைப் பொருட்களுக்குள் செல்ஃபோன் புகுந்துகொண்டுள்ளது.

















# பார்த்த ஞாபகம் இல்லையோ...? 06

"**பா**ர்த்த ஞாபகம் இல்லையோ...?" என்ற கேள்வியை மகுடமாகச் சூட்டி இடைக்கால நடிகர் நடிகைகளை அறிமுகப்படுத்துகிறீர்களே! தமிழ்த் திரை உலகில் பெரும் சாதனைகளை நிலை நாட்டி இன்றும் மக்கள் உள்ளங்களில் வீற்றிருக்கும் பல மாமேதைகளை நினைவுக்குக் கொண்டு வர ஏன் மறந்து விட்டீர்கள்? என்று சற்றுக் காரசாரமாகக் கணை தொடுக்கிறார்கள் சில நடுத்தர பருவத்தைத் தாண்டிய வாசகர்கள். (இரசிகர்கள்)

எம். கே.தியாகராஜ பாகவதர், பி.யூ. சின்னப்பா, டி.ஆர்.ராஜகுமாரி, டி.ஆர்.மகாலிங்கம், என்.எஸ். கிருஷ்ணன், மதுரம் போன்ற தமிழ்த்திரை உலக முன்னோடிகளை இப் பகுதியில் அறிமுகம் செய்தால் என்ன? என்றும் ஆதங்கப்படுகிறார்கள் சிலர். இத்தகைய சாதனையாளர்களை "இன்றைய இரசிகர்களும் வாசகர்களும் அறிந்து கொள்ள வாய்ப்புக் கிட்டுமல்லவா?" என்று வினவுகின்றனர்.



நடராஜ முதலியார்

வாசக மகா ஜனங்களிடம் மன்னிப்புக் கோருகிறோம். தமிழ் சினிமாவின் ஆரம்பம் 1916ஆம் ஆண்டில்தான் என்று தெரியவருகிறது. பேசாத படங்களாக இருந்து தமிழ் பேசும் படங்களாக வெளிவந்த காலத்திலிருந்து இன்று வரையிலான திரைப்பட வரலாற்றை தமிழ் நாட்டிலேயே அறிந்து தெரிந்து கட்டுக் கோப்பாக வைத்திருப்பவர் ஒரேயொருவர்தான் இருக்கிறார். ஃபிலிம் நியூஸ் ஆனந்தன் என்பது அவர் பெயர். தமிழ் சினிமாவின் கலைக் களஞ்சியம் எனக் கொண்டாடப்படும் ஆனந்தன் அவர்களுக்குத் தமிழ்நாடு அரசாங்கம் "கலைமாமணி"விருது கொடுத்து கௌரவித்திருக்கிறது.

ஃபிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்களின் துணையுடன் தமிழ் சினிமாவின் ஆரம்ப கால நிலையினை ஒரளவாவது இப்பத்திகளில் தரலாம் என எண்ணுகிறோம்.




ரி.பி.ராஜலட்சுமி

தமிழ் சினிமா உலகின் பிதாமகர் என்று ஆர். நடராஜ முதலியார் அவர்களையே கூறலாம். இவர் லண்டன் மாநகரில் பேசாத திரைப்படங்களைத் தயாரிக்கும் உத்திகளைக் கற்றுக்கொண்டு சென்னை திரும்பினார். அவரே திரைக்கதை அமைத்து காட்சிகளைப் படமாக்கி இயக்கி தொகுத்து வெளியிட்ட பெருமைக்குரியவர்.

திரையில் படங்கள் காண்பிக்கப்படும் போது திரையின் அருகில் நிற்கும் ஒருவர் காட்சிகளை விளக்குவதுடன் வேறு சிலர் உரையாடல்களையும் பேசுவார்கள். நடராஜ முதலியார் தயாரித்து வெளியிட்ட முதல் படம் "கீசகன் வதை" மகாபாரதத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி இதுவாகும்.

**முதல் தமிழ் பேசும் படம்**

முதலாவதாக தமிழில் பேச்சு, பாடல்களைப் பதிவு செய்து தயாரிக்கப்பட்ட படம் "காளிதாஸ்" 1931ஆம் ஆண்டில் திரையிடப்பட்ட இப்படம் தமிழ் நாட்டில் தயாரிக்கப்படவில்லை. இராணி என்பவரால் தயாரிக்கப்பட்ட "காளிதாஸ்" படத்தை எச்.எம்.ரெட்டி இயக்கி இருந்தார். ஏதோ காரணத்தினால் துரிதகதியில் தயாரிக்கப்பட்ட படம் முழுமையான தமிழ்ப்படம் என்று கூறமுடியாது. இடைக்கிடையே தெலுங்கிலும் உரையாடல்கள் அமைந்திருந்தன.



எம். கே. தியாகராஜ பாகவதர்

அப்போது நாடக மேடையில் பிரசித்தமாகவிருந்த நாடக நடிகை ரி.பி.ராஜலட்சுமி பிரதான பாகத்தில் தோன்றினார். இவர் பின்னர் தானாகவே சில படங்களைத் தயாரித்து வெளியிட்டார்.

பெரும்பாலும் புராண- இதிகாசக் கதைகளை வைத்தே அக்காலத்தில் தமிழ்த் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டன. உரையாடல்களுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படவில்லை; எனினும் பாடல்கள் அதிகம் இடம்பெற்றன. இதனால் நன்றாக (கர்நாடக) இசைப் பாடல்களைப் பாடக் கூடியவர்களே படங்களில் நடிக்கச் சேர்க்கப்பட்டனர். நாடக மேடைகளில் தோன்றுபவர்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது.

தமிழ்த் திரைப்படங்களை அனேகமாக மக்கள் விரும்பிப் பார்க்கும் நிலை 1934ஆம் ஆண்டின் பின்னர்தான் ஏற்பட்டது. எம்.கே.தியாகராஜ பாகவதர் அவர்கள் மிக அழகான தோற்றம் கொண்டவர். அவருடைய குரல் இனிமையில் மூழ்காதவர் எவரும் இல்லை என்றே சொல்லலாம்.

தியாகராஜ பாகவதரும் எஸ்.டி.சுப்புலக்சுமியும் "பவளக்கொடி" திரைப்படத்தில் தோன்றினர். இப் படத்துக்கான சில காட்சிகள் திறந்தவெளி அரங்கு அமைக்கப்பட்டு சூரிய வெளிச்சத்தின் உதவியுடன் படமாக்கப்பட்டன. தமிழ் நாட்டு நகரங்களில் திரை அரங்குகள் பெரும்பாலும் இக் காலத்திலேயே நிர்மாணிக்கப்பட்டன. பவளக்கொடி, இரசிகர்களை மிகவும் கவர்ந்ததனால் வசூலில் பெரும் சாதனை நிலைநாட்டியது. இதனைத் தொடர்ந்து திரைப்படத்துறையில் முதலீடுசெய்யப் பல தனவந்தர்கள் முன்வந்தனர். திரைப்படம் தயாரிக்க பம்பாய் மற்றும் கல்கத்தா ந்கரங்களை நாடிச் செல்ல வேண்டியிருந்தது. 1934ஆம் ஆண்டில் "ஸ்ரீநிவாச கல்யாணம்" மற்றும் "லவகுசா"போன்ற திரைப்படங்கள் தமிழ் நாட்டிலேயே தயாரித்து வெளியிடப்பட்டன. ■

# தாக்குப் பிடிப்பாரா மும்தாஜ்

தமிழ் சினிமாவில் இப்போது மும்தாஜுக்கு கடும் போட்டி நிலவுகிறது. அவருக்குப் போட்டியாக மந்த்ரா, சங்கவி ஆகியோரும் களத்தில் குதித்துவிட்டனர். சமீபத்தில் வெளியான 'வருஷமெல்லாம் வசந்தம்' படத்தில் படு கவர்ச்சியாக நடித்து இளம் ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர் சங்கவி. இவர் இப்போது 'பாபா'விலும் நடிக்கிறார். இதேபோல் தமிழ், தெலுங்கு மொழிப்படங்களில் கவர்ச்சிக்கன்னியாக வலம் வந்த மந்த்ரா அஜித் நடிக்கும் 'ராஜா' படத்தில் நடித்து வருகிறார். இப் படத்தில் கவர்ச்சி வேடங்களில் வெளுத்து வாங்கியுள்ளாராம். இப் படம் வரும் ஜூன் மாதம் வெளிவரவுள்ளது. மறுபுறம் சகீலா தன் வத்தலகுண்டு உடம்பின் வளைவுகளைத் தாராளமாகக் காண்பித்து ரசிகர்களைக் கிறங்க வைக்கிறார். இத்தனைக்கும் நடுவில் மும்தாஜினால் தாக்குப்பிடிக்க முடியுமா என்று கவர்ச்சி வட்டாரங்களில் பேசப்படுகிறது.




## ஆகஸ்ட் முதலாம் தேதி 'பாபா' 'ரமணா' வெளியீடு

'பாபா'வுக்கு ஈடாக விஜயகாந்த் நடித்து வரும் படம் 'ரமணா'.

சூப்பர் ஸ்டாரின் 'பாபா' வெளியாகும் ஆகஸ்டு 1ஆம் தேதியன்றே 'ரமணா'வும் வெளியாகவுள்ளது. இத் தகவலை விஜயகாந்த் கூறியுள்ளார். 'பாட்ஷா' வெளியான அதே தினத்தன்றுதான் நான் நடித்த 'கருப்புநிலா'வும் வெளியானது. அதனால் அப் படம் தோல்வியடைந்ததா? என்று கேள்வி கேட்கிறார் புரட்சிக் கலைஞர்.

யாரும் 'பாபா'வைக் கண்டு பயப்படவில்லை. ஆனால், பட ரிலீஸ் தேதி பற்றி முடிவு செய்ய வேண்டியது 'ரமணா'வின் தயாரிப்பாளர்தான். என் வேலை நடிப்பது மட்டுமே என்கிறார் விஜய்காந்த். 'ரமணா'வில் வரும் உணர்ச்சி மிக்க காட்சிகள் யாருடைய மனத்தையாவது புண்படுத்தக்கூடும் என்கிறார் கேப்டன்.

## மினி சினி

* தமிழ்ப்பட கதாநாயகிகளுக்கே உரிய கொழுக்மொழுக் உடம்புடன் இருந்த நக்மாவா இது? நம்ப முடியவில்லை. தனது எக்ஸ்ட்ரா வெயிட்டுகளைப் பல பவுண்டுகள் குறைத்துவிட்டு, இப்போது படு ஸ்லிம்மாக கும்மென்று இருக்கிறார். கோலிவுட்டை மறந்த நக்மாவுக்கு இப்போது பாலிவுட்டில் படம் தயாரிக்கும் எண்ணம் வந்திருக்கிறதாம்.


* ஒளிப்பதிவாளர் ஜீவா டைரக்டர் செய்யும் 'பெப்சி' படத்தில் ஷாம், கிரிக்கட் வீரர் சடகோபன் ரமேஷ் என இரண்டு ஹீரோக்கள் நடிக்கிறார்கள். கதாநாயகியாக நடிக்கப் போகிறவர் கன்னக்குழியழகி லைலா. இன்னொரு ஹீரோயின் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

* 'மீரா', 'குருதிப்புனல்' ஆகிய படங்களை டைரக்ட் செய்த ஒளிப்பதிவாளர் பி.சி. ஸ்ரீராம், அடுத்து 'வானம் வசப்படும்' என்ற பெயரில் ஒரு படத்தை டைரக்ட் செய்கிறார். இதில் நடிப்பவர்கள் அனைவரும் புதுமுகங்கள். மகேஷ் மகாதேவன் இசையில் வைரமுத்து எழுதிய ஆறு பாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

* நடிகர் கார்த்திக்கிடம் இப்போது நிறைய மாற்றம். புதிய டைரக்டர்களிடம் ஆர்வமாகக் கதை கேட்கிறார். 'அத்தை மகன்', 'காதல் சொல்ல வந்தேன்', 'கேம்' என்று இவர் கையில் இருந்த படங்களின் பெரும்பாலான பணியை முடித்துக் கொடுத்து விட்டார். செல்வா டைரக்ஷனில் 'கைகோர்த்து வா' படத்தில் இப்போது முழுவீச்சுடன் நடித்து வருகிறார்.

* மாமாக்கள் என்று செல்லமாக அழைக்கப்படும் புரோக்கர்கள், கோடம்பாக்கத்தில் நிறையப் பேர் இருந்தாலும் மிக முக்கியமானவர்கள் யார் என்று விசாரித்தால் அதிர்ச்சியான தகவல்கள் கிடைக்கின்றன. சமீபத்தில் டைவர்ஸ் செய்து கொண்ட நடிகரும், அவர் மனைவியும் ஞாபகமிருக்கிறதா? நடிகையின் தங்கையின் கணவர் கோடம்பாக்கம் ஏரியாவில் மிகப் பிரபலமான புரோக்கர். இவருக்குத் தெரியாத பிரபலங்களே கிடையாதாம். பல இரண்டாந்தர நடிகைகள் அத்தனை பேரும் இவர் கஸ்டடியில்தான் இருக்கிறார்களாம்.

* ரஜனியின் 'பாபா' படத்துக்கு காளிகாம்பாள் கோவில் சிலை பயன்படுத்தப்படுகிறது. ஆயிரம் வருடங்களுக்கு மேலாகப் பாரிமுனையில் அமைந்திருக்கும் காளிகாம்பாள் பஞ்சலோகச் சிலை உற்சவ மூர்த்தியை 'பாபா' படத்துக்கு ஒரு நாள் படப்பிடிப்புக்கு மட்டும் கொடுக்கச் சம்மதித்துள்ளனர். அதோடு எலி வாகனம், மயில் வாகனம் என 13 வாகனங்களையும் கொடுத்து உதவி உள்ளனர்.




## விக்ரமின் துணிச்சல்

'சாமுராய்' படத்திற்காக ஏற்கனவே சகதிக் குழியில் இறங்கி நடித்து படக்குழுவினரின் பாராட்டைப் பெற்ற விக்ரம் அதே படத்திற்காக பனிக்கட்டிகளுக்கு மத்தியில் இறங்கி நடித்திருக்கிறார். ஐஸ்கட்டி நிறைந்த ஊட்டி ஏரிக்குள் அவர் ஒளிந்து கொள்வதுபோல் ஒரு காட்சியைப் படமாக்கினார்கள். இந்தக் காட்சியைப் படமாக்கி முடிக்க 2 மணி நேரம் ஆனது. விக்ரம் உடம்பு விறைத்து ரத்த ஓட்டமே நின்றுவிடும் அளவுக்கு நிலைமை மோசமானது.

காட்சி தத்ரூபமாக அமைய வேண்டும் என்பதற்காக, விக்ரம் உயிரைப் பணயம் வைத்து இந்தக் காட்சிகளில் நடித்து முடித்தார்.

## சந்தியாவின் சாமர்த்திய...

'யூத்' படத்தின் ஹீரோயின் சந்தியா தெலுங்கு நடிகை மட்டுமல்... வருமுன் பல விளம்பரப் படங்களிலும் நடித்தவர். அதனால்... படப்பிடிப்பில் டைரக்டர் சொல்வதை அப்படியே ஏற்று அற்புதமா... கிறாராம். "இந்தக் காட்சியில் நீங்க கொஞ்சம் கிளாமரா நடி... என்று தயங்கித் தயங்கி டைரக்டர் விஷயத்தைச் சொன்ன போது, ... சார் நீங்க, இதுக்கா இவ்ளோ தயக்கம்? நடிக்கறதுக்குன்னு வந்த... அதுக்குப் பிறகு அப்படி நடிக்க மாட்டேன், இப்படிக் கவர்ச்சி க... மாட்டேன்னு சொல்லலாமா? நான் மறுத்தா இன்னொரு நடி... தயாரா இருப்பாங்க. அதனால நானே கிளாமரா நடிக்கிறது... எந்தத் தப்பும் கிடையாது" என்று டைரக்டரையே அசத்து... றாராம். சினிமா சூட்சமம் புரிந்த சந்தாக் கிளி!

## லைலாவுக்கு 'உளவியல்' உதவும்

பட்டப் படிப்பில் 'சைக்காலஜி'யைப் பாடமா... எடுத்துப் படித்தவர் லைலா. நடிப்புத் துறைக்கு வந்த... பிறகு இது ரொம்பவே கை கொடுக்கிறதாம் நடி... கைக்கு. கால்ஷீட் கேட்டு வருபவர்களையும் கடலை போட வருபவர்களையும் சுலபமாகக் கண்டு பிடி... முடிகிறதாம். இதனால் என்ன லாபம் என்கிறீர்... களா? எதிரில் உட்கார்ந்திருப்பவரால் வருமானம்... என்றால் பேசுவார். இல்லையென்றால் டாடா...

## 'படையப்பா'வில் தோற்றவர் 'பாபா'வில் பழிவாங்க முயற்சி

ரஜனியின் 'படையப்பா'வில் நீலாம்பரி கேரக்டரில் நடித்து அசத்தி இருந்தவர் ரம்யாகிருஷ்ணன். இப்போது அதே நீலாம்பரி கேரக்டரில் 'பாபா'வில் நடித்திருக்கும் அவர், 'படையப்பா' படத்தில் ரஜனியிடம் சவால்விட்டு தோற்றுப் போய்விடுவார். இதனால் மனமுடைந்த அவர் துப்பாக்கியால் தன்னைச் சுட்டு மாய்த்துக் கொள்வார். அப்போது ரம்யாகிருஷ்ணன், "இந்த ஜென்மத்துல நீ ஜெயிச்சிருக்கலாம். ஆனால் அடுத்த ஜென்மத்துல உன்னைப் பழிக்குப் பழி வாங்கியே தீருவேன்" என்று கடுமையாகப் பேசி சபதம் செய்வார்.

இப்போது 'பாபா'வில் நீலாம்பரி கேரக்டரில் நடிக்கும் ரம்யா கிருஷ்ணனும், அவரது அண்ணனான நாசரும் ஒரு காட்சியில் ரஜனியைப் பார்த்துவிட்டு, இது கண்டிப்பா 'படையப்பா'தான், சந்தேகமே இல்லை என்று 'பாபா' ரஜனி மீது சந்தேகப் பட்டு, அவரை பழிவாங்கத் துடிப்பார்கள். இந்தக் காட்சி சமீபத்தில் மிகவும் இரகசியமாக 'பாபா'வுக்காகப் படமாக்கப்பட்டு உள்ளது. இதில் கடைசியில் நீலாம்பரி அமைதியாகச் சென்று விடுகிறார். 'பாபா' ரஜனி அவரை வென்றுவிடுகிறார்.

தொழி... தெரிகிறது... இவரிடம்... கிறார்., இவர்க... இப்போது கலக்கி... தில் என்னுடன் "அப்ப... இவர் சொல்ல, "இதை மட்... சொல்ல ஆடிப்போய் விட்... எப்படியோ பேசி ச... முடியவில்லையாம். ... கமிஷனாகப் பெற்று...



## சார்மிக்கு வாய்ப்பு

டி. ராஜேந்தரின் 'காதல் அழிவதில்லை' படத்தின் நாயகி சார்மி. படம் முடியும் வரை வேறு படங்களில் ஒப்பந்தம் ஆகக்கூடாது என்பதால் இவர் அடுத்த பட வாய்ப்புகளை ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறாராம். இருந்தாலும் அஜித் நடிக்கும் படத்துக்கு ஜோடியாக நடிக்க வைக்க தயாரிப்பு தரப்பில் தீவிர முயற்சி நடந்து கொண்டிருக்கிறதாம்.

## ஷகீலா நாயகியாக நடிக்கும் 'ஐஸ்கிரீம் பெண்ணே'

சன் மூவி மேக்கர்ஸ் எனும் நிறுவனத்தின் தயாரிப்பில் உருவாகும் முதல் படம் 'ஐஸ்கிரீம் பெண்ணே'.

இப் படத்தில் ஷகீலா இனி "ஏ" படங்களில் நடிக்க மாட்டேன் என்ற உறுதியுடன் கேரளாவில் இருந்து தமிழுக்குத் திரும்பியிருக்கிறார்.

மர்மங்கள் நிறைந்த திகில் படமான இதில் ஷகிலா இளைஞர்களைக் கவரும் விதத்தில் காதல் காட்சிகளில் சிறப்பாக நடித்துள்ளார்.

சமீப காலமாக வெளிவரும் செக்ஸ் படங்களைப் போல் எடுக்காமல் இன்று இருக்கும் இளைஞர்கள் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் இவ்வாறு வாழ வேண்டும் என்ற படிப்பினையுடன் ஷகிலா, தனுஷ் இணைந்து நடித்துள்ளனர்.



மும்தாஜ்

## கமலின் 'அன்பே சிவம்'

'பஞ்சதந்திர'த்திற்குப் பிறகு கமல் அடுத்து நடிக்க விருக்கும் படம் 'அன்பே சிவம்'. மலையாள டைரக்டர் பிரியதர்ஷன் இயக்குவதாக இருந்தார். இப்போது படத்திலிருந்து இவரைத் தூக்கிவிட்டு சுந்தர்.சி.க்கு அந்த வாய்ப்பைக் கொடுக்கப் போகிறார்களாம். இந்த கழித்த லுக்கும் கூட்டலுக்கும் காரணம் உலக நாயகனுக்கும் பிரியதர்ஷனுக்கும் கதையால் எழுந்த கருத்து வேறு பாடுதானாம்.

## ரம்யாகிருஷ்ணனின் 'ஜெயா'

'புதுப்புது ராகங்கள்', 'அர்ச்சனா ஐ.ஏ.எஸ்.', 'கிழக்கும் மேற்கும்', 'தமிழ்' ஆகிய படங்களைத் தயாரித்த தெய்வானை மூவிஸ் பட நிறுவனம் அடுத்ததாக பிரம்மாண்டமான முறையில் தயாரிக்கும் படம் 'ஜெயா'.

இப் படத்தில் ரம்யாகிருஷ்ணன் ஜெயா கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இன்னொரு கதாநாயகியாகத் 'துள்ளுவதோ இளமை' படத்தில் நடித்த ஷெரீன் நடிக்கிறார்.

## பஞ்சதந்திர நெருக்கம்

'பஞ்ச தந்திரம்' படத்தில் சிம்ரன்தான் கமலின் ஜோடி என்றாலும், இதற்கு சற்றும் சளைக்காத கேரக்டர் ரம்யாகிருஷ்ணனுக்கு. சந்தேகப் பிராணியாக சிம்ரனும், அப்பாவிப் பிராணியாக கமலும் நடிக்க, இதில் குழப்பம் விளைவிக்கும் கேரக்டர் ரம்யாவுக்கு. 'படையப்பா'வில் ரஜனியை வீழ்த்த சபதம் எடுத்துக் கொண்டதுபோல் இதில் கமலை வீழ்த்தப் படாதபாடு படுகிறார். சிம்ரனோடு வெளிநாடுகள் போய் கமல் ஆடிப்பாடும் பாடல்களுக்குச் சற்றும் குறைவில்லாமல் ரம்யாவோடு பாடும் பாடலும் அமைந்திருக்கிறதாம். கமலும் ரம்யாவும் அணிந்திருக்கும் காஸ்ட்யூம் கட்டிப் பிடித்திருக்கும் நெருக்கமுமே இதற்குச் சாட்சி.


## ஓ போடத் தடை

'ஓ போடு' பாடலைப் பாடக் கூடாதென முதல் முறையாக போலிஸாரினால் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் இயற்கை அழகு மிக்க குற்றால மலைப் பிரதேசத்தின் ரம்மியங்களை அனுபவிக்க வரும் இளைஞர்கள் 'ஓ' போடுவதற்கு போலீஸார் தடை விதித்துள்ளனர். திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் 'சீசன்' தொடங்கியுள்ளது. குற்றாலத்துக்கும் பல மாநிலங்கள், மாவட்டங்கள் மற்றும் வெளிநாட்டிலிருந்தும் பயணிகள் வந்து இயற்கை அழகை அனுபவித்துச் செல்வது வழக்கம்.

குற்றாலம் வரும் சுற்றுலாப் பயணிகள் செய்யக் கூடியவை மற்றும் செய்யக் கூடாதவை குறித்து காவல் துறை சார்பில் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதில் கூறப்பட்டுள்ள "செய்யக் கூடாத" செயல்களில் "ஓ போடு" பாடுவது உள்ளடங்கியிருக்கிறது.



விஜய்-சந்தியா
படம்: யூத்

திரையுலக மறுபக்கம் 238
தமிழ்நாட்டிலிருந்து மயன்

## முன்னாள் நடிகையின் புரோக்கர் பணி!

வகை தொகை இன்றி நடிகைகள் வந்து குவிந்து விட்டதால் முன்னணி நடிகைகளாக ஒரு காலத்தில் வலம் வந்த பலருக்கு இப்போது அம்மா வேடம் கூடக் கிடைப்பது மிகவும் சிரமமான காரியமாகிவிட்டது.

இதனால் மார்க்கட் இழந்து விட்டோடு இருக்கும் பல நடிகைகள் "அந்த மாதிரியான" தொழிலுக்கு புரோக்கர் வேலை பார்ப்பது புதிய சமாச்சாரமோ, இரகசியமோ அல்ல.

தமிழ் சினிமாவில் கொடிகட்டிப் பறந்த சகோதரிகளை அவ்வளவு சீக்கிரம் தமிழ் ரசிகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். இவர்களில் அக்கா நடிகை அமெரிக்காவில் திருமணம் செய்து கொண்டு சில வருடங்களில் டைவர்ஸ் செய்து விட்டு சென்னை வந்துவிட்டார். இங்கு வந்தவுடன் இன்னொருவரை இரண்டாவது கணவராக்கிக் கொண்டார். இவரும் கோலிவுட்டின் ஹைலெவல் புரோக்கர். ஃபீல்ட் அவுட் ஆன ஹீரோயினிகளின் செல் நம்பர் மொத்தமும் இவரது டைரியில் உண்டு. இவரது ஏற்பாடுகள் எல்லாம் ஸ்டார் ஹோட்டல்களில்தான். சமீபத்தில் கோலிவுட்டையே கலக்கிய பத்மஜோதி விஷயம் இவரால்தான் வெளிவந்தது.

சென்னையிலுள்ள ஒரு பிரபல நட்சத்திர ஹோட்டலில் வெளிநாட்டைச் சேர்ந்த ஒரு தமிழ் ...வந்துள்ளார். பெரிய பணக்காரரான இவருக்குக் கொஞ்சம் வக்கிரபுத்தியும் உள்ளதாகத் தெரிகிறது.

...நடிகையின் கணவர் சென்று தன்னிடமுள்ள நடிகைகளின் லிஸ்ட்டைப் படித்துக் காண்பித்திருக்கிறார். ...யாரும் எனக்கு வேண்டாம். சில வருடங்களுக்கு முன் கலக்கிய ஒரு நடிகையின் பெயரையும், ...கொண்டிருக்கும் ஒரு முன்னணி நடிகையின் பெயரையும் சொல்லி இருவரும் ஒரே சமயத்தில் ...இருக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார். "அது அவ்வளவு சீக்கரம் முடியாது" என்று ...நீ முடிச்சுட்டா உனக்கு இவ்வளவு கமிஷன் தருகிறேன்" என்று ஒரு குறிப்பிட்ட தொகையைச் ...ராம் நடிகையின் கணவர்.

...த்துப் பழைய நடிகையிடம் ஓ.கே. வாங்கியவர் தற்போதைய நடிகையை நெருங்கக் கூட ...யில் ஒரு பிரபல நடிகர் அதை முடித்துக் கொடுத்துவிட்டு, சில லட்சங்களை மட்டும் ...சென்றதாகத் தகவல்.

## கேரள ஜோதிகா— மீரா ஜஸ்மின்

கேரள ஜோதிகா எனப்படும் மீரா ஜஸ்மின் அறிமுக படம் 'ரன்' லிங்குசாமி இயக்கத்தில் மாதவன் ஜோடியாக நடிக்கிறார். அடுத்ததாகத் தமிழில் ஷாமுடன் ஜோடி சேர்ந்து நடிக்கும் படம் "பாலா". இந்த நிலையில் மலையாளத்தில் தன்னை அறிமுகம் செய்த டைரக்டருடன் காதல் கிசுகிசுவில் சிக்கியுள்ளார். தமிழில் ஒப்பந்தம் செய்துள்ள தயாரிப்பாளர்கள் வயிற்றில் புளி!

# சினி விசிட்

## ஆகஸ்டில் ரோஜா—செல்வமணி திருமணமாம்!

எதிர்வரும் ஆகஸ்ட் 21ஆம் திகதி திருமணம் செய்து கொள்ளப் போவதாக ரோஜா- செல்வமணி அறிவித்துள்ளனர்.

இவர்களது நீண்டகாலக் காதல் முறிந்து விட்டதாகப் பல தடவைகள் தகவல் வெளியாகியிருந்தன.

11 வருடமாகக் காதல் ஜோடிகளாக வாழும் இவர்களை புதுமணத் தம்பதியாக்க இரு குடும்பத்தினரும் பல்வேறு முயற்சி எடுத்தனர். இந்த முயற்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு இவர்களது திருமணத்தை நடத்தி வைப்பார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்முறையாவது ரோஜாவின் ஆசை நிறைவேறினால் சரி!

## சவிதா சீற்றம், சிம்ரனின் சங்கடம்

நடிகை சிம்ரனுக்கும், ஜோதிகாவுக்கும் டப்பிங் வாய்ஸ் கொடுத்தவர் சவிதா. இந்த இரண்டு நடிகைகளின் வெற்றிக்கு சவிதாவின் குரல் ஒரு ப்ளஸ் பாயிண்ட். ஆனால், தங்களுக்கு வாய்ஸ் கொடுத்த டப்பிங் ஆர்டிஸ்ட் பற்றி ஒரு வார்த்தை புகழ்ந்து பேசுவதில்லை. நடிகைகளிடம் இது பற்றிக் கேட்டால், "சும்மாவா குரல் கொடுக்கிறாங்க. அதுக்கான சம்பளத்தை வாங்கலை?" என்று எகிறுகிறார்கள். இதனால் வெறுத்துப்போன சவிதா சிம்ரனுக்காகக் குரல் கொடுப்பதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறார். டப்பிங் ஆர்டிஸ்டை டம்மி ஆக்கிய நடிகைகள் இப்போது ஊமைகளாய் பேந்தப் பேந்த விழிக்கிறார்கள்.



## ஸ்ரீகாந்துக்கு இருபக்க சிபார்சு

'ரோஜாக் கூட்டம்' படத்தில் ஸ்ரீகாந்துடன் நடித்த பூமிகாவுக்கு அவரை ரொம்பவும் பிடித்துப் போய்விட்டதாம். படம் வெற்றிகரமாக வசூல் செய்த சென்டிமெண்ட்தான் காரணம். இதை மனதில் வைத்து தெலுங்கில் ஒப்பந்தம் செய்ய வரும் தயாரிப்பாளர்களிடம் ஸ்ரீகாந்தை ஹீரோவாகப் போடும்படி சிபாரிசு செய்கிறாராம். ஒரு பக்கம் சினேகா, மறுபக்கம் பூமிகா. மச்சக்கார ஸ்ரீகாந்த் சிபாரிசில் சிக்கித் தவிக்கிறார் சந்தோஷமாக!

## முகப்பில்

விக்ரம்

படம்: சாமுராய்

# கண்ணீர் அலைகள்

புண்பட்ட என் இதயத்தில்
மீண்டும் புளிகரைக்கவா
என் கனவில் வந்து போகிறாய்?
சாம்பல் குன்றுக்குள் மறைந்திருக்கும்
தணல் போன்று நீ....
என்னை சாகடித்துச் சாம்பாறு போடுகிறாய்....

என்னை உன் காதலுக்காக சம்பந்தப்படுத்த
கல்லில் நார் உரித்தாற் போல் உரித்தெடுத்தாய்...

அன்பே!
உன் பிரிவிற்குப் பின்னால் உன்னை
நினைத்து நினைத்து நீந்துகிறேன்
கண்ணீர் எனும் நீர்க்கடலில்
அலையலையாய் அடிக்கிறது
உன் ஞாபகங்கள்.
அமிழ்ந்தமிழ்ந்து எழுகிறேன்.
ஆனால் ஆறுதல் கிடைக்கவில்லை.

அன்பே!
காதலெனும் நீர்க்கடலில்
பயணம் செய்தேன்.
பாதை மாறிவிட்டது.
பாதை மட்டும் அல்ல
துரும்பும் அறுந்து விட்டது.
எல்லாம் உன்னால்தான்.
இனி என்னிலை இலக்குத் தெரியாத
ஒரு பாய்க் கப்பலில்
பெரும் ஓட்டை விழுந்தாற் போற்தான்.

ஆம், பெண்ணே!
ஆழ்கடலில் மூழ்குவதற்கு இன்னும் சற்று
நேரம்தான் இருக்கின்றது.
அதற்குள் என்னை அமிழ்த்தி விடாதே.

க.த. மர்சூக், பத்தாவ, ஹொரவபொதான.

# முகம் முறிந்த முகம்

பூவாய் பூத்த புதுப் பொழுது
புழுதியானது
உன் முகம் கிடைத்தபோது

அந்நாள்
கறுப்பாகி கரித்தது
உன் முகத்தினை
உள் வாங்கியபோது....
ஓ...ஸ்நேகிதி
ஊடலில்லா
எம்முறவு
ஊதாரித்தனமானது
எதனால்?

இது நம் நேச உறவின்
இடைவேளை
இறந்த
"விடை" வேளையா?
நம்பாமல்
நகைக்கிறது மனது.
துன்புறுத்தல்
தூதுக்குத் துணிந்தவளே!
என் தூய அன்பின்
தூர்தலால் தான்;
உன் வாழ்வில்
வசந்தம் வருமென்றால்;
இந்த
தூர்தல் கூட நேசந்தானே.

ஒரு நாள் உனக்கு
உன் சுப செய்தியில்
வாழ்த்துக் கூற
நேரில் வருவேன்.
அப்பொழுது
உன் இதயக் கதவை
மூடினாலும்
வாசல் கதவையாவது
திறந்து வை.

ஒலுவிலூர்
ஷிபானி, கொழும்பு-10

# உனைத் தேடும் நெஞ்சம்....

பசுமை நினைவுகளை
மனசுக்குள்
இறுக்கிப் பொத்தியபடி
சிதறாமல்
கலையாமல்
கனவுகளுக்குள்
தவழ விட்டவனாக,
புதியதோர் தேசத்திற்கு
புறப்பட்டுச் சென்றான்
அவளுருவம் காண...!

மனதெல்லாம் நிறைந்திருந்த
இன்ப அலைகளின்
பொங்கியெழுதல்கள்
இதயத்துடிப்பின்
சப்தஸ்வரங்களை
கூட்டியும் குறைத்தும்
ஆதிக்கம் செய்தன!

புரியாத மொழி,
புதிய முகங்கள்,
வாழ்க்கை முழுவதும்
பயணிக்கப் போகும்
வளைந்து நெளிந்து செல்லும்
பாதைகள்
அவனது மனதுக்குள்
மரணத்தையும்
மலர்களையும்
தூவிச் சென்றன.

எண்ண அலைகளிலிருந்து
எழமுடியாது தவித்தான்!

மதுபம் தீண்டிய
மலரினைப் போல...!

தென்னந் தோப்புகள்,
பசுமை மரங்களால்
நிறைந்திருந்த அவளூர்
உள்ளத்தை ஆட்கொண்டன!
ஆயினும்...
உறவென்று சொல்ல
அவளையன்றி
வேறொருவரையும்
தெரிந்திருக்கவில்லையவன்!

தூரத்தே....
கலாசாலைத் தோழியின்
குடியிருப்பு...!

அவளுருவம் கண்டபோது
இதயவோசைகள்
ஒருமுறை
இறந்தே பிறந்தன!
பாசத்தின் அதீதத்தினால்...!

உரோமங்கள் சிலிர்க்க,
கண்கள் திறந்து கொண்டன!
வார்த்தைகள் மௌனித்தன!
"அண்ணலும் நோக்க
அவளும் நோக்கினாளென்ற"
காவிய வாசகங்கள்- மீண்டும்
புதுப்பிக்கப்பட்டன!

காயப்பட்ட அவனிதயம்
மௌன ஒத்தடங்களால்
வலியினை மறந்து மலரினைத் தாங்கிக்
கொண்டது!
யாருமில்லையென்றிருந்த அவன்
எழுந்து நடக்க முடியாதபோதும்
அழுது தீர்த்துக் கொண்டிருந்தான்.
நம்பிக்கைகளை விதைத்தபடி....!!

முகம்மது ஹாரீத்,
அட்டாளைச்சேனை.

# இதயத்தில் ஒரு ஏக்கம்

சித்திரம் தீட்டி வைத்தேன்
சிற்றிடையாள் மேனி கண்டு,
நித்திரையை நானிழந்து
நினைவுகளில் உலா வந்தேன்.
உத்தமி அவள் ஞாபகத்தில்
உருக்குலைந்து போய் நின்றேன்,
பத்தினி அவள் என்று
பார் முழுதும் பரப்பிவிட்டேன்.- என்
அத்தை மகள் அவள் என்று
அறியாதவர்களிடம்
அன்றுரைத்தேன்.
புத்தி கெட்டவனாய்
புழுதி படிந்த ஆடையுடன்- அவள் பின்
அழுது அழுது அலைந்து திரிந்தேன்.
அன்பானவளின் சம்மதத்திற்காய்
கம்பன்கூட வடிக்காத கவிவரியை
கற்பனையில் வடித்தெடுத்து
கன்னி அவள் கைகளில்- யாரும்
காணாதபடி நான் திணித்தேன்.
என்ன வேலை இதுவென்று- என்
கன்னத்தில் ஒன்று வைத்துவிட்டு
காற்றாக அவள் மறைந்தாள்,
தேற்றுவார் யாருமின்றி- நான்
பாட்டாக இசைக்கின்றேன்
ரோட்டோரம் நின்றபடி.

பற்குணன் அம்பிகாபதி, புளியங்குளம்.

# தேன்கிண்ணம்



# கேளுங்கள்

கேளுங்கள்
'அமைதி.
பேசுகிறேன்!

கலியுகத்தில்
நான்
காத்தல் கடவுள்

வெண்புறா
என்
வாகனம்

நீதிதேவதை
என்
சகோதரி

ஸ்ரீதேவி
என்
செவிலித்தாய்

எனக்கு
சொர்க்கம் என்றும்
பெயர்

நான்
இளைஞனோடு
இளைஞனாக
சிறைகளில்
அறையப்பட்டவன்

எங்கெல்லாம்'
சோதனைச் சாவடிகளோ
அங்கெல்லாம்
கற்போடு சேர்த்து
என் கண்களும்
சூறையாடப்பட்டவன்.

காலடியில் மரணம்
கவனியாதோர் சோகம்
கண்டு
கதறி அழுதவன்.

தாயின்
முலைக்காம்பு தேடும்
குழந்தை உதட்டில்
கொப்பளிக்கும்
தவிப்பை உணர்ந்தவன்.

நான்
மௌனம்
காத்ததில்லை
கத்தினேன்!
வெற்றிடத்தில்

என்
அமைதிப்பூங்காவை
செல்லரிக்கச்
செய்தவர்களே...
உங்களுக்கொன்று
சொல்லிக் கொள்கிறேன்.

நான்
சாம்பலில் இருந்து
எழுந்துவரும்
ஆத்மா!

என் தாகம்
தமிழினத்திலிருந்து
கிளர்ந்துவரும்
தாகம்!

க.ராகுலன்-
வெள்ளவத்தை.

# பேனா நண்பர்கள்



பெயர்: ஏ.கோகுலன்
வயது: 18
முகவரி:
297, சிறி நிவாசா,
செட்டித்தெரு,
கொழும்பு-11.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்:
எம்.ஐ.எம். நிஸாஃப்
வயது: 23
முகவரி:
HARD WALLS REST & CAFE,
P.O.BOX-43695,
ABU DHABI - U.A.E.
பொழுது போக்கு:
பத்திரிகை.



பெயர்:
ரி.பாலு
வயது: 28
முகவரி:
14, COMTON AVANUE,
WEMBLEY, MIDDLE SEX,
HAO 3FD, LONDON, U.K.
பொழுது போக்கு:
வழமையானவை.

# நினைத்து, நினைத்து சிரிக்க

ஒரு துப்பறியும் நிபுணர் இரவு சாப்பிட்டு விட்டு, தமது நண்பருடன், தரையில் படுத்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்தார்.

"அட! எத்தனை அற்புதமான நட்சத்திரங்கள்!" என்று மெய்மறந்தார் துப்பறியும் நிபுணர்.

"இந்த நட்சத்திரங்களைப் பார்க்கிறபோது, இயற்கையின் பிரம் மாண்டம் தெரிகிறது. ஆண்டவன் சிருஷ்டியின் மகத்துவம் தெரிகிறது; வானிலுள்ள நட்சத்திரங்களை வானியல் நிபுணர்களாலேயே எண்ண முடியாது என்று தெரிகிறது..." என்று பேசிக் கொண்டே போனார்.

நண்பர், "இவ்வளவு தெரிகிறது. ஆனால், நாம் படுத்துக் கொண்டிருக்கிற போதே, நமது கூடாரத்தை எவரோ திருடிக் கொண்டு போய்விட்டதால்தான், நமக்கு நட்சத்திரங்கள் தெரிகின்றன என்பது மட்டும் ஏனோ உனக்குப் புரியவில்லையே!" என்றார்.



சீனாவிடமிருந்து போர் விமானங்கள் வாங்கிய பாகிஸ்தான், அவற்றை இயக்குவதற்கான பயிற்சி பெறுவதற்காக தனது விமானிகளை சீனாவுக்கு அனுப்பி வைத்தது.

"இதோ... இந்த பட்டனை அழுத்தினால் போதும். ஃப்ளைட் மெள்ள மெள்ள மேலே கிளம்பும். இந்த பட்டன் வலது புறம் திருப்ப.... அது இடது புறம் திருப்ப..." என்றுவிளக்கிக் கொண்டு வந்த சீனப் பயிற்சியாளரை இடைமறித்தார் அந்த பாகிஸ்தான் விமானிகளில் ஒருவர். "அதுசரி... விமானத்தை தரை இறக்குவது எப்படி?" இது அவரது கேள்வி.

அதற்கு சீனப் பயிற்சியாளர் சொன்னார்– "அது உங்களுக்குத் தேவையில்லாத விஷயம். எப்படியும் நீங்கள் இந்திய எல்லையிலதானே பறக்கப் போறீங்க... தரை இறக்கிற வேலையை அவங்க பார்த்துக்க மாட்டாங்களா?"

வயதான பணக்காரப் பாட்டி ஒருவரைப் பேட்டியெடுக்கப் போனார் நிருபர். மேசைமீது ஒரு பீங்கான் பாத்திரம் நிறைய பாதாம் பருப்பு. பேச்சு சுவாரஸ்யத்தில் ஒவ்வொரு பாதாம் பருப்பாக எடுத்துக் கொறித்து, பேட்டி முடியும்போது பாத்திரமே காலி!

"அடடே... எல்லாத்தையும் நானே சாப்பிட்டுவிட்டேன் போலிருக்கிறதே!" நிருபர் அசடு வழிந்தார்.

பாட்டி பெருந்தன்மையாகச் சொன்னார்... "பரவாயில்லை... பல்லுச் சரியா இல்லாததால நான்தான் சாக்லெட்டை மட்டும் சாப்பிட்டுவிட்டு உள்ளேயிருந்த பாதாம்பருப்பை எல்லாம் இதிலே துப்பி வைச்சிருந்தேன்..."



**கவிதை நெஞ்சங்களுக்கு!**

***இயந்திரமயமான வாழ்வில் நாம் கவனிக்கத் தவறும் அனேக விடயங்களைப் படைப்பாளிகள் தம் கவனத்தில் கொள்கின்றனர். மென் காற்றுக்கு அசையும் சிறு சருகினைக் கூட படைப்புக்குள் கொண்டு வரும் இலாவகம் நல்ல படைப்பாளிகளுக்கு உண்டு. அவ்வகையான நான்கு படைப்புக்கள் இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக...***



## கதவு

பூட்டிய கதவு.
அருகே
சாவிகள் நிரம்பிய கூடை.
அனைவர் குறிக்கோள்
கதவைத் திறத்தல்.

அதிர்ஷ்டசாலி
எடுக்கும் முதல் சாவியிலேயே
கதவு திறக்கிறான்.

அனுபவசாலி
சிற்சில சாவிகளில்
நெக்கி நெம்பி
திறந்து விடுகிறான்.

கூடையில் மிஞ்சும்
கடைசிச் சாவிகொண்டு
பொறுமைசாலி
திறக்கிறான்.

திறமைசாலி
திறக்கும் சாவியைச்
செய்து முடிக்கிறான்.
உடைத்தே நுழைகிறான்
உழைப்பாளி.

அந்தக் கதவ
எந்தவொரு மந்திரத்திற்கும்
திறப்பதில்லை.
தன்னைத் தட்டிப் பார்ப்பதோடு
நகர்ந்து விடும்
நபர்களை எண்ணி
நகைக்கவும் செய்கிறது.

## வாக்கு மூலம்

ஒப்புக்கொள்ள
வெட்கப்படுவதில்லை.
காலை பழைய சோறு உண்டேன்.

அணிந்துள்ள உள்ளாடைகள்
கிழிந்தவை.
அனுப்பிய கவிதைகள்
அனைத்தும் திரும்பின.

பாட்டெழுத வாய்ப்பு கேட்டுப் போய்
இயக்குநர் வீட்டு நாய்களிடம்
பல்பதியக் கடிபட்டேன்.
ஞானக் கூத்தனைப் பிடிக்கிறது.
புதுமைப்பித்தனை
இன்னும் படிக்கவில்லை.

மணமானதும்
ஐந்தாறு நாட்கள்
தாழ்நீக்க மாட்டேன்.
இன்னும்....இன்னும்.....
ஒப்புக்கொள்ள
வெட்கப்படமாடடேன்.

## மன்னிப்பாய் தோழி

சாயங்களின் சாயை
உங்களிடமில்லை என்றாய்.
பின்புலத்தை சிருஷ்டித்தாய்
கண்கூச ஒளிரும் வட்டமொன்றை.

ஆழ்நதியின் சேறுகள்
கரைப்புல் அறியாதவை.
சளிப்பொருட்கள் அடர்ந்து
குழையும் என் மூக்கு
உன் மார்புச் சந்தனத்தை
முகரத் துடிப்பதை
நீயறியாய்.

# சிறப்புக் கவிதை

## சீற்றம்

நெகிழ்வான அந்திகளில்
வெட்கமாய் எதிர்த்து
எப்போதாவது அனுமதிப்பாய்
முத்தங்களை.
கட்டுப்பாடிழந்து
கண்செருகி மயங்குவாய்

தொடுதூர இடைவெளி
நமக்கிடையே.
கனவுத்திரை கட்டி எழுப்பப்பட்ட
மெல்லிய மதில் குறுக்கே.

அன்று
புயல் கரைகடந்த நாள்.
அடைமழைக்கு
நாமொதுங்கிய குடில்
ஏகாந்தப் புதரின் ஒற்றைப் பூ.

நனைந்த உடுப்புகளை
அள்ளிப் பிழிந்தாய்.
தானாய்க் கனன்றன
இளமையின் கொழுந்துகள்.
பருவக் குருதியின் சீற்றத்தின் முன்
நம் அடக்கம் எத்தனை நேரம்...!
நம்முள் உறங்கிய மிருகங்கள்
எதிரே பார்த்த இரையைத்
தாவிக் கவ்வின.

உன் மௌனச் சம்மதமும்
முகத்தில் பொலிந்திருந்த
என்றுமில்லா மோகச் சோபையும்
என்னை ஆற்றுப்படுத்தின.

நாம் உணர்வுற்றெழுகையில்
புதிய அமைதி.
தவறு உறைத்தும்
நீயும் சாதாரணப் பெண்ணாகி
செலலமாய்ச் சில விசும்பல்களோடு
உன் உடந்தையைச்
சமாதானப்படுத்தி விட்டாய்.
என் மிருகம்
எங்கு போய் அழுது
சமாதானமாகும்...?

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## சமையலறைப் பதற்றம் நீங்க

### ★★ சில டிப்ஸ்.... ★★

* அந்தந்த சாமான்களை எடுத்த இடத்திலேயே வைக்கப் பழகவும். பாத்திரங்கள் தனியே, சமையற் சாமான்கள் தனியே என ஒவ்வொன்றும் தனித்தனியே இருக்க வேண்டும்.

* எப்போதும் கைவசம் இரண்டு பிடிதுணிகளாவது இருக்க வேண்டும்.

* சமையற் சாமான்களைப் போத்தல்களில் நிரப்பி, அவற்றின் மேல் பெயரை எழுதி ஒட்டி வைத்து விடவும்.

* கைவசம் ஒரு கடதாசி வைத்துக் கொண்டு, முடியப் போகிற சாமான்களை உடனுக்குடன் குறித்து வையுங்கள்.

* இரண்டு சோடி பாத்திரங்களை வைத்துக் கொள்ளுங்கள். வேலைக்காரி வரவில்லையா? தண்ணீர் வரவில்லையா? பதற்றப்படாதீர்கள்!

* அடுத்த நாள் என்ன சமைக்கப் போகிறோம் என்பதை முதல் நாளே முடிவு செய்து அதற்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் தயாராக எடுத்து வைத்துவிடுங்கள். காலையில் எழுந்ததும் பார்த்துக் கொள்ளலாம் என்றால் பதற்றம்தான்.

* சமையற் சாமான்கள் முழுக்க முடியும்வரை காத்திருந்து, கடைசியில் கையைப் பிசைய வேண்டாம். இரண்டு நாட்களுக்கு முன்பே வாங்கி வைத்துக் கொள்வதில் எந்த நஷ்டமும் இல்லையே!

* சமையலறை வேலைகளை பதற்றமான வேலைகளாக நினைத்துக் கொள்ள வேண்டாம். உங்களுக்குப் பிடித்த பாடல்களைக் கேட்டுக் கொண்டோ, பாடிக்கொண்டோ செய்யலாம். அலுப்புத் தெரியாது.

* பயறு வகைகளில் பூச்சி அரிப்பதைத் தடுக்க அவற்றை லேசாக கடுகு எண்ணெயில் புரட்டி வையுங்கள்.

* கேக்குக்கு மிருது தன்மையும் அதிக மணமும் கிடைக்க அரைக் 'கப்' தோடம்பழச்சாறு சேர்க்கவும்.

* துருப்பிடித்த கத்திகளில் துரு போக அவற்றை ஒரு வெங்காயத் துண்டினால் நன்றாகத் தடவி சிறிது நேரம் கழித்து துணியால் துடைத்து விட கத்தியில் படிந்த துரு போய் விடும்.

* காலையில் வாங்கிய பாலை இரவு வரை வைத்திருக்க வேண்டுமானால் அதனைக் காய்ச்சி அதில் கழுவிய சில நெல்மணிகளைப் போட்டு வைக்கவும்.

* கடலையை ஊற வைத்த பிறகு ஒரு மணி நேரம் வெயிலில் வைத்து எடுத்து அதன் பின் வேக வைக்கவும். கடலை சுருக்கமில்லாமல் வெந்து அளவிலும் பெரிதாக இருக்கும்.

* பாகற்காய் பொரியல் சுவையாக இருக்க, பாகற்காயை வில்லை வில்லையாக நறுக்கி, புளித் தண்ணீரில் உப்பு, மிளகாய்த் தூள், பெருங்காயத் தூள் சேர்த்து அதில் அரை மணி நேரம் ஊற வைக்கவும். அதன் பின் வாணலியில் எண்ணெய் விட்டு ஐந்து ஆறாகப்போட்டு பொரித்து எடுக்கவும்.

* வறுத்த ரவையில் தோசை சுட்டால் ஹோட்டல் தோசை போல 'மொறுமொறு' என்றிருக்கும்.

* எலுமிச்சம் பழத்தைக் கண்ணாடிப் போத்தலில் போட்டு வைத்தால் எத்தனை நாளானாலும் கெட்டுப் போகாது.

* பட்டாணி, பட்டர் பீன்ஸ், இவற்றைக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால் முளைவிடாமல் இருக்கும்.

* வத்தல், வடகம், அப்பளம் இவற்றை பிளாஸ்டிக் கவரில் போட்டு வையுங்கள். எண்ணெய்க் காறல் தன்மை இருக்காது.


செல்வாஸின் 7

சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்** Z

பெயர்:......................

முகவரி:......................

......................

தொழில்:......................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி 13- 07-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

**இந்த வாரம் யாருக்கு சல்வார்?**
**யாழ்ப்பாண வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான் ☞ வி.மங்களேஸ்வரி, குருக்கள் வளவு, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம் அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





"சீதா... இங்க வந்து உட்காரு..." என்று பக்கத்தில் இருந்த காலி இடத்தைக் காட்டினாள் அனிதா.

அவளருகில் வந்து படாமல் உட்கார்ந்தான்.

உள்ள போனதும் டாக்டர் விசாரித்துவிட்டு, "கல்யாண சமயத்துல பீரியட்ஸ் தள்ளிப் போறதுக்காக ஏதாவது மாத்திரை சாப்பிட்டியா...?

அனிதாவுக்கு நினைவு வந்தது.

"ஆமாம்... கல்யாணத் தேதி கொஞ்சம் கிட்ட இருந்ததால, சுகந்தி அக்கா தான் மாத்திரை கொடுத்திருந்தாள்..."

"ஒரு வாரம் மாத்திரை சாப்பிட்டா..." என்றாள் சுகந்தி.

"அதனால ஹோர்மோன்ஸ் டிஸ்டர்பன்ஸ் இருக்கலாம். எதுக்கும் எல்லா டெஸ்ட்டும் பண்ணிரலாம். காலையில யூரின் சாம்பிள் எடுக்கணும்... வர்றீங்களா...?" லேடி டாக்டர் சொன்னார்.

"இப்ப எதுவும் சொல்ல முடியாதா...?" சுகந்தி கேட்க...

"சொல்ல முடியாதும்மா... வாந்தி இல்லைங்கறாங்க. ப்ரெஸ்ட்ல ஏதும் மாறுதல் இல்லை. நாளைக்குத் தெரிஞ்சுரும்... கன்பர்ம் பண்ணிரலாம்... கவலைப் படாதீங்க..." என்ற டாக்டர் அனிதாவின் தாலியைப் பார்த்து, "எல்லாம் சுகமாவே முடிஞ்சுரும்... புள்ளை பெத்துக்க இங்கேயே வாங்க..." என்றாள்.

அவர்களுடன் பரிவாக-சாந்தமாக உடன்தொடர்ந்து வெளியே வந்தபோது, சீதாராமனைப் பார்த்து "ஹஸ்பெண்டையும் உள்ளே கூட்டிவந்திருக்கலாமே...?" என்றாள் லேடி டாக்டர்.

சீதாராமன், "இல்லை டாக்டர்... ஐம் நெர்வஸ்..." என்றான்.

ஆட்டோரிக்ஷாவில் அவர்கள் மூவரும் செல்ல, "என்ன சொன்னா...?" என்றான் சீதா.

"நாளைக்குத்தான் தெரியும் சீதா... நாளைக்குக் கார்த்தால அழைச்சுண்டு போக வர்றியா...?"

"தாரளமா... அதைவிட என்ன வேலை எனக்கு...?"

வீட்டுக்கு வந்தபோது "மாலைக்குரல்" வேன் நின்றுகொண்டிருந்தது. அதில் இருவர் வாசலிலேயே காத்திருந்தார்கள். அனிதாவுக்குத் திக்கென்றது. வைரவனின் நிழல்கள், அவள் வாழ்க்கையை விட்டு அத்தனை எளிதில் விலகாது என்று தோன்றியது.

"என் பேர் ராஜகோபால்ங்க... வைரவனோட அட்வகேட்டுக்கு அசிஸ்டெண்ட்! டாகுமெண்ட்ஸ் எல்லாத்தையும் சரியா இருக்கான்னு பார்த்துட்டு, இதுல கொஞ்சம் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துட்டீங்கன்னா..."

"வெச்சுட்டுப் போங்க..." என்றான் சீதா. "கையெழுத்துப்போட்டு அப்புறம் கொடுத்து அனுப்பறோம்..."

"அனிதா... உங்களை வைரவன் பார்க்கணும்னாரு..." ராஜகோபால்.

"எப்ப...?"

"அவ வரமாட்டான்னு சொல்லிடுங்க... வரமாட்டா!" சீதா சொன்னான்.

"அவரை ஜெயிலு மாத்தறாங்க... பர்மிஷன் கேட்டு வெச்சிருக்கோம். இந்த நம்பருக்குப் போன் பண்ணா..."

"எதுக்காக அவ வரணும். எல்லாம் முடிஞ்சப்புறம்...? மிஸ்டர்... நீங்க பிரச்சனையைச் சிக்கலாக்கப் பாக்கறீங்க... அவ வரமாட்டா... வரமாட்டா... வரமாட்டா..."

"அதை அவங்களே சொல்லட்டுமே..." ராஜகோபால் கேட்க,

"அனி... சொல்லு... வரமாட்டேன்னு சொல்லு அனி..." என்றான் சீதா.

"அவர் எங்கே இருக்கார்?" என்றாள் அனிதா.

"எங்கே இருப்பார்... ஜெயில்ல தான்! வேற எங்கே...?" சீதா கேலியாகச் சொன்னான்.

"வாஸ்தவங்க! ஜெயில்லதான் இருக்காரு... நீங்க அவரைப் பார்க்க அனுமதி வாங்கியிருக்கோம்..." அனிதாவிடம் ராஜகோபால் சொன்னான்.

"அனி... சொல்லிடு... வரமாட்டேன்னு சொல்லிடு... நீ எப்பவாவது அதைத் தீர்மானிக்க வேண்டியது கட்டாயம்.... இந்தப் பந்தங்களையெல்லாம் அறுத்தாச்சு... கட் பண்ணியாச்சு... அனி, இப்பவே சொல்லிடு!"

அனிதா, "என்னைப் போட்டுக் குழப்பாதீங்க எல்லோரும்..." என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றாள். அவளுக்கு அந்த உணர்ச்சிகள் மூச்சை அழுத்தின. முதலில் கர்ப்ப சந்தேகம்... எதிர்காலமென்ன? என்கிற சந்தேகம்... சீதாவின் கருணையில் மூச்சுத்திணறல்... உணர்ச்சிகளை இனம்பிரிக்க முடியாமல் திணறினாள்.

மாலைக்குரல் மெள்ளப் புறப்பட்டுச் சென்றதை ஜன்னல் வழியாகப் பார்த்த போது, அதை அழைக்க வேண்டும் போலிருந்தது.



சீதா, "உன் நல்லதுக்காகவாவது நீ இந்த இடத்தை விட்டு விலகறதுதான்-தள்ளியிருக்கிறதுதான் நல்லது அனிதா... அந்தாளு உன்னைத் துரத்தறான்!"

"நாளைக்குத் தீர்மானிக்கலாம் அதை!"

**நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா**

"அனிதா... அதுக்கு முன்னால இன்னிக்கே ஒண்ணு தீர்மானிக்கணும். தேவை ஏற்பட்டுப்போச்சு அனிதா... நான் அத்திம்பேர் கிட்டயும் அக்கா கிட்டயும் சொல்லிக்கிறேன்... நாம கல்யாணம் பண்ணிண்டுடலாம் அனிதா... திருநீர்மலைக்குப் போய், சிம்பிளா கல்யாணத்தை முடிச்சுண்டு ரிஜிஸ்தர் பண்ணிண்டுடலாம் அனிதா!"

"எப்ப...?"

"நாளைக்கு!"

"நாளைக்கு லேடி டாக்டர்கிட்ட போகணும்..."

"அதுக்கும்இதுக்கும்சம்பந்தமில்லை அனிதா..." என்றான் சீதாராமன்.

மறுதினம் லேடி டாக்டரிடம் அனிதாவை அழைத்துப்போக சீதாராமன் தயாராகத்தான் இருந்தான். அனிதா தான், "இன்றைக்கு வேண்டாம்..." என்று சொல்லிவிட்டாள்.

"ஏன் அனி....? லேடி டாக்டர்கிட்ட அப்பாயின்ட் மெண்ட் வாங்கி வெச்சிருக்கோமே....?"

"நான் கர்ப்பம்தானான்னு இப்பத் தெரிஞ்சுண்டு என்ன ஆகணும்....?"

"பின்ன எப்பத் தெரிஞ்சுக்கணும்...?"

"அதுக்கு ஒண்ணும் அவசரமில்லை இப்ப..."

"என்னடி இது... இப்படிச் சொல்றே...? ஏதாவது கலைக்கக் கிலைக்கச் செய்யணும்னா, முன்னாலயே தெரிஞ்சுக்கறதுதானே நல்லது?..."- கமலம் சொல்ல,

"அம்மா... எனக்குக் கிடைக்கிற துக்கச் செய்திகள் எல்லாம் போதும் அம்மா... அதோட இதையும் சேர்க்க வேண்டாம்..."

சீதாதான் கடைசியாக, "சரி அனி, உன் இஷ்டம்... நீ எப்ப டாக்டர்கிட்ட போகணும்கறியோ அப்பப் போகலாம்! பெத்துக்க விருப்பமிருந்தாலும் பெத்துக்கலாம்..." என்றான்.

சீதாவைத் தீர்க்கமாகப் பார்த்துவிட்டு உள்ளே சென்றாள் அனிதா.

சுகந்திதான், "லேடி டாக்டர் சந்தேகமாத்தான் சொன்னா... கர்ப்பம்கிறதுக்கான அறிகுறி வேறு ஏதும் இலலை அனிதாவுக்கு! இப்ப அந்தச் சிக்கல் இல்லைன்னுதான் தோணறது. பகவான் அத்தனை தூரம் ஒரு பெண்ணைப் படுத்தமாட்டார்..."

சீதாராமன் கல்யாணத்தை முடித்து விட வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தான். திருநீர்மலைக்கு எல்லோரும் போக, ஒரு தனி பஸ்ஸும் காரும் ஏற்பாடு செய்திருந்தான். ஆபீஸுக்கு லீவு போட்டுவிட்டு, சில நண்பர்களை ஒத்தாசைக்கு வரவழைத்திருந்தான்.

மதுவையும் கூப்பிட்டிருந்தான். சுகந்தியும் கமலமும் அலங்காரம் செய்ய வந்தபோது, அனிதா வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அனிதா... போகலாம், கிளம்பு... நேரமாச்சு..."

"எங்க போகணும்...?"

"திருநீர்மலைக்குப் போறோம்... உனக்கும் சீதாவுக்கும் கல்யாணம்... பெரிசா பட்டுப்புடவை, நகைன்னு இல்லாட்டாலும் சீதா ஆசையா வாங்கிக் கொடுத்த அந்த ஜார்ஜெட் புடவையைக் கட்டிண்டு, மையிட்டு, பூ வெச்சுண்டு வா, போதும்..."

"அம்மா... மது வந்திருக்காளா...?"

"ஆமாம்..."


"அவளைக் கூப்பிடு..."

மது உள்ளே வந்து, "என்ன அனிதா... என்ன ஆயிருச்சு...?" என்றாள்.

"மது... நான் செய்யறது சரிதானா...?"

[அனிதா வருவாள்...]





மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ?
கண்ணிரெண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கை கொட்டிச் சிரியாரோ?

-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

## ஏ மானே...!

**கு**ரங்கு ஒன்று அபூர்வமாய்க் கிடைத்த ஒரு மாம்பழத்தைச் சுவைத்துத் தின்று கொண்டிருந்தது. பழத்தைத் தின்ற முடிக்கும் தறுவாயில் "தட...தட..."வென்று சத்தத்தைக் கேட்டு நிமிர்ந்து நேரே பார்த்தது.

உறுதியான கொம்புகளைக் கொண்ட ஒரு மான் தலை தெறிக்கும் வேகத்தில் ஓடி வந்து கொண்டிருக்க, அதற்குப் பின்னே சற்றுத் தூரத்திற்கு அப்பால் சில வேட்டை நாய்கள் குரைத்துக் கொண்டு வரும் சத்தம் கேட்டது.

குரங்கிற்குப் புரிந்து விட்டது.

"இந்த மானைப் பிடிக்க சில வேட்டை நாய்கள் துரத்திக் கொண்டு வருகின்றன. இது உயிருக்குப் பயந்து ஓடி வருகிறது" என்று நினைத்த குரங்கு, மாங்கொட்டையைக் கீழே வீசிவிட்டு ஓடி வரும் மானின் முன்னே போய் நின்றது.

"ஏ மானே! நில்!" என்றது குரங்கு.

"நிற்க நேரமில்லை! என் உயிருக்கு ஆபத்து. வேட்டை நாய்கள் சில என்னைப் பிடிப்பதற்காகத் துரத்தி வந்து கொண்டிருக்கின்றன!" என்று சொல்லிக் கொண்டே சில வினாடிகள் நின்றது.

"என்ன மானே நீ! வேட்டை நாய்களைக் கண்டா நீ இப்படிப் பயந்து ஓடி வருகிறாய். நாய்கள் என்ன அத்தனை பலம் உள்ளனவா? உன் முழங்கால் உயரம் கூட அவை வராது. அவற்றை விட ஐந்தாறு மடங்கு பருமன் உன் உடம்பு. முர்க்கமான கொம்புகள். இவை அந்த நாய்களுக்கு உண்டா? இல்லை! உன் வேகம் என்ன? அந்த வேகத்திற்கு அவற்றால் ஈடு கொடுக்க முடியுமா? இத்தனை வீரதீரத்தை உன்னுள்ளே கொண்ட நீ, கேவலம், அற்பப் பிராணிகளான நாய்களுக்குப் பயந்து ஓடி வருகிறாயே, எனக்கு அவமானம் பிடுங்கித் தின்கிறது!" என்றது குரங்கு.

குரங்கு சொன்னதையெல்லாம அமைதியுடன் கேட்டது மான்.

"அற்ப ஜந்துக்களான அவைகள் நான்கைந்து சேர்ந்து உன்னைச் சூழ்ந்து கொண்டு தாக்கினாலும் கூட, உன் கூர்மையான கொம்புகளைக் கொண்டும், அவற்றைத் தாக்கி அழிக்கலாமே. இவற்றோடு மன உறுதியையும், தன்னம்பிக்கையையும் உடன் சேர்த்துக் கொண்டால் அத்தனை நாய்களையும் துவம்சம் செய்து விடலாமே. இவற்றையெல்லாம் உணராமல் இப்படிக் கோழையாக இருக்கிறாயே. உன்னை ஒரு ஆண்மையுள்ள மான் என்று சொல்லிக்கொள்ளவே எனக்கு வெட்கமாய் இருக்கிறது. போ... ஓடிப்போய் ஒளிந்து கொள்!" என்று கிண்டலுடன் சொன்னது குரங்கு. இதையெல்லாம் கேட்ட மானுக்கு உடனே வீரம் பொங்கியது. கூடவே ரோஷமும் எழுந்தது.

"குரங்கே! தக்க சமயத்தில் நீ வந்து சொல்லப் போய்த்தான் எனக்குள்ளே இருக்கின்ற பல திறமைகள், எனக்கே தெரிய வருகிறது. நீ சொன்னது போல் நாய்கள் அற்ப ஜந்துக்கள்தான். நான் என் பலத்தையெல்லாம் திரட்டி மிகவும் மூர்க்கமாக ஒரு அடி அடித்தால் போதும். நாய்களின் முப்பத்திரண்டு பற்களும் சிதறிவிடும். அதோடு அவற்றின் மூளையும் சிதறு தேங்காய் போலச் சிதறும். இப்பொழுதே அந்த நாய்களை எதிர்த்து அழிக்கிறேன் பார்!" என்று சொல்லிக் கொண்டே, "விருட்"டென்று திரும்பி நின்று நாய்கள் வரும் திசையைப் பார்த்தது.

நாய்கள் மிக அருகே வந்துவிட்டன.

மானுக்கு உடல் முழுக்க மூர்க்கம் உண்டாயிற்று. கால்களை தரையில் உராய்ந்தது. உயர்ந்த கொம்புகளை இப்படியும் அப்படியும் அசைத்துப் பார்த்தது.

அதே நிமிடம்-

நான்கு வேட்டை நாய்கள் மானைச் சூழ்ந்து கொண்டு பயங்கரமாகக் குரைத்தன. எந்த வினாடியும் மானின் மேல் பாய அவை தயாராக வாயைத் திறந்து கொண்டு சுற்றிச் சுற்றி வந்தன.

மானுக்கு என்னதான் உள்ளத்தில் உறுதி இருந்தாலும் நாய்களின் கடூரமான குரைப்புச் சத்தமும், அதன் கூரான பற்களும் மனதிற்குள் அச்சத்தை உண்டாக்கின. சற்று நேரத்திற்கு முன்பு வரை இருந்த மன உறுதியும், உடல் உறுதியும் சட....சட...வென்று தளர்ந்தன.

மான் மிரண்டது. பயந்தது. சட்டென்று திரும்பி ஓட ஆரம்பித்தது.

இவற்றிற்காகவே காத்திருந்த நாய்கள், விருட்.....விருட்...டென்று மானின் மீது பாய்ந்தன.

"ஹோ...ஹோ!" என்று அலறியபடி அந்த மான் ரத்தக் காயங்களுடன் கீழே விழுந்தது.

நாய்களின் பின்னே வந்த வேட்டைக்காரர்கள் அந்த மானைப் பிடித்து, கட்டி எடுத்துக் கொண்டு போனார்கள். நடந்த எல்லாவற்றையும், ஒரு மரத்தின் மறைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த குரங்கு, "ஹூம்! கோழைப் பயலுக்கு நல்லுபதேசம் செய்தாலும், கோழை, கோழைதான். அவனை எக் காலத்திலும், எச் சூழ்நிலையிலும், எந்த உபதேசத்தினாலும் வீரனாக்க முடியாது. மான் சற்றுத் தன்னம்பிக்கையுடன் நாய்களை எதிர்த்திருந்தால், அவை பின் வாங்கி ஓடியிருக்கும். ஆனால், மன உறுதியே இல்லாததால், நாய்கள் மன உறுதியோடு மானைப் பிடித்து விட்டன. கோழை..... கோழைதான் வீரன்...வீரன்தான். கோழையை வீரனாக்கவும் முடியாது. வீரனைக் கோழையாக்கவும் முடியாது" என்று முணுமுணுத்தபடி, அங்கிருந்து சென்றது குரங்கு.

இந்த முறை உங்களுக்கு அறிவுரை கூறும் வேலையை குரங்காரே செய்துவிட்டார். குரங்காருக்கே நன்றிகள்.

## விடுகதைகளும் விடைகளும்

1. உயரப் பறக்கும் ஊன்றுகோலில் நிற்கும் அது என்ன?
2. வெள்ளிப்பணம் துள்ளி விழுகிறது அது என்ன?
3. மரம் வழுக்கும் காய் துவர்க்கும் பழம் இனிக்கும் தோல் சறுக்கும் அது என்ன?
4. பகலில் ஒருவன் தவிர வேறு ஆளில்லை, இரவில் அவனைத் தவிர எத்தனை கூட்டம். அவர்கள் யார்?
5. நடைக்கு உவமை நளனின் தூதுவன் அவன் யார்?
6. முடிய அரங்குக்குள் முத்துச் சிப்பிகள் அது என்ன?
7. பார்த்தால் பசப்புக்காரி கடித்தால் கசப்புக்காரி அவள் யார்?
8. திரவமாய் பிறந்தான் புகையாய் மறைந்தான் அவன் யார?
9. தண்ணீரில் ஓடும் தத்துப்பசு தரையில் நகராத வித்துப்பசு அது என்ன?
10. இருட்டு வீட்டில் முரட்டு சிப்பாய் அவன் யார்?

### விடைகள்

1. கொடி 2. மின்
3. வாழைமரம்
4. வானம்- சூரியன் நிலா-நட்சத்திரங்கள்
5. அன்னம் 6. வாய் - பற்கள்
7. பாகற்காய் 8. பெட்ரோல்
9. கப்பல் 10. பூட்டு



↑ மத்திய நூற்றாண்டு காலத்தில் ரோமில் மயில் உணவு பிரபலம். மயிலை ரோஸ்ட் செய்து சாப்பிடுவதில் அங்குள்ளவர்கள் தனி விருப்பம் கொண்டிருந்தார்கள்.

## உணவு



→ஜப்பானில் பட்டு உற்பத்தித் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் ஊழியர்கள் பட்டு தயாரிக்கப் பயன்படும் கூட்டுப் புழுவின் கூட்டில் இருக்கும் புழுக்களை விரும்பி உண்கிறார்கள்.

↓அமெரிக்காவில் புளோரிடா மாகாணத்தில் உள்ளவர்களின் விருப்ப உணவாக இருப்பது சாரைப்பாம்பு. அதன் 'டேஸ்ட்'டுக்கு மயங்கிப் போயிருக்கிறார்கள் அங்குள்ளோர்.



↓குளிர் காலத்தின்போது பல விலங்குகளுக்குச் சரியான அளவில் உணவு கிடைக்காது. இந்தக் கால கட்டத்தில் உறக்க நிலையிலேயே பொழுதை கழிக்கும் விலங்குகள் சில உள்ளன. இவை தொடர்ந்து பல நாட்கள் தூங்கும். வௌவால், தரை அணில், துருவக் கரடி ஆகியவை இந்த உறக்க நிலையைப் பின்பற்றும் விலங்குகளாகும்.



நாடாப்புழு என்னும் ஒரு வகைப் புழு தனது உடலையே உணவாக்கிக் கொள்ளும் ஒரு வினோதப் புழுவாகும். இதற்கு உணவு கிடைக்காத போது இப்படி95 சதவித உடலை அவை உணவாக்கிக் கொள்கின்றன. போதிய உணவு கிடைத்தவுடன் மீண்டும் அவை பழைய நிலையை அடைந்து விடுகின்றன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **13.07.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **453**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 451


பரிசுக்குரியவர்:
**எம்.ஏ. கிளிபட் பெர்னாண்டோ**
57/6, அனுராதபுர வீதி, புத்தளம்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **என்.எப். நஷா**<br>அல்-பர்கான் மு.ம.வி, கலேவெல. | **தங்கவேல் கவியரசன்**<br>அவரவத்தை எஸ்டேட், சாமிமலை. |
| **பாத்திமா அஸ்ஜத் நுஸாரி**<br>லோட்டஸ் நேர்சரி, வான் வீதி, புத்தளம். | **எம்.எச்.எப் சர்மிளா**<br>குரு நாகல, அக்குரணை. |
| **தம்பிராஜா சுரேன்**<br>பலபொகுண வீதி, கிருலப்பனை. | **என்.ஜீவா**<br>மவுசாகல த.வி, மஸ்கெலியா. |
| **பி.தயாளபிரகாஷ்**<br>கதிரேசன்மத்திய கல்லூரி, நாவலப்பிட்டி. | **ஆர்.சிரிகனேசன்**<br>நுவோவர் கிரஸ்வீதவி, அக்கரப்பத்தனை. |
| **எல்.பாரத்**<br>பலாங்கொடை த.ம.வி, பலாங்கொடை. | **எம்.ஏ. எம். அஹ்மட்**<br>மாளிகாவத்தை பிளேஸ், கொழும்பு-10. |

## இந்த வாரப் புதிர்

இவ் வரைபடத்தில் எத்தனை சதுரம் உண்டு? கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.



## அறிவுத்தேடல்

### சென்றவாரப் புதிருக்கான விடை:

M=25, N=40,
O=03, P=09, Q=20




**தவறுக்கு வருந்துகின்றோம்**

சென்ற வார (466) இதழிலே, பாப்பா முரசு பகுதியில் அறிவுத் தேடல் புதிருக்காகவும், வர்ணம் தீட்டும் போட்டிக்காகவும் இடம்பெறவேண்டிய படங்கள் ஒன்றுக்கொன்று இடம்மாறிப் பிரசுரமாகிவிட்டன. அச்சுப் பதிப்பில் ஏற்பட்ட இத் தவறுக்காக மனம் வருந்துகின்றோம். (ஆ-ர்)

# மண்வாசனை

"எங்களுக்கு வழி பிறந்திட்டுது, ராசாத்தி! இனி நாங்கள் பஸ்சில ஏறி கொழும்பில இருந்து நேராய் யாழ்ப்பாணம் போய்ச் சேரலாம். ஒரு கஷ்டமுமில்லை...எப்பிடி...இதை நினைக்கவே சந்தோஷமாயிருக்கு பார்த்தீரே..."

அவருக்குத்தான் இந்த மனோற்சாகம் ஆனால், மனைவியின் கவனமோ பத்திரிகை படிப்பதிலேயே கருத்தூன்றி இருந்தது. மகள் தாயினருகில் இருந்து அன்றைய தன் நிகழ்வுகளை நாட் குறிப்பில் எழுதிக் கொண்டிருந்தாள். அவளுக்கும் அப்பாவின் கதையிலே எதுவித அக்கறையும் ஏற்படவில்லை.

"இனி நாங்களும் ஊர்வழிய போய்ச் சேர்ந்திடலாம்... சீச்சீ... கொழும்பில இருந்து கொண்டு என்னதான் ஒரு சுகத்தைக் கண்டம். இங்கயிருந்து வெறுத்துப் போயிற்றுது வாழ்க்கை. சுணங்காமல் கெதியா இனி அங்காலை போயிட வேணும்." அவர் தன் மனைவியைப் பார்த்தவாறு இப்படிச் சொலிக்கொள்ளவும், படித்துக்கொண்டிருந்த பத்திரிகையை மடித்துப் பக்கத்தில் வைத்துவிட்டு மனைவி அவரைப் பார்த்தாள்.

"நினைச்சவுடன சரிவர்ற அலுவலேயிது. உந்தக் கதையை விட்டுப் போட்டுச் சும்மாயிருங்கோ" என்று சொன்னாள்.

"ஏன்... ஏன்... இங்கேரும், இங்க திரும்பி ஒருக்கா என்னைப் பார்த்துச் சொல்லும் பார்ப்பம், அது முடியாதென்கிறீரோ?"

"முடியாதெண்டு ஆர் சொன்னது. ஆனா, இப்போதைக்குத்தான் உது நடவாதெண்டுறன். இங்கினையா எத்தினைபேர் கொழும்பில இருக்கினம். நீங்கள் சொல்றாப்போல சுறுக்காய் வெளிக்கிட்டுக் கொண்டு போக அடுக்காயிருக்கினமே? சொல்லுங்கோவன்? ஏதோ கொஞ்சப் பேர் இங்கயிருந்து போய் அங்கின இருக்கிற தங்கடை தங்கடை வீட்டைப் பார்த்திட்டு திரும்பி வருகினம்தான். அதைநான் இல்லையெண்டேல்ல. ஆனா, சாமான் சக்கட்டுக்களை அள்ளிக் கட்டிக் கொண்டு போய் அங்கினையா இருக்கப் போயிற்றினமே?"

"ஆரும் இங்கினையா கிடக்கட்டும் போகட்டும். அவயின்ரை கதை எங்களுக்கெதுக்கு... நாங்கள் வெளிக்கிடலாம் தானே, வெளிக்கிட்டுப் போய் அங்க இருப்பம். எங்களின்ரை இடத்தில போயிருக்க ஆரையும் ஏன் நாங்கள் வாய் பாத்துக் கொண்டிருப்பான்"

"கொஞ்சம் பொறுங்கோ நானும் அதைப்பற்றி உங்களுக்குக் கொஞ்சம் சொல்லுறனே...பிள்ளையள் வெளியால இருந்து சொல்லுதுகள் அங்க போக வேணாமெண்டு. நீங்கள் என்ன இப்படி நாண்டு கொண்டு நிக்கிறியள்" இது அவர் மனைவி சொல்லுகிற காரணம்.

"எங்கட ஊரிலிருக்கிற மாதிரி எங்கேயும் வருமே, சத்தியமாய்ச் சொல்லுறன். வராது கண்டியோ... அங்க எல்லாமே இருக்கு. என்ன... அங்க உயிர்ப்பா இருக்கிற எல்லாச் சாமானையும் பார்த்து வாங்கிச் சாப்பிடலாம். வேண்டிய நேரம் கோயில் குளமெண்டு நாலு இடத்துக்கும் போகலாம். வரலாம்... தெரிஞ்ச அறிஞ்ச சனத்தோட பேசலாம், பழகலாம், நிம்மதியாய் சந்தோஷமாயிருக்கலாம். இங்க அப்பிடி இருக்கே...? பிடிச்சுவைச்ச பிள்ளையார் மாதிரி விடிய இருந்து பொழுதுபட மட்டும் நான் வீட்டுக்குள்ளேயே ஒரு மூலையில் இருக்க வேண்டியிருக்கு. எத்தனை நாளுக்கெண்டு இப்படியே இருந்துகொண்டு வில்லங்கப்படேலும்" இது அவர் சொல்லும் ஞாயம்.

"அப்பிடி உங்கடை அலுவலை மாத்திரம் பாத்தால் காணுமெண்டு தான் நீங்கள் நினைக்கிறியள் போல. இருக்கிற பொம்புளைப் பிள்ளையைப் பற்றிக் கொஞ்சமேனும் நீங்க யோசிக்கேல்லயே. இந்த இடத்தில இருந்தாத் தானே பிள்ளைக்கொரு மாப்பிளை பாத்து கலியாணம் கட்டிவைக்க வழி பார்க்கேலும். இப்படியொரு காரியத் தோடதானே இங்க இருக்கிறவயளும் கனக்கவாயிருக்கினம். உது மட்டுமே, குடுத்த வீட்டு "அட்வான்சும்" ஒழுங்காய்க் கழிபடேல்ல. அதுக்குள்ளவா என்ன அவசரம் உங்களுக்கு?"

சிறிது நேரம் அங்கே நிசப்தம். அதற்குப் பிறகு அவரே பேச்சைத் தொடர்ந்தார்.

"முந்தித்தான் போக்குவரத்துக்குக் கஷ்டம். பிளேனில கப்பலில எண்டு ஒழுங்கு பண்ணிக் கொள்ளுறதும் பெரிய தலையிடி பிடிச்ச வேலை. ஆனா இப்பவெண்டால் பாதை திறந்திருக்கு. பாஸ் கெடுபிடியும் இல்லை. கரைச்சலுமில்லாம கொழும்புக்கு வரலாம்தானே இதுக்குப் போய்...."

"ஓமோம்... வரலாம்தான் ஆனா, உங்களுக்கு இப்ப இருதய நோயிருக்கு. உங்கட வருத்தத்துக்கு கொழும்பிலேயே இருக்கிறதுதான் நல்லம். நல்ல வைத்திய வசதி இங்கதானிருக்கு. இதுவும் முக்கியம்தானே"

"நீர் அப்பிடி என்ர காரியத்தைத் தான் முக்கியமா வைச்சுச் சொல்லுகிறீரோ?" கொஞ்சம் இப்போது கடுப்புடன் கேட்டார்.

"இல்லை! பிள்ளையின்ரை காரியமும் முக்கியமாயிருக்கு. இவவும் வெளியால எங்கேயும் போகவேணுமே" மனைவியின் வாயிலிருந்து உண்மை வெளிவந்ததைக் கண்டு பிடித்துவிட்டார்.

"சரி... அதுக்குப்பிறகு" இவர் கேட்டார்.

"நாங்களும் இங்கயிருந்து என்ன செய்யிறது நாங்களும் அங்கின அதுகளிட்டப் போகவேண்டியதுதான்"

"எங்க போகவெண்டிறீர்?" குழம்பிப் போய்க் கேட்டார்.

"வெளிநாட்டுக்குத்தான். அங்க தானே இப்ப எங்கடை எல்லாப் பிள்ளையளும் இருக்கினம். அங்க போய் பிள்ளைகளோட சேர்ந்து இருக்காமல், பேரப்பிள்ளையளை தூக்கி வைச்சுக் கொஞ்சாமல், யாழ்ப்பாணத்தில போய் தனிய ரெண்டு பேருமா இருந்து கொண்டு என்ன செய்யிறது. வயது போன இந்தக் காலத்தில யாழ்ப்பாணம் போய் ஒருவேளை அங்க நோயும் பாயுமாக் கிடந்திட்டால் எங்களைப்பாக்க எடுக்க வெண்டு அங்க ஆர் இருக்கினம், சொல்லுங்கோ பாப்பம்?" மனைவியின் பேச்சிலே இப்படியெல்லாப் பிரச்சனைகளும் நிரையில் வர அவருடைய திட்டம் நிறைவேறாததாகி சாண்சாணாய் சறுக்கியது. அவர் ஆசைப்பட்ட காரியம் ஊசிப் போயிற்று. இந்த விஷயம் மனைவி சொன்னதோடு மாத்திரம் நின்றுவிட்டால் பரவாயில்லை என்றுஅவருக்கும் இருந்திருக்கும். ஆனால், இப்போது மகளும் அதே புராணத்தைத் தொடர்ந்து ஆரம்பித்தாள்.



"அப்பா! வன்னியில ஐம்பது அறுபது மைல் பிரயாணஞ் செய்ய ஆறு மணித்தியாலத்துக்கு மேல நேரம் போகுதாம். இப்போதைக்கு அந்தப் பாதையால நீங்க பஸ்சில பிரயாணம் பண்ணினா அப்பிடியே நெஞ்சைப் பிடிச்சுக் கொண்டு தான் இருந்து வேதனைப்பட வேண்டிவரும். முன்னமே உங்களுக்கு ரெண்டு தரம் "ஹாட் அட்டாக்" வந்திருக்கு. அதையும் மறந்திடாதேயுங்கோ"

"உங்கள் ரெண்டு பேருக்குமே சொந்த இடத்தில போய் இருக்கிறதுக்கு விருப்பமில்லைப்போல இருக்கு... நீங்கள் ரெண்டு பேரும் இங்க இருங்கோ. நான் ஊருக்குப் போகப் போறன்."

"பொறுங்கோ அப்பா! அம்மா, சொல்லுறதையும் கேளுங்கோ. இவ்வளவு காலமா இங்க கொழும்பில நீங்க இருந்திருக்கிறியள்தானே. இப்பவெண்டு ஏன் இப்படிக் கிடந்து அவசரப்படுறியள். வெளிநாட்டில பிள்ளையள் இருந்திட்டால் தாய், தேப்பன் அங்கதான் போய்ச் சேருகிறதுக்குத் தெண்டிப்பினம். உங்கடை விருப்பம் என்ன வேற மாதிரிக் கிடக்கு"

"நீ சொல்லுறது சரிதான், பிள்ளை! நானும் அதை ஏற்றுக் கொள்ளுறனம்மா! ஆனா, நான் சாகிற வயசில ஊரோட போய்ச் சேர்ந்திடத்தான் ஆசை... இதைத்தான் நான் கனகாலமா எதிர்பார்த்திருந்தன். சோமாலியாவில பிறந்தவன் எந்த வசதியான பணக்கார நாட்டில போய் வாழ்ந்தாலும் தன்ரை நாடுதான் பொன்நாடு என்றதாயிருக்கும் பிள்ளை.... எனக்கும் நான் பிறந்த ஊர் மண்தான் பெரிசம்மா. கடவுளுக்கு அடுத்து பிறந்த மண்ணைத்தான் ஒருவன் வணங்கவேணும் கண்டியோ. ஒருவன் தன்ரை உயிர் வாழுமட்டும் பெற்ற தாயை மறக்க மாட்டான். அது மாதிரியே பிறந்த ஊரையும் மறக்கேலாது. நான் சீவிச்ச காலம் அனேகமாய் அங்கதான். அங்க போய் இந்தக் கட்டை சரியட்டும். என்ரை மண்ணிலயே எரிஞ்சு சாம்பலாகட்டும். அதுதான் என்ரை ஆசை. அதுக்குத்தான் நான் துடிக்கிறன்" கண் கலங்கிவிட்டது அவருக்கு.

அவர் தனது உள்ளத்து உணர்ச்சிகளையெல்லாம் வார்த்தைகளிலே வடித்து அவர்களுக்கு விளங்கும்படி இந்த விதமாகக் கூறினார். அவருடைய பேச்சிலே பிறந்த இடத்து மண்பற்று தன் இனத்தின் மேல் கொண்டிருந்த பற்று துலாம்பரமாக வெளியே பிரதிபலித்தது.

அவரது மனைவியும் மகளும் அவர் இப்படியாகச் சொல்வதைக் கேட்டு உண்மையிலேயே மனம் நெகிழ்ந்து போனார்கள்.

மகளுக்கு அப்பாவின் கதையோடு இணையக் கூடியதாய் பாரதி பாடிய பாட்டொன்று சட்டென்று அவ்விடத்தில் ஞாபகம் வந்தது. "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே" என்ற அந்தப் பாட்டில் வரும் ஒவ்வொரு அடியும் பிறந்த இடத்து மண்வாசனை நினைவுகளை அவளிடத்தில் கிளறி விட்டதைப்போல இருந்தது. அதோடு அந்த இடத்தில் அவள் தன் தகப்பனை நினைத்துப் பார்க்க வேண்டியும் வந்தது. ஓய்வூதியம் பெற்ற பின்பு அவளது தந்தை எவ்வளவோ நல்ல காரியங்களை ஊரிலே இருக்கும்போது செய்து கொண்டிருந்தார்.

ஒரு சிலர் மரங்களை வெட்டி அழித்துக் கொண்டிருக்க அந்த யுத்த சூழ்நிலையிலும் அவர் பெருவாரியாய் பனம் விதைகளை நாட்டி பல இடங்களிலும் அவைகளை வளர்த்துவிட வேண்டும் என்ற கொள்கையுடன் பாடுபட்டார். அவருக்குச் சொந்தமான காணிகளிலே பல இடங்களிலும் சென்று தேடி எடுத்துக் கொண்டு வந்த பல மூலிகைச் செடிகளை நட்டு வளர்த்து அவற்றை அழியவிடாமல் பாதுகாத்தார்.

சாப்பாட்டு விஷயத்தில் அப்பா... அப்படியெல்லாம் சொன்னரே, அது எல்லாமே உண்மைதான். சயிக்கிளில் போய் ஊர் ஊராகச் சுற்றி என்னென்ன விதமான ருசியான உணவுகளை அவர் எங்கள் வீட்டுக்கு வாங்கி வந்திருப்பார்.

செம்பாட்டு மண்ணுடைய அச்சுவேலிப் பக்கம் போய் மரவள்ளிக் கிழங்கு, இராசவள்ளிக் கிழங்கு, கருணைக் கிழங்கு, முந்திரிகைப்பழம் என்று வாங்கி வருவார். பனங்கிழங்கு, ஒடியல், பனாட்டு வாங்க பளைப்பக்கம் போய் வருவார். பருத்தித்துறை போய் தட்டைவடை, எள்ளுப்பாகு, நல்லெண்ணெய் என்று கொண்டுவருவார். அது எல்லாம் அங்கே எங்கள் நாட்டுச் சாப்பாடு.

அவர் சொல்கிற மாதிரி அவைகள் தான் எவ்வளவு ருசி. இவற்றையெல்லாம் பார்த்து எங்கே சொர்க்கம் இருக்கிறது என்றால் அங்கே என்றுதான் நாங்கள் சொல்வோம். அப்படி இருக்கும்போது வெளிநாடுகளில் போய் ஏன் இன்னமும் நாம் முகம் தெரியாதவர்களுடன் இருந்து வாழ வேண்டும்.

இந்த நினைவுகளோடே அவளுக்கு சொந்த ஊர்ப்பற்று மேவி அங்கே சென்றடைய வேண்டும் என்ற தாகம் வலுத்துவிட்டது. எப்போது அந்த மண்ணில் சென்று கால் வைப்போம் என்ற அவசரமும் வலுத்துவிட்டது.

"அப்பா நானும் உங்களோட யாழ்ப்பாணத்துக்கு வருகிறனப்பா. அங்க போய் நாங்கள் இருப்பம்" என்று தனது தந்தையைப் பார்த்து அவள் சொன்னாள். மகள் அப்படிச் சொன்னதைக் கேட்டவுடன் அவர் மனம் புளகாங்கிதம் அடைந்தது. பக்கத்திலேயே நின்ற மனைவியைப் பார்த்தார். அவள் கண்களிலும் மகிழ்ச்சிப் பூ, பூத்திருந்தது. ■

**நீ. பி. அருளானந்தம் - கல்கிசை**

# கலியுகம்

அரைநாள் விடுப்பு எடுத்துக் கொண்டு சங்கர் வந்ததும் வராததுமாய் வீட்டையே இரண்டாக்கித் தேடினான். பீரோ, மேசை, இழுப்பு என்று ஒன்று விடாமல் தேடியும் கிடைக்கவில்லை. யுவன் சங்கர், அவ்வூர் பிரபல ஆடைத் தொழிற்சாலையில் மேலதிகாரியாகவும், அவன் மனைவி சுந்தரி தனியார் மருத்துவமனையில் நர்ஸாகவும் வேலை பார்க்கின்றனர்.

சங்கரின் கோபம் நிமிடத்துக்கு நிமிடம் அதிகரிக்கத் தொடங்கியது. "வச்சது வச்ச எடத்துல இல்ல எங்க எடுத்து வச்சிட்டுப் போனாளோ சனியன்!" என்றவாறு மருத்துவமனைக்கு ஃபோன் எடுத்து சுந்தரியைக் கூப்பிட்டான். மறுமுனையில் யாரோ கையாள் போலிருக்கிறது. "நர்ஸ் அம்மா, இப்பத்தாங்க டாக்டர் கூப்பிட்டதாக டாக்டரின் அறைக்குப் போனாங்க. அரைமணி நேரம் கழிச்சு போன் பண்ணுங்க" என்று அவன் கூற, இவனின் மனம் ருத்திரதாண்டவம் ஆடியது." அவ்வளவு நேரம் டாக்டரின் அறையில் அப்படி என்ன வெட்டி முறிக்கிற வேலை." பசியோடு இருந்த அவனுக்கு எரிச்சல் போதாது என்று இப்போ இது வேற கடுப்பு. சாப்பிடப் பிடிக்காமல் பாக்கட்டில் இருந்து சிகரட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தவாறே அலுப்போடு நாற்காலியில் சாய்ந்தான்.

அரை மணித்தியாலத்திற்கு மேலேயே ஆகியிருந்த நிலையில் மறுபடியும் ஃபோன் பண்ணினான். "இப்பதான் சார்! அம்மாவும் டாக்டரும் சாப்பிடப் போனாங்க." அதே கையாளின் குரல் "இரண்டு பேரும் ஒண்ணா உட்கார்ந்து கொட்டிக்கிட்டா தான் தொண்டையில எறங்குமோ?" சங்கரின் மனம் பேயாட்டம் ஆடியது. இன்னொரு சிகரெட்டைப் பற்றவைத்தான்.

மாலை 4 மணிக்கு மீண்டும் சுந்தரியை ஃபோனில் அழைத்தான். அதே கையாள் "இப்பதாங்க இருவரும் காரில் ஏறிப் போனாங்க." வந்த ஆத்திரத்தையெல்லாம் ரிசீவரில் காட்டினான் படாரென்று. அதே கணம் வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டு ஜன்னலின் திரைச்சீலையை விலக்கிப் பார்வையை வெளியே செலுத்தினான்.

சுந்திரி ஒரு பெண்ணுடன் காரில் இருந்து இறங்கி வீட்டினுள் நுழைந்தாள். சங்கருக்கு அப்பெண்ணை அறிமுகப்படுத்தினாள். "இவதான் எங்க மருத்துவமனை ஐ ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் சீதா" என்று தொடங்கி இருவரையும் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்திய கையோடு இருவரும் ஹோலில் அமர்ந்து கதைக்கத் தொடங்கினார்கள். சங்கரின் மனம் கூனிக் குறுகியது. 12 வருஷமாகத் தன்னுடன் வாழ்ந்த அவளைப் புரிந்து கொள்ள முடியாமல் போனதற்கு மனதளவில் நொந்து நூலானான். அதே கணம் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு டாக்டருக்கும், சுந்தரிக்கும் ஆக இரண்டு கப் தேனீருடன் ஹோலில் அவர்களுடன் கலந்தான்.



சிறிது நேரத்தின் பின் தான் வீட்டை இரண்டாக்கித் தேடிய அடகு நோட்டீஸ் பற்றித் தாழ்ந்த குரலில் கேட்டான். அவளும் "அதற்கு அவசியமே இல்லீங்க டாக்டர் சீதா அதை மீட்டுத் தந்து விட்டார்கள்" என்று தன் கையைக் காட்டினாள். அவன் அம்மாவின் ஞாபகமாக வைத்திருந்த வளையல், எங்கே ஏலத்தில் போய்விடுமோ? என்று பயந்த அவனின் மனதில் சீதா தெய்வமாகக் காட்சி தந்தாள்.

மீண்டும் அவளை மனதாரக் கை கூப்பி நன்றி கூறினான்.

**அ. சுஹாஷினி பண்டாரவளை**

சுமார் பத்து நிமிடங்களின் பின் டாக்டர் சீதா இருவரிடமும் விடை பெற்றுக்கொண்டு, வாசலை நோக்கி நடந்தாள். அவள் போன திக்கை வெறித்துப் பார்த்தவாறே நின்றிருந்தான் சங்கர். அவனுக்கு எங்கே தெரியப் போகிறது டாக்டர் சீதாவும், சுந்தரியும் 'லெஸ்பியன்' என்று.

# ஒரு கைதியின் கதை

## 09

**கொ**லை முயற்சி என்று என் மீது குற்றம் சுமத்தப்பட்டது. திட்டமிட்டு செய்யாத கொலை என்பதாலும் மல்லையா தானாகக் குறுக்கில் வந்து கத்தியை நெஞ்சில் வாங்கிக் கொண்டார் என்பதாலும், தூக்குத் தண்டனை தரப்படவில்லை.

தொழிலாளர்கள் நிலைமை மோசம். நான் புதியவன். எனக்காக எவ்வளவு நாள் போராட்டம் நடத்தி வயிற்றைக் காயப் போட முடியும்?


நான் சிறைக்குப் போக வேண்டியது முடிவானதும், அம்மா விழுந்தவள்தான் எழுந்திருக்கவே இல்லை.

கஸ்தூரிபாய் முதியோர் இல்லத்தில் இருக்கும் அந்த அய்யாதான் பொறுப்பெடுத்து பார்த்துக் கொண்டார். மூன்று வருடங்கள் அங்கே இருந்தாள் அம்மா. அப்புறம், உடல்நிலை ரொம்ப மோசமாகி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பலனளிக்காமல் செத்தே போனாள்.

பரோலில் என்னை வெளியே விட்டார்கள். அம்மாவின் இறுதிக் காரியங்களை முடித்து விட்டு மறுபடி சிறைக்குத் திரும்பினேன்.

தலைவர்களுடைய பிறந்தநாள்கள், என் நன்னடத்தை என்று என்னென்னவோ காரணங்களுக்காக என் தண்டனைக் காலம் ஏழு வருடத்திலிருந்து குறைந்து நான் விடுதலை செய்யப்பட்டு விட்டேன்.

எனக்கு இருந்த ஒரே உறவு என் அம்மா. அவர் இனி இல்லை. திடீ



ரென்று என் வாழ்க்கை இருட்டடிக்கப்பட்டு விட்டது. சூன்யமாக்கப்பட்டு விட்டது.

மல்லையா கடைசி முச்சைப் பிரியும்போது சொன்னதுதான் எனக்கு மறுபடி மறுபடி ஞாபகம் வருகிறது. கிருஷ்ணதாஸைக் காட்டி 'அவனைச் சும்மா விடாதே!' என்றார்.

கிருஷ்ணதாஸ் அன்றைக்கு இருந்ததை விட இன்றைக்கு இன்னும் செல்வாக்குள்ளவர். வசதியானவர். இன்னும் பல பிஸினஸ்கள் பெருகி விட்டன. வெளிநாடு போய் வந்த மகனும் பிஸினஸில் இறங்கப் போகிறான்.

கிருஷ்ணதாஸைப் போலத்தான் பரமேஷ்வரும் அவருடைய சொத்தும் வளர்ந்துவிட்டது.

ஆனால், பரமேஷ்வரின் பலவீனம் மோசமானது. மகாலட்சுமி போல ஒரு மனைவி இருக்கும்போதே, இளம் பெண்களை பணத்தால் வாங்குகிறார் என்பது எனக்குத் தெரிந்தது.

அப்புறம்தான்....

சந்திரமோகன் நிறுத்தினான். அவள் கண்களில் ஈரம். அபிதா கை நீட்டி அவன் கையைப் பற்றி அழுத்திக் கொடுத்தாள்.

"உன்னை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்தவர்களை சும்மா விடக் கூடாது. ஆனால், என் அப்பாவை என்ன செய்யப் போகிறாய்?" இந்த கேள்வியைக் கேட்கும்போது மட்டும் குரலில் மெல்லிய அச்சம் வந்தது.

"அவரை நான் தாக்கப் போவதில்லை... என் விரல் நுனி கூட அவர் மீது படப்போவதில்லை. ஆனால் பழிவாங்கப் போகிறேன்".

"எப்படி?"

"பொறுத்திருந்து வேடிக்கை பாரேன்." என்றான், சந்திரமோகன்.

"சந்தர்..." அபிதா அவன் பெயரை சுருக்கிக் கூப்பிட்டதும் அவன் முகத்தில் சிறு ஆச்சரியம் வந்தது.

"என் அப்பா உயிருக்கு ஆபத்து இல்லை என்று நீ உத்தரவாதம் தந்தால் உனக்கு நானும் ஒத்துழைப்பு தரத் தயார்" என்றாள், அபிதா.

சந்திரமோகன் அவளை நன்றியோடு பார்த்தான்.

"அவர் உயிருக்கு என்னால் எந்த ஆபத்தும் வராது... செத்துப்போன என் அம்மா மேல் சத்தியம். நீ ஒத்துழைப்பு தருவதாயிருந்தால் என் வேலை ரொம்ப சுலபமாகி விடும்..."

"நான் என்ன செய்ய வேண்டும், சந்தர்?"

அபிதா ஆர்வத்துடன் கேட்டாள்.

சந்திரமோகன் நிதானமாக தன் திட்டத்தை விவரித்தான்.

●●●

**போ**லீஸ் ஜீப்பைப் பார்த்ததும் அந்த துணிக்கடையில் இருந்தவர்கள் சற்றே விறைத்தார்கள்.

இன்ஸ்பெக்டர் இந்தியராஜா அந்த கறுப்புத் திரை துணியை கவுண்டரில் போட்டார். விசாரித்தார்.

"இந்தத் துணியை நாங்கள்தான் சார் நான்கு நாட்களுக்கு முன் விற்பனை செய்தோம்"

"யாருக்கு?"

பில் புத்தகத்தில் புரட்டிப் பார்த்து, "பெயர் இல்லை, இன்ஸ்பெக்டர்... ஆனால், வந்தவன், தாடி மீசை வைத்திருந்தான்" என்றார்கள்.

"எதிர்க்கடையிலிருந்து அவன் ஒரு ஃபோன் செய்தானே" என்று இன்னொரு சிப்பந்தி நினைவூட்டினான்.

எதிர்க்கடையில் பழைய பில்களிலிருந்து அந்தத் தேதியில், அந்த நேரத்தில் செய்யப்பட்ட போன் நம்பரைக் குறித்துக் கொண்டபோது, இன்ஸ்பெக்டர் இந்தியராஜாவின் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது.

"பரமேஷ்..."-டி.எஸ்.பி. கஜேந்திரன் ஃபோனில் பேசினார். "அந்த ஆள் இன்னும் மாட்டவில்லை. ஆனால், தேடிக் கொண்டிருக்கிறோம்."

பரமேஷ்வரின் முகத்தில் சலிப்பு வந்தது. "எந்த விவரமுமா கிடைக்கவில்லை?"

"கிடைத்தது... ஆனால் அது ஒரு வட்டமாக முடிந்து விட்டது. அவன் ஹோட்டல் ரூமில் மாட்டியிருந்த கறுப்புத் திரையை வாங்கிய இடத்திலிருந்து ஒரு ஃபோன் பண்ணியிருக்கிறான். எந்த நம்பருக்குத் தெரியுமா?" டி. எஸ்.பி. தொலைபேசி எண்ணைச் சொன்னார்.

"அது என்னுடைய ஃபோன் நம்பர் அல்லவா?" என்றார், பரமேஷ்வர்.

"ஆமாம்...திரையை வாங்கி விட்டு உன்னுடன் பேசியிருக்கிறான்... அங்கே வட்டம் முடிந்து விடுகிறது. மேற்கொண்டு வேறு விவரம் கிடைத்தால் நீயும் சொல்லு. நாங்களும் வேட்டையைத் தொடர்ந்து கொண்டிருக்கிறோம்."

பரமேஷ்வர் ஏமாற்றத்துடன் ஃபோன் தொடர்பைத் துண்டித்தார்.

பரமேஷ்வர் தூக்கம் இல்லாமல் ஸீட் அவுட்டில் அமர்ந்திருந்தார். வானில் நட்சத்திரங்கள் இறைந்து கிடந்தன. நசுங்கிய வெள்ளித்தட்டு போல் நிலா.

சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தார்.

போலீஸ் எல்லா விதத்திலும் கை விரித்து விட்டது. அவருடைய செல் ஃபோனிற்கு வந்த ஃபோன்களை கவனித்து அவனிடமிருந்து வந்த ஃபோன்களின் எண்களைக் கூட போலீஸில் சொன்னார். எல்லாமே பப்ளிக் பூத்களிலிருந்து செய்யப்பட்ட ஃபோன்கள்.

அவனுடன் நடந்த உரையாடல்களையெல்லாம் நினைவுபடுத்திப் பார்த்தார். காதம்பரி காசுக்கு ஆசைப்பட்டு பிளாக்மெயில் செய்ய உதவியாக இருப்பவனா என்றால் அதுவும் சரியாகப் பொருந்தவில்லை.

வேறென்ன சொன்னான்?

சடாரென்று நினைவுக்கு வந்தது. வீடியோவில் இருப்பது பொய்ப் படம் என்று தன்னால் சாதிக்க முடியும் என்று அவர் சொன்னபோது அவன் என்ன சொன்னான்?

'பல பொய்களை அப்படித்தானே உண்மையாக்கினீர்கள்? உண்மைகளைப் பொய்யாக்கினீர்கள்?'

நிமிர்ந்து உட்கார்ந்தார்.

பொய்களை உண்மையாக்குவதும், உண்மைகளைப் பொய்களாக்குவதும் அவருடைய வக்கீல் தொழில் தொடர்பான விஷயமல்லாவா? அப்படியானால்.... அவருடைய தொழிலால் பாதிக்கப்பட்டு தண்டனை பெற்றவனாக இருக்கலாமா? அவர்

### எழுதுவது
### சிபா

ஆஜரான வழக்குகளால் தண்டனை பெற்று அண்மையில் சிறையிலிருந்து விடுதலையானவர்கள் யார் யார் என்று விசாரித்தால்?

உடனடியாக டி.எஸ்.பி. கஜேந்திரனுக்கு ஃபோன் செய்தார்.

எதிர்முனை எடுக்கப்பட்டு அவர் "ஹலோ" என்று சொன்ன நேரம் பின்னாலிருந்து குரல் வந்தது.

"அப்பா!"

அபிதா! பரமேஷ்வர் அவசரமாக ஃபோனைத் துண்டித்தார்.

அபிதாவின் முன்னிலையில் அவர் போலீஸிடம் பேசமுடியாது.

"என்னப்பா இன்னுமா நீங்கள் தூங்கவில்லை?" அபிதா எதிரே வந்து நின்றதும் சிகரெட்டை அவசரமாக 'ஆஷ் ட்ரே'யில் போட்டார்.

(கைதியின் கதை தொடரும்)

# ஆறு மனமே ஆறு!

## சிறுவர் துஷ்பிரயோகம்-03

**கு**மாரை வெளியே இருக்கச் சொல்லி அனுப்பிவிட்டு, விமலாவிடம், "குமாரை நன்றாகக் கவனியுங்கள். கூடுதலான அன்பைக் காட்டுங்கள். அவரைக் கண்காணித்து எனக்கு அவ்வப்போது தெரியப்படுத்துங்கள்" என்று கூறி இருவரையும் அனுப்பினேன்.

முகாம் தலைவி மூலம் அடுத்த நாள் தயா மாஸ்டரைச் சந்திக்க ஏற்பாடுகள் செய்தேன்.

மறுநாள் காலை ஒன்பது மணிக்குத் தயா மாஸ்டர் எனது அலுவலகத்திற்கு வந்தார். அவர் வருவதற்கு முன்பே அலுவலக ஜன்னல்களை மூடியிருந்தேன். உள்ளே வரும்போதே அவரிடம் தயக்கம், பய உணர்வு



இருந்ததை அவதானித்தேன்.

"வணக்கம் மாஸ்டர் வாருங்கள், உட்காருங்கள்" என நாற்காலியைக் காட்டினேன்.

"வணக்கம்..." என்று கூறிக் கொண்டே எனது முன்னாலிருந்த நாற்காலியில் அமர்ந்தார். அவரைப் பற்றியறிந்துகொள்ள...

தயா மாஸ்டர் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வன்செயல் காரணமாக இடம் பெயர்ந்து தனியாக முகாமில் வாழ்கிறார். க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்தவர். வயது முப்பத்தியிரண்டு. திருமணமாகவில்லை. அகதிகளுக்கு உதவும் தொண்டு நிறுவனம் நடாத்தும் மாலைநேரப் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார்.

தயா மாஸ்டரின் தன்னினச் சேர்க்கைப் பழக்கத்தைப்பற்றி அறிந்து கொள்வதற்காக அவரிடம் பலவிதமான கேள்விகளைக் கேட்டும், பிடிகொடுக்காமல் பதில் சொன்னார்.

"முகாம் சூழலில் உங்களைப் பற்றி எப்படிக் கதைக்கிறார்கள் என்று தெரியுமா?" என்றேன் நான்.

"ஊர் ஆயிரம் சொல்லும். அதெல்லாம் உண்மையில்லை..."

"தவறாகப் பேசுகிறார்களே..." என்றேன்.

"அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை" என்றார்.

"ஆனால், நாங்கள் கவலைப் படாமலிருக்க முடியவில்லையே..." என்றேன்.

"ஏன்...?" என்றார் தயா மாஸ்டர்.

"எங்களுடைய பிள்ளைகளைப் பற்றி நாம் தானே கவலைப்படவேண்டும்"

"என்ன சொல்கிறீர்கள்...?"

மேசையிலிருந்த பார்சலைப் பிரித்துக்கொண்டே அவரை அவதானித்தேன். குமாரின் காற்சட்டையை வெளியே எடுத்தேன். மாஸ்டரின் பார்வை காற்சட்டையில் நிலைத்தது. முகத்தில் மாறுபட்ட உணர்வுகள் வெளிப்பட்டன.

"இது யாருடைய காற்சட்டையென்று தெரியுமா?" என்று கேட்டேன்.

தயா மாஸ்டர் தடுமாறிக் கொண்டு, "அது... அது... எனக்கு எப்படி..." முடிக்கவில்லை, பதற்றமும், கூச்சமும் வெளிப்பட்டது.

"இது உங்கள் மாணவன் குமாருடையது! தெரியவில்லை... இதிலே காய்ந்திருக்கிறதே அதுவுமா தெரியவில்லை?" என்று கேட்டபடி காய்ந்திருந்த பகுதியைக் காட்டினேன்.

தயா மாஸ்டர் எதுவும் பேசாமல் தலையைக் கீழே குனிந்துகொண்டார். மேற்கொண்டு மறுத்துப் பேச முடியவில்லை. தன்னினச் சேர்க்கை சம்பந்தமான சில சம்பவங்களையும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் அவருக்கு எடுத்துக்கூறினேன்.

"பாலியல் உணர்ச்சித் தூண்டல், தனிமை, சூழல், சந்தர்ப்பம் போன்றவற்றால் ஏற்படும் இச்செயற்பாடுகள் காலப்போக்கில் ஒரு நோயாகவே மாறிவிடலாம். உங்கள் குடும்ப வாழ்க்கையே பாதித்துவிடக் கூடும். இதிலே ஈடுபடுத்தப்படும் சிறுவர்களின் கல்வி பாதிக்கப்பட்டு, எதிர் காலத்தில் சமூகக் குற்றவாளிகளாகவும் மாறி விடுவார்கள். மனிதனாகப் பிறந்தவர்கள் தெரிந்தோ தெரியாமலோ பிழைவிடுவது இயற்கை. என்றாலும் உங்களைப் போல் படித்தவர்கள், நாட்டிற்கு நல்ல பிரஜையை உருவாக்கும் பொறுப்பிலுள்ள ஆசிரியர்கள் இப்படியான கெட்ட பழக்கத்திலிருந்து விடுபடவேண்டியது மிகவும் அவசியம்" என்று விளங்கப்படுத்தினேன்.

### எஸ்.பி.லெம்பட்

அனைத்தையும் அமைதியாகத் தலைகுனிந்தபடியே கேட்டுக் கொண்டிருந்த தயா மாஸ்டர் தலை நிமிராமலே, "எனது இந்தக் கெட்ட பழக்கத்தை உணருகிறேன். வெட்கப்படுகின்றேன். இதற்காக உங்களிடம் மன்னிப்புக் கேட்கின்றேன். தயவுசெய்து இந்த விஷயத்தை வெளியிலே சொல்லிவிடாதீர்கள். நான் குமாருடன் மட்டுமல்ல, இன்னும் பல மாணவர்களுடன் இவ்வாறு நடந்துகொண்டிருக்கிறேன். இந்தப் பழக்கத்திலிருந்து விடுபட எனக்கு உதவிசெய்யுங்கள்..."என்று கூறி விட்டு அழுதார்.

தயா மாஸ்டரின் முதுகில் தட்டி, "உங்களுக்கு உதவுவதற்காகவே உங்களை அழைத்தேன். நீங்கள் என்னோடு ஒத்துப்போனதால் நீங்களும், மாணவர்களும், மாலை நேர வகுப்பும் காப்பாற்றப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா?" என்று கேட்டேன்.

"ஆம்..." என்று ஒத்துக் கொண்டார்.

இதிலிருந்து மீளமுடியும் என்ற நம்பிக்கையையும், தைரியத்தையும் ஏற்படுத்தக் கூடிய வகையில் பேசி, உளவியல் சிறப்பு வைத்தியர் ஒருவருக்குச் சிபார்சுக் கடிதம் ஒன்றையும் வழங்கி, அவரை அனுப்பி வைத்தேன்.

தற்போது தயா மாஸ்டர் பொறுப்புள்ள ஒரு நல்ல ஆசிரியராகச் சேவையாற்றுகிறார்.

"இலங்கைத் தமிழர்களின் இடம் பெயர்வும், முகாம் வாழ்க்கையும் பாலியல் குற்றங்கள் அதிகரிக்கவே வழிவகுத்துள்ளது".

(தொடர்ந்து வரும்...)

அண்டை மண்டலத்திலிருந்து

# மீண்டும் காவிரி நீர்ப் பிரச்சனை!

காணகன்

ஜூன் மாதம் வந்துவிட்டால் கூடவே காவிரிநீர்ப் பிரச்சனையும் வந்துவிடுவதே வழமை. தமிழகத்தின் நெற்களஞ்சியம் எனப் புகழப்பட்ட தஞ்சாவூர் மண் நீரற்று வாடுகிறது. குறுவை சாகுபடி ஏறத்தாழ கைவிடப்பட்டிருக்கிறது.

நடுவர் மன்ற ஆணைப்படி காவிரி நீர் திறந்துவிடப்பட வேண்டுமென கர்நாடகத்தைத் தமிழக அரசு வற்புறுத்துகிறது. "கொஞ்சமாவது விட்டுத்தான் கொடுங்களேன்" என்கிறது மத்திய அரசு. கர்நாடகமோ, "இங்கேயே வரட்சி, இதிலே எங்கே மற்றவர்களுக்குக் கொடுப்பது" எனக் கைவிரித்துவிட்டது.

வறுமையில் உழலும் விவசாயத் தொழிலாளர்கள் எலிகளைப் பிடித்துச் சாப்பிடும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். குறுவைதான் போய்விட்டது. அடுத்து வரவிருக்கும் சம்பாவாவது பிழைக்கட்டும் என விவசாயிகள் இறைவனிடம் மனுப்போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஒருமுறை தஞ்சையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தபோது, மிகப் பெரிய நிலச்சுவான்தார் குன்னியூர் சாம்பசிவ ஐயரின் வழித்தோன்றல்களைச் சந்தித்தபோது அவர்களில் ஒருவர், "ஐயா... காவிரிநீர்ப் பிரச்சனை இப்போதுதான் பூதாகாரமாக ஆகியிருக்கிறது. ஆனால், எழுபதுகளிலேயே ஒரு பெரிய காங்கிரஸ் தலைவர் கூறினார், இனி தஞ்சையில் விவசாயம் செய்வது வேஸ்ட். கர்நாடகம் அணைகளைக் கட்டிக்கொண்டிருக்கிறது. மேலும் மேலும் நிலங்களை அவர்கள் சாகுபடி செய்கிறார்கள். இந்த வேகத்தில் போனால் தமிழகத்தின் டெல்டா பகுதிகளுக்கு காவிரிநீர் கிடைக்காது. நீங்கள் பேசாமல் நிலங்களை விற்றுவிட்டு வேறேதாவது பிஸினஸ் செய்யுங்கள் என்று". பின்னாளில் இந்தியாவில் மிகப் பெரிய பதவிக்கு உயர்ந்த அந்த மனிதரின் தீர்க்கதரிசனம் ஒரு புறமிருக்க, மூத்த அரசியல் தலைவர்களெல்லாம் காவிரிநீர்ப் பிரச்சனை மேலும் கடுமையாகப் போகிறதென்பதை உணர்ந்தும், தமிழகத்தின் நலனைக் காப்பாற்ற நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்பதை இங்கே நோக்கலாம்.

அதைவிடவும் கொடுமை, விவசாயம் மோசமாகப் பாதிக்கப்படுவதை நேரிலேயே பார்த்தும், தொடர்ந்து சரிவினைச் சந்தித்தும், வேறெதுவும் செய்யவியலாமல் மழையினை நம்பிக் காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கும் விவசாயிகளின் நிலைமைதான்.

குறுவை மூன்று மாதங்களில் அறுவடை செய்யப்படும் பயிராகும். அதிலேதான் விவசாயிகளுக்கு அதிக வேலையிருக்கும்.

சம்பாதான் டெல்டா பகுதி விவசாயிகளின் உயிர்நாடி. ஆனாலும்கூட குறுவைதான் நிலமற்ற தொழிலாளர்களைப் பொறுத்தவரை இருவேளை உணவுக்கு வழிசெய்யும்.

கர்நாடக மாநிலத்தில், மைசூர் மாவட்டத்தில் அதிகமாக விவசாயம் செய்யாதபோது, அணைகள் கட்டப்படுவதற்கு முன், அங்கே பெய்யும் மழை நீரெல்லாம் தமிழ்நாட்டிற்கு ஓடி வந்துவிடும். இந் நீர் மேட்டூரில் சேமித்து வைக்கப்பட்டு குறுவைக்கும், சம்பாவுக்குமெனத் திறந்துவிடப்படும். இருபோகம், முப்போகம் எனச் சாகுபடி செய்து, விவசாயிகள் செழித்து வந்தனர்.

இரு மாநிலங்களுக்குமிடையே மோதல் உக்கிரமாக, நீதிமன்றம், நடுவர் மன்றமெனப் பிரச்சனை வளர்ந்துவிட்டது. தமது தேவைகளுக்கெல்லாம் போக மீதமிருப்பதைத்தான் கொடுக்க முடியுமென்பதில் கர்நாடகம் உறுதியாயிருக்கிறது.

சம்பா பருவத்தின்போது வடகிழக்குப் பருவ மழை வந்துவிடுகிறது. தமிழகத்தில் நல்ல மழை பெய்துவிட்டால், அந்தப் பயிர் தப்பிவிடுகிறது. ஆனால், குறுவையோ கர்நாடகத்தின் தர்ம சிந்தனையை நம்பித்தான் விதைக்கப்படுகிறது.

தென்மேற்குப் பருவ மழை உரிய நேரத்தில் தொடங்கி, கணிசமாகவும் பெய்தால்தான், மேட்டூருக்கு நீர் வந்து சேர்கிறது. ஒரு சமயம் பொய்த்துப் போனால், விவசாயிகள் வயிற்றில் ஈரத்துணிதான் கட்டவேண்டும். அத்தகைய நிலைதான் இப்போது வந்திருக்கிறது.

காவிரி நீர்ப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் தனது இடைக்காலத் தீர்ப்பினில், கர்நாடகத்தில் மழை குறைவாக இருக்கும் காலங்களில், தேங்கியிருக்கும் நீரினை இரு மாநிலங்களும் எவ்வாறு பங்கிட்டுக்கொள்ளலாம் என விரிவாகப் பரிந்துரை செய்திருக்கிறது. ஆனால், கர்நாடகம் அதை முற்றிலுமாக அலட்சியப்படுத்துகிறது.

பொதுவாகவே, அம்மாநிலத்தில் தமிழர்களுக்கு எதிரான உணர்வுகள் வளர்ந்து கொண்டேயிருக்கின்றன. அத்தகைய உணர்வுகளை எதிர்த்துப் போராடி, இரு மாநிலங்களுக்குமிடையே நல்லுறவை வளர்க்க எந்த அரசும், எந்த முதல்வரும் முயற்சிகள் மேற்கொள்ளவில்லை.

அதேநேரம், தமிழகத்தின் பக்கம் எல்லா நியாயமுமிருப்பதாகக் கூறமுடியாது. "இந்தியா ஒரு காலனி நாடாக இருந்தபோது, மைசூர் சமஸ்தானத்திற்கும், சென்னை இராஜதானிக்கும் இடையே ஏற்பட்ட 1924ம் ஆண்டு ஒப்பந்தம் இன்னமும் செல்லும், அந்தளவு நீர் இப்போதும் கொடுக்கப்பட வேண்டும்" என்று தமிழக அரசு ஒருபுறம் கூறுகிறது.

இன்னொரு புறம், 'தமிழா விழித்தெழு! கனக விஜயரைக் கல் சுமக்க வைத்த பரம்பரை அல்லவா நம்முடையது' என முழங்குகின்றனர் மேடைப் பேச்சு வீரர்கள். இரு மாநிலங்களுக்கும் நியாயமான தீர்வு காண்பதற்கான சூழல் இங்கேயும் உருவாகவில்லை.

முதல்வர் ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையொன்றில், "தமிழகம் பழங்காலந்தொட்டே குறுவை சாகுபடி செய்துவருகிறது. ஆனால், கர்நாடகத்திலோ கோடைகாலத்திலும் நெல் பயிரிடப்படுகிறது. 1971-72ல் 145 மில்லியன் கன அடி நீரைக் கோடைகால சாகுபடிக்குப் பயன்படுத்திய அம்மாநிலம், இப்போது 520 மில்லியன் கன அடி நீரைப் பயன்படுத்துகிறது" எனச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.



ஆண்டுதோறும் ஜூன் 12ம் நாள் குறுவைப் பாசனத்திற்காக மேட்டூர் அணை திறந்துவிடப்படுவது வழக்கம். ஆனால், அணை வரண்டுபோனதன் விளைவாக இம்முறை அப்படித் திறந்துவிட முடியாது என அதிகாரிகளும், அமைச்சர்களும் ஒரு மாதத்திற்கு முன்னிருந்தே சூசகமாகக் கூறத் தொடங்கிவிட்டனர்.

பிறகு பத்திரிகைகளில் டெல்டா பகுதிகளின் பிரச்சனை குறித்துக் கட்டுரைகள் வெளிவரத் தொடங்கின.

விவசாயிகளின் அமைப்புக்களும், எதிர்க்கட்சிகளும் அரசு மெத்தனமாக இருக்கிறது எனச் சாடின.

வேறு வழியில்லாமல், "நடுவர் மன்றத்தின் பரிந்துரைகளை அமுலாக்கவென அமைக்கப்பட்ட பிரதமர் தலைமையிலான காவிரி ஆணையத்தைப் பகிஷ்கரிக்கிறோம். உச்ச நீதிமன்றத்தில் புதிய வழக்கொன்றைத் தொடுக்கப் போகிறோம். இனி, கர்நாடகத்துடன் பேச்சு வார்த்தை கிடையாது" என ஜெயலலிதா அறிவித்தார்.

தொடர்ந்து பாதிக்கப்பட்ட 9.63 லட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கென சில நிவாரணத் திட்டங்களையும் அறிவித்தார். ஆனால், முதலமைச்சரின் அறிவிப்பு வெறும் கண்துடைப்பே! அவையெல்லாம் ஏற்கனவே அமுலாக்கப்பட்டுவந்த சில திட்டங்களே! எனவே, ஆகப்போவது ஒன்றுமில்லையென்ற விமர்சனங்கள் பல தரப்புக்களிடமிருந்தும் எழுந்தன.

உண்மையிலேயே கர்நாடக அணைகளில் மிகக் குறைந்தளவு நீர்தான் இருக்கிறது. காவிரிநீர்ப் பிடிப்புப் பகுதிகளில் முன்னெப்போதும் இல்லாத அளவு மழை பற்றாக்குறை எனவும் கூறப்படுகிறது.

நடுவர் மன்ற ஆணையின்படி கர்நாடகம் மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு ஜூன் முதல் செப்டம்பர் வரையான காலகட்டத்திற்குள் 1370 மில்லியன் கன அடி நீர் வழங்க வேண்டும். அதையெல்லாம் இப்போது நினைத்தே பார்க்க முடியாது. குறுவை சாகுபடியின்போது நாள்தோறும் 10 மில்லியன் கனஅடி நீர் மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்படவேண்டும் என்ற நிலையில், ஏதோ இப்போதைக்கு நல்லெண்ணத்தின் வெளிப்பாடாக 30 மில்லியன் கனஅடி நீரையாவது கர்நாடகம் தமிழகத்திற்கு வழங்கலாம் எனப் பிரதமர் வாஜ்பேயி, அம்மாநில முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணாவைக் கேட்டுக் கொண்டார்.

"மன்னிக்கவும், எங்களிடம் போதுமான நீரில்லை. எனவே தமிழகத்திற்குக் கொடுக்கும் நிலையிலில்லை" என்று கூறிவிட்டார் கிருஷ்ணா.

"நதிநீர் ஆணையத்தைப் புறக்கணிப்பது சரியான முடிவல்ல" என்கிறார் தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கப் பொதுச் செயலாளர் எஸ். ரெங்கநாதன்.

'ராஜ்குமார் கடத்தலின்போது பலமுறை சந்தித்த இரு மாநில முதல்வர்களும் காவிரிக்காக ஏன் சந்திக்கக் கூடாது' என வினவுகிறார் அவர்.

மேலும்,"ஆணையத்தைக் கூட்டாமல், பிரதமர் தனது பொறுப்பைத் தட்டிக் கழித்தால் அல்லது சரியான ஆணையக் கூட்டங்களில் ஒரு மாநில முதல்வர் பங்கேற்காதிருந்தால், இந்திய அரசியலமைப்புச் சட்ட நெறிமுறைகளுக்கு எதிராக நடந்துகொள்கின்றனர் எனக் குற்றஞ்சாட்டி உச்ச நீதிமன்றில் நியாயம் கேட்கலாம்" எனவும் அவர் ஆலோசனை கூறுகிறார்.

குறுவைச் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளதால் 500 கோடி ரூபாய்களுக்கு மேல் இழப்பு. சம்பாவின் நிலைமை பற்றியும் உறுதியாகக் கூறமுடியாது. "தமிழகத்தின் மக்கட் தொகை 6.5 கோடியென்றால், ஏறத்தாழ 1.5 கோடி பேர் காவிரி நீர்ப்பாசனப் பகுதிகளில் வாழ்கிறார்கள். அந்தப் பிராந்தியமே விவசாயப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், அங்குள்ள வர்த்தக நிறுவனங்களெல்லாம் நிலைகுலையும் அபாயமிருக்கிறது" என எச்சரிக்கிறார் தமிழ் நாடு விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் வே. துரைமாணிக்கம்.

"காவிரி நீர்ப் பிரச்சனையில் துரோகம் இழைத்தது யார்? என்ற பட்டிமன்றம் தேவையற்றது. மாறாகத் தண்ணீரை எப்படியாவது பெறவேண்டியது தலையாய கடமையாகும்" என்றும் அவர் வலியுறுத்துகிறார்.

யார் கேட்கிறார்கள்? தனது அமைச்சரவையை மாற்றி அமைத்தலில் இறங்கிவிட்டார் பிரதமர். தனது கட்சிக்கு இரண்டு பதவிகளைக் கேட்கிறார் தமிழினக் காவலர் ஐயா டாக்டர் ராமதாஸ். "நான் பிரச்சனையினை அரசியலாக்க விரும்பவில்லை" என்று கூறிவிட்டு மொழிப்போர் வரலாற்றை அசைபோட்டுக்கொண்டிருக்கிறார் கலைஞர்.

"எனக்குப் பதவி வேண்டாம். இப்படியோர் அற்புதமான பிரதமரின் நெருக்கம் கிடைத்திருப்பது, அதன் மூலம் நான் மக்களுக்குத் தொண்டு செய்வதே பெரும் பேறு" என்று புரிக்கிறார் வைகோ.

"இனி எங்களுக்கு ஒரே நம்பிக்கை உச்ச நீதிமன்றம்" என்கிறார் ஜெயலலிதா.

விவசாயிகள் இறைவனை இறைஞ்சுகிறார்கள். கூலித் தொழிலாளர்கள் எலிவேட்டையில் தீவிரமாக இறங்கிவிட்டார்கள்.



# காற்றுவாக்கில்... 5

## "சோப்" விளம்பரம்

*"அசைக்க முடியாத அலை வரிசை".*

"சூரியன்" வானொலி பற்றி அறிவிப்பாளர் ஒருவரின் குரல் இன்னமும் கேட்கிறது. "சக்தியை மீறிய சக்தி வேறில்லை" என்றவாறு அதே குரலில் "சக்தி" வானொலியில் கேட்கிறது. ஆக, நம்பகத் தன்மையற்ற ஒரு நிலையே இதனால் ஏற்படுகிறது என்பதை ஏனோ இந்தப் புதிய வானொலிக்காரர்கள் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள். உதாரணத்துக்குச் சொல்லப்போனால், ஒரு "சோப்" விளம்பரத்துக்குப் பயன்படுத்தப்படும் (அறிவிப்பாளரின்) குரலை இன்னொரு ரக "சோப்" விளம்பரத்தில் பயன்படுத்த அனுமதிக்கப்படுவதில்லை. இத்தகைய பண்புகளை அடக்கியதுவே 'Code of Ethics' என்று குறித்துக் கூறப்படும் விதிமுறைக் கோவை. இவ்விதமான விதிமுறைகள் மீறப்படுவதனால் அவை நேயர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும்; ஏன் விளம்பரதாரர் எதிர்பார்க்கும் பயனைக் கூடப் பெறமுடியாது போய்விடும்.

## கையும் கணக்கும் சரி

"மெகா மியூஸிக்கல் நைற்" நிகழ்ச்சியை தன் காதால் கேட்ட "காற்றாடி"க்கு சென்றவாரம் மேலும் சில செய்திகள் "காற்றுவாக்கில்" கிடைத்துள்ளன. "எங்கள் நிகழ்ச்சியைக் கண்டிக்க இவர்கள் யார்" என்று சம்பந்தப்பட்ட ஒருவர், ஒரு சிலர் மீது தாறுமாறாகப் பொரிந்து தள்ளினாராம். ஆனால், தென்றலுக்குப் பொறுப்பானவர் அவரை அழைத்து "ஏராளமானோர் அப்படித்தான் சொல்கிறார்கள்; அதில் உண்மை இல்லாமலில்லை" என்று அவரது வாயை அடைத்து அனுப்பிவிட்டாராம். சபாஷ்! மேலும், இந்நிகழ்ச்சி மூலமாக மூன்று இலட்சம் ரூபா வருமானத்தைப் பெற முடியும் என்று "ஆசை" காட்டினார்களாம் சிலர். அதனால் நிகழ்ச்சி நடத்த அனுமதி வழங்கப்பட்டது. விளம்பர அனுசரணை மூலம் கிடைத்ததோ சுமார் ஒரு இலட்சத்து 25ஆயிரம் ரூபாதானாம்; இந்த நிகழ்ச்சிக்கான செலவுத் தொகையோ சுமார் ஒரு இலட்சம் ரூபாவாம். அவ்வாறாயின் கிடைத்த தேறிய வருமானம் எவ்வளவு?

கையும் கணக்கும் சரிதான் போலும்! சந்தைப்படுத்தல், விளம்பரக்கலை ஆகிய இரு துறைகளிலும் ஏற்பட்டுள்ள நவீனத்துவத்தை, முன்னேற்றத்தை சரியாகப் புரிந்து கொண்டு அத்துறை சார்ந்த புதியவர்கள் சேர்க்கப்படும் வரை மீட்சி இல்லை என்று விஷயமறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

## மூடு விழாவுக்கு முன்னேற்பாடு?

சில நாட்களுக்கு முன்னர் இலங்கை வானொலி மூத்த கலைஞர்கள் சிலர் "காற்றாடி"யுடன் கதைக்க நேரிட்டது. அங்கு புதிய "ஓடர்" ஒன்றைப் பெரியவர்கள் போட்டிருக்கிறார்களாம். அதாவது வானொலி நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளும் கலைஞர்களுக்கு, அவர்கள் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளும் பொழுது கொடுப்பனவு வழங்கப்படக் கூடாதாம். வேண்டுமென்றால் கொடுப்பனவின்றி "சும்மா" செய்யலாமாம். புதிய தலைமைப்பீடத்தின் புதியவிதி இதுதானாம். கலைஞர்களுக்கு இவ்வாறானால் அங்கு 'பெரும்' பதவி வகிப்பவர்கள், வானொலி நிதி நெருக்கடியை எதிர்நோக்குவதனால், சம்பளம் இன்றி 'சும்மா' பணியாற்றுவார்களா? தங்களை தூர

காற்றாடி

விலக்கிவைக்கும் முயற்சி இது என்று கலைஞர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். கலைஞர்களுக்கு ஆதரவளிப்பது, அவர்களுக்கு உற்சாகமூட்டுவது இலங்கை வானொலியின் தலையாய கடமையல்லவா? கலைக் கோயிலாக விளங்குவதாகக் கூறப்படும் இலங்கை வானொலி, கலைஞர்களுக்கு இவ்வாறு தீங்கு விளைவிக்கலாமா? சமாதான "கோரஸ்" பாடும் சந்தடியில் கலைஞர்களின் வேதனைக்குரல் எங்கே கேட்கப் போகின்றது! இது மட்டுமல்ல, தமிழ்த் தேசிய சேவையில் அடுக்கடுக்காகக் கை வைக்கத் தொடங்கிவிட்டார்களா? என்று காற்றுவாக்கில் கிடைத்த செய்தி எதையோ பூடகமாகத் தெரிவிக்கின்றது. ஒருவேளை தேசிய தமிழ் ஒலிபரப்புத்துறையில் அனுபவஸ்தரான ஒரு கட்டுப்பாட்டாளருக்கு சேவை நீடிப்பு வழங்கப்படவில்லை என்ற செய்தி சொல்லாமல் சுட்டிக்காட்டப்படுகிறதா? அவருக்கு வயது 55 மட்டுமே, அவருக்கு ஏன் இந்த அநீதி. இவர் மட்டுமா 55 வயதை எட்டியிருக்கிறார்? இப்படிக் கேட்கின்றனர் இத்துறையில் அக்கறை காட்டுபவர்கள்.

பாதிக்கப்படப் போவது அவரல்ல.

தமிழ் ஒலிபரப்பும், தமிழ் வானொலி நேயர்களுமே...

## பொன் மொழி

15/06/2002 அன்று இரவு 9.15 மணியளவில் தென்றலில்தெரிவிக்கப்பட்ட ஒரு பொன் வாக்கு " நல்ல ஒலிபரப்புக்கு விளம்பரம் தேவை"- இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

நீங்கள் அறிந்த செய்திகளையும் சேர்த்து எழுதுங்கள்.

**"காற்று வாக்கில்"**
**தினமுரசு, த.பெ.இல.: 1772**
**கொழும்பு.**

# ஸ்போர்ட்ஸ்

## இலங்கையணிக்குத் தோல்விக்கு மேல் தோல்வி!

இங்கிலாந்தில் நடைபெறும் இலங்கை, இந்தியா, இங்கிலாந்து அணிகள் கலந்துகொள்ளும் முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில், இலங்கையணி கலந்துகொண்ட முதலிரண்டு போட்டிகளிலும் தோல்வியைத் தழுவியது.

இலங்கையுடனான முதல் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர் முடிவில் 297 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கையணி 240 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இந்திய-இலங்கை அணிகளுக்கு இடையிலான போட்டி ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இதன்போது நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கையணித் தலைவர் சனத் ஜயசூரிய முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இலங்கையணியின் ஆரம்பம் ஓரளவு சிறப்பாக அமைந்த போதும் இந்திய அணியின் அஜித் அகார்கர் பந்து வீச ஆரம்பித்ததும் நிலைமை தலைகீழாக மாறியது. அகார்கர், சஹீர்கான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இலங்கையணியின் சார்பில் சனத் ஜயசூரிய 36 ஓட்டங்களையும், மஹேல ஜயவர்தன 62 ஓட்டங்களையும் பெற்றனர். மொத்தமாக 202 ஓட்டங்களை இலங்கையணி பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 46வது ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 203 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கையடைந்தது.

முதல் சுற்றில் இரண்டு போட்டிகளிலும் தோற்றுவிட்ட நிலையில் இலங்கையணி இறுதிப் போட்டிக்குத் தெரிவாவது சந்தேகத்திற்கிடமாகியுள்ளது.

முத்தையா முரளிதரன் இப்போட்டிகளில் பங்கு பற்றாதது இலங்கையணியின் பந்துவீச்சுத் திறனை வெகுவாகப் பாதித்துள்ளதெனக் கிரிக்கெட் விமர்சகர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

ஏற்கனவே, இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரில் இலங்கையணி தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலக்கிய நயம்

## காதல் உணர்வினிலே கண்களில் நீர் துளிர்க்கும்

தருவது முழுடில்யன்

விஜயனின் அணைப்பில் கிடந்தாள் அமுதா. இருவரும் வெட்கத்தைத் தொலைத்திருந்தனர். இரண்டு உடல்கள் என்ற பிரக்ஞையை இழந்து நான்கு கண்களும் ஒருவருடையதே என்னும் நாணமிலா நிலையை எய்தியிருந்தனர்.

ஒரு குழந்தையைப் போன்றதான பாவனையில் மார்புக்குள் ஒடுங்கிக் கிடந்தவள் மீது பார்வையை ஓடவிட்டான் விஜயன்.

நெகிழ்வான கண்ணாடி போலத் தெரியும் அல்வாத் துண்டின் ஞாபகம் வந்தது. மேனியில் கைகள் வழுக்கியது. இல்லை... இது நீரூற்றிப் பிசைந்துவிடப்பட்ட தந்தமா?

"கனவு அங்காடி, காம ஜெபமாலை, அழகின் வங்கி, ஆனந்த நாற்று..." என்று முணுமுணுத்துச் சென்றவனை இடைமறித்தது அவள் தொண்டைக்குள்ளிருந்த வயலின்.

"என்ன?" முகத்தை நிமிர்த்தாமலே சிணுங்கினாள்.

"உன்னைப் போல் ஒருத்தியை முழுதாகப் பார்த்துவிட்ட பிரமிப்பில் ஒரு கவிஞர் எழுதியிருக்கிறார்..."

"அவ்வளவுதானா?"

"இல்லை... தொடர்கிறார்... அன்பின் அடிச்சுவடு, ஆணின் அரிதாரம், எழுதாத காவியம், எட்டாவது அதிசயம், துக்க வித்து, தூரிகையின் பரிணாமம்..."

"போதும்...போதும்! இந்தக் கவிஞர்களுக்குப் பெண்களை விட்டால் புலம்புவதற்கு வேறு விடயங்களே இல்லையா?"

"கவிஞர்கள் சொல்லும் முறை தெரிந்தவர்கள். ஆண்களுக்கு இதை விட்டால் புலம்பித் துடிக்க வைக்கிற சித்திரவதை வேறு என்னதான் இருக்கிறது?"

"சித்திரவதையா?" கேட்டுக்கொண்டே முகத்தை நிமிர்த்தி அவன் கழுத்துக்கு எக்கினாள்.

அவன் தனது வலது கரத்தால் அவள் கன்னங்களை அழுத்திப் பிடித்தான். அந்தப் பளிங்கில் விரல்கள் மேலும் வழுக்கின. மிகச் சிறிய குமிழாகத் துருத்தியிருந்த கீழுதட்டில் வந்து அவன் விரல்கள் நின்றன. அந்தக் குமிழ் மென்மைத் திரட்சியை விரல்களிடையே வைத்து அழுத்தினான்.

"இந்த உதடுகளின் அசைவில் என் உயிரை உறிஞ்சுகிறாயே அது சித்திரவதை இல்லையா?"

அவன் விரல்களின் அழுத்தம் தாங்காமல் அவள் "வி..ழு..ங்...கள்..." என்று குழறினாள்.

"ஆமாம் விழுங்கத்தான் போகிறேன்" என்று குனிந்தான்.

அச்சத்தில் அவள் இமைகள் படபடத்தன. விஜயன் குனிந்த நிலையில் அமுதாவின் கண்களுக்குள் பார்த்தான்.

"இதோ இந்த இமைகளின் அசைவால் என் இதயத்தைத் தோண்டுகிறாயே... இது சித்திரவதை இல்லையா?"

அவள் கண்கள் மேலும் விரிந்தன.



"அடடா! உள்ளே... சமுத்திரத்தின் உள்ளே என்னை அமுக்கி மூச்சுத் திணற வைப்பது என்ன காருண்யமா?" என்று சிரித்தான் விஜயன்.

அவள் உதடுகளில் புன்னகை ஒன்று சிறு மின்னலென நெளிந்தது.

இல்லை... இது மின்னல் இல்லை.உதடுகளின் இணைவில் தீக்குச்சி கிழிக்கிறாள். அந்தத் தீ என் இரத்தத்தில் அல்லவா பற்றுகிறது!

"ம்... என்ன திடீர் யோசனை?"

"இனிக்கின்ற தீ!" என்றான் அவள் காதருகே குனிந்து.

"எது?"

"இந்த இமைக்கின்ற சிலை, இசைக்கின்ற நதி!" என்று அவள் காதுமடலைக் கடித்தான்.

"காதுக்குள் தேன் பாயலாம். காதுமடலே தேனாக இனிக்குமா?" என்று அவள் சிரித்தாள்.

"இதோ, தொட்டணைத்து ஊறும் தேன்கிணறே!" என்று அவளைத் தன்னுடன் இறுக்கினான்.

"நா...னா...?" என்று திக்கினாள் அமுதா.

"உன்னைத் தொட்டால் தேன் சுரக்கிறது என்பதும் முழு உண்மையாகாது. நீ தொட்டால் எங்கிருந்தும் தேன் சுரக்கும் என்பதே உண்மை!"

"அப்போ நீயும்தான் தேன்கிணறு" என்று அவள் சிரித்தாள், அவன் முதுகை அணைத்தபடி.

அவன் பரவசமாகினான்.

"இது சித்திரவதை இல்லை... சிற்றின்ப வதை" என்றான்.

அவள் மனமும் உடலும் நெகிழ்ந்தாள். அவனுடன் இழைந்தாள்.

அவன் பரவசத்தில், "இன்பப் பொக்கிஷமே!" என்றான். அவளுடலெங்கும் முகர்ந்து பார்ப்பவன் போல் இயங்கினான்.

அவள் தத்தளித்து அல்லாடினாள்.

"என் செல்லமே!" என்று அவன் நெட்டுயிர்த்தான். அவள் கண்களைப் பார்த்தான்.

நீர் துளிர்த்திருந்தது.

"அழுகிறாயா?"

"இல்லை" என்று சிரிக்க முயன்றாள்.

"ஆனந்தக் கண்ணீர்?" என்றான்.

"இல்லை...தூசி" என்றவாறு கண்ணீரை விரலால் சுண்டினாள் அமுதா.

"கண்களுக்கும் தூசிக்கும் அப்படி என்ன பொருத்தமோ?"

"ஏன்?"

"அந்த நாளிலிருந்து இன்றுவரை, தங்கள் உணர்ச்சிகளை மறைக்க எல்லோருக்கும் தூசிதானே உதவுகிறது."

அமுதா பேச்செழாமல் தொண்டையடைக்க அவனைப் பார்த்தபடி இருந்தாள்.

"காதல் உணர்வு பெருகினாலும் கண்ணில் நீர் துளிர்க்கிறது" என்றான் விஜயன்.

"ஏன்?" என்றாள் கிணற்றுக்குள்ளிருந்து வந்த குரலில். அப்பாவித்தனமாக அவனைப் பார்த்தாள்.

"இப்படித்தான் சோழனது குதிரைப் படையைத் தெருவில் கண்ட பெண்ணுக்கும் காதற் பெருக்கில் மகிழ்ச்சியால் கண்ணில் நீர் பொங்குகிறது. தோழி நகைப்பாளே என்ற அச்சத்தில், குதிரைகள் கிளப்பிய தூசியால் கண் கலங்கியதாகக் கூறி கண்ணைக் கசக்குகிறாள் அந்தப் பெண்."

கல்லுயர்தோட் கிள்ளி<br>
பரிதொழுது கண்பனிசோர்<br>
மெல்லியலார் தோழியர்முன்<br>
வேறொன்று- சொல்லுவரால்<br>
பொங்கும் படைபரப்பி<br>
மீதெழுந்த பூந்துகள் சேர்ந்<br>
தெங்கண் கலுழ்ந்தனவால்<br>
என்று!

(வீரசோழியம்: நூற்பா 27)

# சிந்தியா பதில்கள்

★ **சிந்தியா! சாவுக்குப் பயந்தவரா நீங்கள்?**

கே.சுபாஜினி, இளவாலை.

பிரபல ஹொலிவூட் இயக்குனர், நடிகர் வூடி அலன் சொன்னதை வழிமொழிகிறேன்.

"சாவென்றால் எனக்குப் பயமில்லை. அது வரும்போது நான் அங்கேயிருக்க விரும்பவில்லை. அவ்வளவுதான்."

●❀●

★ **மூதூர் சம்பவம்?**

க.கமால்தீன், ஏறாவூர்-03.

துரதிர்ஷ்டவசமானது. தமிழ் ஊடகங்கள் எல்லாம் வி.புலிகளின் இமாலயப் பொறுமையை சிலாகித்து எழுதிவிட்டன. எனக்கென்னவோ இந்த நடுநிலைமை(!?)த் தமிழ் ஊடகங்கள் காலத்துக்குக் காலம் தமிழ்ப் பகைவர்களை இனங்காட்டும் விதம் அச்சம் தருவதாக இருக்கிறது.

●❀●

★ **உங்களுக்குச் சலிப்பூட்டுவது எது? உற்சாகம் தருவது எது?**

எட்வேட் நிஷாந்தன்,பெரிய நீலாவணை-01.

சலிப்பூட்ட ஆயிரம் விஷயங்கள். உற்சாகமூட்டுவதற்கு, எப்போதாவது திறமையும், சரியான நபர்களும் அங்கீகரிக்கப்பட்டுப் பாராட்டுப் பெறும் ஒரு சில தருணங்கள்தான்! சலித்துக் கொண்டே வாழுமளவுக்கு அலுப்பூட்டும் விஷயங்கள் நம்மிடையே ஏராளம். பிரபலமாக இருப்பது கூட மிக அலுப்பான விஷயம் என்று கவிஞர் எமிளடிக்கின்ஸன் சொன்னார். ஏன் உன் கவிதைகளை நீ பிரசுரத்திற்கு அனுப்பவில்லை? என்று கேட்டதற்கு அந்தப் பதில். கவிஞர் ஆத்மாநாமிற்கோ, ஏதாவது சொல்ல வேண்டும் என்பது கூட அலுப்பைத் தருகிறது.

"குற்றியலுகர முற்றியலுகரச் சந்திகளை<br>
சீர் சீர் ஆய்ப் பிரித்து<br>
தளை தளையாய் அடித்து<br>
ஒரு ஒற்றை வைத்து<br>
சுற்றிச் சுற்றி வந்து<br>
எங்கும் மை நிரப்பி<br>
எழுத்துக்களை உருவாக்கி<br>
பொருளைச் சேர்த்து<br>
வார்த்தைகள் ஆய்ச் செய்து<br>
ஒவ்வொரு வாக்கியத்திற்கும்<br>
கமா மற்றும் முற்றுப்புள்ளி வைத்து<br>
ஏதாவது சொல்லியாக வேண்டும்<br>
நமக்கேன் வம்பு."

●❀●

★ **பறக்கும் தட்டில் வரும் மர்ம உருவங்கள் பற்றி?**

டி.ர.ஜீவன், கொழும்பு 13.

பூமிக்கு முன்பே வெடித்துக் குளிர்ந்து, உயிர்கள் உண்டாகி, பிரபஞ்சத்தின் எங்கோ ஒரு வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும் கோள்கள் இருக்கலாம். நாங்கள் சந்திரன், செவ்வாய், சுக்கிரன் என்று போய்ப் பார்த்து வருவதற்குள் வேறொரு திக்கிலிருந்து "இதோடா,பூமி என்றொரு கல் இங்கே சுற்றிக் கொண்டிருக்கிறதே.... கொஞ்சம் பார்த்து விட்டுப் போகலாம்..." என்று நம்மை விடக் கூர்ப்பில் மூத்த பயணிகள் வந்திறங்கி விடலாம். அந்த விருந்தாளிகளை எந்நேரமும் எதிர்பார்த்திருக்கும் மனித அலை பாய்ச்சல்தான் பறக்கும் தட்டுச் செய்திகள்!

●❀●

★ **உங்களுக்குப் பதில் தெரியாத கேள்விகள் வருகிறபோது என்ன செய்கிறீர்கள்?**

பி.நிவாஸ், சாமிமலை.

உடனடி விளைவு, "மூட் அவுட்" டாகி சோர்ந்து விடுகிறேன்.பின்னர் தெளிவடைந்து மனதுக்குள் நன்றி சொல்லிக்கொள்கிறேன்- நமக்கு இவையிவை எல்லாம் தெரியாது என்று அறிந்து வைத்துக் கொள்வதே அறிவு என்பதால்....

●❀●

★ **ஹரீஸ் ராகவேந்திராவினதும், அனுராதா ஸ்ரீராமினதும் முகவரிகளைத் தரமுடியுமா?**

பி. சாந்தி டெல்மா, வத்தளை.

ஏன்? அவர்கள்தான் பாதி நாட்கள் இங்கேயே வந்து விடுகிறார்களே!.

●❀●

★ **'பஞ்சதந்திரம்' படத்தில் இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் என்று சந்தோஷப்பட்டேன். ஆனால் தேவா என்கிறார்களே?**

எல்.புஷ்பா, மாத்தளை.

தேவா என்றால் ஏன் கவலைப்படுகிறீர்கள்? பாவம், சொந்தமாய்த் தப்பெதுவும் செய்யத் தெரியாதவர் அவர்!



●❀●

★ **சிந்தியா, உங்கள் வயதை அறிய ஆவல், முடியுமா?**

சி.டென்சன், கொட்டாஞ்சேனை.

அதைச் சொல்ல எனக்கென்ன தயக்கம்! இன்னும் அழகான பெண்களைப் பார்த்தால் புலன்கள் அனைத்தும் தடுமாறி, சில நிமிடங்களுக்கு அவை தங்கள் மற்ற நடவடிக்கைகள் அனைத்தையும் ஒத்திவைத்துவிடும் வயதைத் தாண்டவில்லை.

●❀●

★ **"துன்பத்தில் சிரி" என்கிறார்களே... சிரித்தால் "அரை" என்று சொல்ல மாட்டார்களா?**

தே.சுமணன், கோப்பாய்.

அதுதானே, பிறகு எப்போதுதான் எங்களை "முழுசாக" காட்டிக் கொள்வது!

●❀●

★ **விலைவாசி உயர்ந்து கொண்டே போகிறது. எங்கள் வாங்கும் சக்தியும் அதிகரிக்க ஏதாவது செய்ய வேண்டாமா? பொருட்களின் விலையேற்றத்தோடு ஒப்பிட்டால் சம்பளத்தை எத்தனை சதவீதம் அதிகரிக்க வேண்டும்?**

நைமா சிராஜ், வெலிமட.

ஆளை விடுங்கள். புள்ளிவிபரங்களுக்கும் எனக்கும் ஒஸாமா- புஷ் உறவுதான்! வேண்டுமானால் அது பற்றிய ஒரு ஜோக்கைச் சொல்கிறேன்.

ஒரு புகழ்பெற்ற புள்ளி விபர அறிவியலாளர் எப்போதுமே விமானத்தில் பயணம் செய்யமாட்டார். ஏனெனில், விமானத்தில் வெடிகுண்டு இருக்க, லட்சத்தில் ஒரு வாய்ப்பு இருக்கிறது என்பதைக் கணக்கிட்டு வைத்திருந்தார். அந்த அளவுக்கு ரிஸ்க் எடுக்க அந்தப் புள்ளிவிபர அறிவியலாளர் தயாராக இல்லை.

ஒரு நாள் புள்ளிவிபரக்காரர்களின் மாநாட்டில் அவரைச் சந்தித்த ஒரு நண்பர், "எப்படி வந்தீர்கள்? ரயிலிலா? பஸ்ஸிலா?" என்று கேட்டார்.

"இல்லை, பறந்துதான் வந்தேன்."

"விமானத்தில் வெடிகுண்டு இருக்க வாய்ப்புகள் இருப்பதாகக் கணக்குப் போட்டு வைத்திருந்தீர்களே?" ஆச்சரியத்தோடு நண்பர் கேட்டார்.

"ஒரு வெடிகுண்டு ஒரு விமானத்தில் இருக்க லட்சத்தில் ஒரு வாய்ப்பு. ஆனால், ஒரே விமானத்தில் இரண்டு வெடிகுண்டுகள் இருக்க எவ்வளவு வாய்ப்பு எனக் கணக்குப் போட்டுப் பார்த்தேன். (1/100,000x 1/100,000). இதற்கு மிகமிகக் குறைவான வாய்ப்புத்தான். எனவே, தைரியமாக விமானத்தில் வரலாம் என்று முடிவு செய்தேன். அதற்காக, நானே ஒரு வெடிகுண்டை என் பைக்குள் போட்டுக் கொண்டு வந்தேன்".

●❀●

★ **படம் பார்த்து சிந்தியா அழுததுண்டா?**

ஏ.என்.எம்.ஜவாத், புத்தளம்.

உண்டு. சமீபத்தில் கூட தொலைக்காட்சியில் ராஜேந்தரின் மோனிஷா என் மோனலிஷா பார்த்து. அதாவது, பார்க்க நேர்ந்ததையிட்டு.

●❀●

★ **உதைபந்தாட்ட இறுதிப் போட்டி?**

மா. வசந்தன், திருகோணமலை.

உலகின் பெரும்பான்மையினர் எதிர்பார்த்தபடி பிரேசில் வென்று, பெரும்பான்மையினர் விரும்பியபடி ரொனால்டோவே கோல்களையும் போட்டு மகிழ்ச்சிகரமாகவே அந்த ஒரு மாதத் திருவிழா முடிவடைந்தது. எதிர்பார்த்திராத மகிழ்ச்சி; செனகல், துருக்கி ஆகிய புதிய "உதை நட்சத்திர நாடுகளின்" உதயம்!

**ம**ன்னர் விக்கிரமாதித்தனின் கட்டளைப்படி வேதாளம் உலக நாடுகள் அனைத்துக்கும் சென்றது. அந்தந்த நாட்டு மன்னர்களும் மக்களும் விக்கிரமாதித்த மாமன்னரைப் பற்றி என்ன கருத்தைக் கொண்டுள்ளார்கள் என்பதைக் கேட்டறிந்து கொண்டு உஜ்ஜயினி மாகாளி பட்டணம் திரும்பியது.

"விக்கிரமாதித்த மன்னர் நீதி நெறி வழுவாதவர்; பிரோபகாரி; பிறர் படும் துன்ப துயரங்களை அறிந்து ஏற்ற உதவிகளைப் பரிபவர். அவர் வீரதீர பராக்கிரமும் கொண்டவர். அவருக்கு நிகராக வேறு எவரும் உலகிலில்லை." என்று வேதாளம் வினவிய அனைவரும் ஒரே குரலில் கூறிவிட்டனர்.

# குளம் நிறைவதற்கான வழி?

# மன்னாதி மன்னன் 111

இத் தகவலை வேதாளம் மன்னரிடம் வந்து தெரிவித்துக் கொண்டது. இவற்றைக் கூறிய வேதாளம், தான் சென்ற இடங்களில் வேறு பல தகவல்களையும் கூடத் திரட்டிக் கொண்டும் வந்திருந்தது. அந்தக் கதைதான் தருமசீலன் கதை.

காசி நகரில் தருமசீலன் என்றொரு செட்டியார் வாழ்ந்து வந்தார். அவ்வூரில் பருவமழை அடிக்கடி பொய்ப்பதால் அங்கு வாழும் மக்கள் விவசாயம் செய்யவும் முடியாதிருந்தனர். சாதாரணமாகக் குடிநீருக்குக் கூட பெரும் தட்டுப்பாடு இருந்து வந்தது.

மக்களின் துயரை ஒருவாறு துடைக்க எண்ணிய பரோபகார சிந்தையுள்ள தருமசீலன் செட்டியார் ஒரு பெரிய குளத்தை வெட்டுவதற்குத் திட்டமிட்டார். செட்டியார் பெரும் செல்வந்தர் என்பதனால் பெரிய குளத்தை வெட்டுவதற்குரிய செலவுகள் அனைத்தையும் தானே ஏற்றுக் கொண்டார்.

உரிய நாளில் குளம் வெட்டும் பணி தொடங்கியது. சாதாரண அளவு வெட்டியதுமே நீர் சுரக்க வேண்டிய நியதி இருந்தும் வெகு ஆழமாக வெட்டியும் நீர் சுரக்கவில்லை. இதனால் செட்டியார் மிகவும் மனம் நொந்து இறைவனை வேண்டினார். காசி நகரிலுள்ள சகல ஆலயங்களிலும் சிறப்புப் பூசைகள் நடத்தப்பட்டன. செட்டியார் ஏழைகளுக்குத் தான தருமங்களை செய்தார்.

இதனைத் தொடர்ந்து அந் நகரிலுள்ள காளிகாம்பாள் ஆலயத்தில் சிறப்புப் பூசை வழிபாட்டில் தருமசீலன் செட்டியார் ஈடுபட்டிருந்தபோது அசரீரி ஒலி ஒன்று கேட்டது. "நீ வெட்டும் குளத்தில் நீர் சுரக்காமல் போனமைக்கு போன ஜன்மத்தில் நீ செய்த பாவமே காரணம். இப்பாவங்களுக்கு ஒரேயொரு பிராயச்சித்தமே பரிகாரமாகும். சகல சாமுத்திரிக லட்சணங்களும் பொருந்திய தன்னலம் சிறிதுமற்ற பரோபகாரி ஒருவன், உம்மால் வெட்டப்பட்டுள்ள குளத்தின் மத்தியில் நின்று தனது தலையை வெட்டித் தன்னைத்தானே அர்ப்பணிப்பானானால் அவனுடைய இரத்தம் நிலத்தில் விழுந்ததும் குளத்தில் நீர் சுரக்கும், என்றும் வற்றாமல் இருக்கும்"

இவ்வாறு அசரீரி சொன்னதும் தருமசீலன் செட்டியார் ஓரளவு மகிழ்ச்சியடைந்தாலும், "அசரீரியில் விவரிக்கப்பட்ட அத்தனை சிறப்பு அம்சங்களையும் கொண்ட மனிதனைத் தேட முடியுமா?" என்ற விசனமும்

# இராஜகுமாரன்

அடைந்தார். காசி நகரெங்கும் தண்டோரா போட்டு, "முப்பத்திரண்டு லட்சணங்களும் பொருந்திய ஒருவன் தன்னைத்தானே அர்ப்பணிக்க முன் வந்தால் அவனுடைய பரம்பரையினர் அனைவருக்கும் கோடிக்கணக்கில் சன்மானம் வழங்கப்படும்" என்று அறிவித்தார். ஆனால், அத்தகைய பரோபகார சிந்தையுடைய எவரும் முன்வரவில்லை.

இதனால் வேதனை அடைந்த தருமசீலன் தனது திட்டத்திற்கு மேலும் கவர்ச்சியூட்டத் தக்கதான ஏற்பாட்டையும் செய்தார். குளத்தின் நடுவில் ஒரு கோடி பொன் மதிப்புள்ள ஒரு தங்கப்பதுமையைச் செய்து நட்டு வைத்தார். அப்பொம்மையின் அருகில் அதே மதிப்பிலான பொன் கம்பத்தையும் நட்டு வைத்தார். எண்பது கோடிப் பொன் மதிப்பிலான ஒரு தங்கப் பலகை செய்து அதில் இரத்தினங்களைப் பதித்து, அப் பலகையையும் பொற்கம்பத்தின் உச்சியில் பொருத்தி வைத்தார்.

"முப்பத்திரண்டு லட்சணங்களும் பொருந்திய பராக்கிரமசாலியான ஒருவன் குளத்தின் மத்தியில் சென்று தன் தலையைச் சீவி அர்ப்பணித்தால் இங்கு வைக்கப்பட்டுள்ள தங்கப் பதுமை, பொன்னாலான கம்பம் மற்றும் இரத்தினங்கள் இழைக்கப்பட்ட பலகையும் இவை தவிர்ந்த மேலும் பல செல்வங்களையும் அவருடைய சந்ததியினருக்கு வழங்குவதற்குச் சம்மதிக்கிறேன்" என்று ஒரு கல்லில் தனது பெயரையும் பொறித்து குளக்கரையில் செட்டியார் வைத்து விட்டார்.

குளத்தின் மத்தியிலிருந்த தங்கப் பதுமையையும் ஏனைய விலை மதிப்பற்ற பொருட்களையும் பார்த்துப் பலர் ஏக்கப் பெருமூச்சு விட்ட வண்ணம் சென்றனர். ஆனால், எவரும் தங்கள் சிரத்தைச் சீவி உயிர்த் தியாகம் செய்ய முன்வரவில்லை.

காசி நகரில் தான் அறிந்த மேற்படி தகவலை வேதாளம் மன்னர் விக்கிரமாதித்தனிடம் கூறியது. கதையைக் கேட்ட மன்னர் சற்று நேரம் சிந்திக்கலானார். பின்னர் அமைச்சர் பட்டியை அழைத்து ஆலோசனை நடத்தினார். "தருமசீலன் செட்டியாரின் கோரிக்கைப்படி, அத்தனை இலட்சணங்களும் பொருந்தியவனாக அவ்வாறு அமையப் பெற்றாலும் தன்னைத்தானே தியாகம் செய்ய ஒருவனும் முன்வரப் போவதில்லை" என்று அமைச்சர் பட்டி சொன்னார்.

அமைச்சர் பட்டியின் கூற்றைக் கேட்ட மன்னர் கடகட வென்று பலமாகச் சிரித்தார். "தம்பி பட்டி! இத்தகைய தரும சிந்தனையுள்ள தருமசீலன் செட்டியாரின் எண்ணம் நிறைவேற நான் ஏன் எனது உயிரைத் தியாகம் செய்யலாகாது?"என்று கேட்டார்.

மன்னரின் தீர்க்கமான முடிவைக் கேட்ட அமைச்சர் பட்டி வாயடைத்து, என்ன கூறுவது என்று தெரியாமல் அசையாமல் திகைத்து நின்றார்.

(மன்னன் வருவான்...)

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை *-காதில பூ கந்தசாமி-*

எங்கட தனியார் பஸ் ட்ரைவர்மாரில நாலாயிரம் பேர் முறையான ட்ரைவீங் பெறாதவங்களாம். அதைவிட இருநூறு தனியார் பஸ் ட்ரைவர்மார் போதைவஸ்து பாவிக்கிறவையளாம். யார் சொல்லியிருக்கிறது? தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவரே சொல்லியிருக்கிறார். அட, இத இப்பதானே சொல்லிறார்? அநியாயமா நுகேகொடயில அந்த மனிசி மினிபஸ்ஸில அடிபட்டுச் செத்த பிறகு, இன்னும் ஏழெட்டுப்பேர் மினிபஸ் வீபத்துகளில போன கிழமை செத்ததுக்குப் பிறகுதான் திருவாய் மலர்ந்திருக்கிறார்.

பாராட்ட வேண்டிய விஷயம்தான். இப்பிடியான ஆக்களத்தான் தாங்கள் வேலைக்கு அமர்த்தியிருக்கினம் எண்ட பொறுப்புணர்வை இப்பதன்னும் தெரிவிச்சிருக்கிறார். தெரிவிச்சவர் என்ன செய்யப் போறாராம்? தான் தலைவர் பதவியில இருந்து விலகப் போறாராம். இனியாவது இப்பிடியான மினிபஸ் ட்ரைவர்களை வேலையிலயிருந்து விலக்க நடவடிக்கை எடுப்பினமெண்டு பாத்தால் பாவி மனிஷன் தான் தலைவர் பதவியிலயிருந்து விலகிக் கொள்ளுறதுதான் பரிகாரமெண்டு சொல்லுது.

அப்பிடியெண்டால் இந்தக் கதி எப்பவும் தொடரப்போகுதெண்டதத் தவிர வேற என்னெண்டு சொல்லிறது. ஆனபடியால நாங்கள்தான் இனிக் கவனமாய் இருக்க வேணும். அதாலதான் இந்த முறை மினிபஸ் பயணிகளுக்கு சில அட்வைஸ் சொல்லலாமெண்டு வெளிக்கிட்டிருக்கிறன்.

மினிபஸ் பயணிகள் நிரந்தரமா ஒரு முதலுதவிப் பெட்டியொண்டைக் கையோட கொண்டு போறது நல்லது. அதை இப்பத்தைய பள்ளிக்கூடப் பிள்ளைகள் போல முதுகுபேக்கில தூக்கிக் கொண்டு திரிஞ்சால் பெட்டர்.

மினிபஸ்ஸில குருமாருக்கு எண்டு ஒதுக்கிற முன்வரிசை ஸீட்டை இப்ப யாரும் குருமாருக்குக் குடுக்கிறதாத் தெரியேல்லை. தயவு செய்து அதில மும் மதத்தையும் சேர்ந்த குருமாரை இருத்தி ட்ரைவர்மாருக்குக் கேக்கக்கூடியதா வேதமோதச் சொல்லலாம்.

மினிபஸ்காரருக்கு உற்சாகமூட்டிற துடியாட்டப் பாடல்களப் போடாமல் ஏதும் சாந்தமான பாட்டுக்கள் முடிஞ்சால் பக்திப் பாட்டுக்களப் போடச்சொல்லிக் கேக்கலாம். முன்னேற்பாடாய் நீங்களே அப்பிடியான கஸெட்டுகளைக் கைவசம் வைச்சிருக்கிறது உசிதம் கண்டியளோ. வசதியிருக்கிறவை கசெட் பிளேயரும் கொண்டு திரியலாம்.

இந்தக் காலத்தில எங்கட பஸ் செக்கர்மாரை மருந்துக்கும் காணக் கிடைக்குதில்லை. பஸ் செக்கர்மாரைத் தேடிப்பிடிச்சு இந்த மினிபஸ் ட்ரைவர்களுக்கெல்லாம் ட்ரைவீங் தெரிஞ்சிருக்குதோவெண்டு செக் பண்ணச் சொல்லலாம். அவை வராட்டால் யாராவது ட்ரைவீங் தெரிஞ்சவை செக்கர் வேஷம் போட்டாவது செக்பண்ணிக் கொள்ளுறது பிரயோசனம்.

போதை வஸ்துப் பாவிக்கற ட்ரைவர்மாரெண்டு கண்டால் மெதுவாய் அவைக்கு நீங்களே போதைவஸ்த்தை வாங்கிக் குடுத்து பின் ஸீட்டில படுக்க வைச்சுப்போட்டு, ட்ரைவீங் தெரிஞ்ச பயணிகள் யாரும் பஸ்ஸை ஓட்டுறது சேஃப்டி.

மினிபஸ் பயணிகள் தங்கட ஒரு பிரதிநிதியைத் தெரிஞ்சு அவரை பஸ் ட்ரைவருக்குப் பக்கத்து ஸீட்டில இருத்தி அவரிட்ட ஒரு மைக்கைக் குடுத்து, கிரிக்கெட் கொமன்ரி சொல்லுமாப் போல பஸ் ஓட்டத்தின்ர வேகம், ஓடுற கியர், முன்னுக்கு வாற வாகனங்கள், எதிர்ப் படுற முடக்குகள், சந்திகள், பள்ளம் மேடுகள், பம்பர்கள் பற்றி ஒரு ரண்ணிங் கொமென்ரி குடுத்துக்கொண்டு வந்தால் பயணிகள் எச்சரிக்கையா இருந்து கொள்ளலாம்.

பஸ் அக்ஸிடெண்ட் பட்ட உடன பாயத் தயாரா யன்னல்களைத் திறந்து வைச்சுக் கொள்ளுறது புத்திசாலித்தனம்.

பயணிகள் எல்லாருமே பொதுவா தங்கள இன்சூரென்ஸ் செய்து வைச்சுக்கொள்ளுறது நல்லது. ஏறிற மினிபஸ்ஸில பயணிகளுக்கான இன்சூரென்ஸ் செய்திருக்கினமா எண்டதையும் விசாரிச்சு வைச்சுக் கொள்ள வேணும்.

மினிபஸ் பயணத்தைத் தவிர வேற வழியில்லையெண்டிருக்கிறவை அவசியமாப் பயில வேண்டிய விஷயங்கள் இதுகள்.

யன்னலால் பாய்தல், குத்துக்கரணமடித்தல், உருளுதல், ஊருதல், கூரையை உடைத்து வெளியேறுதல். தலைகீழாகத் தொங்குதல், நீச்சல் பயிற்சி, மூச்சடக்கி இருக்கும் பயிற்சி, முதலுதவிப் பயிற்சி எண்டதுகளோட ட்ரைவீங் பயிற்சியும் பயின்று வைக்கிறது சமயத்துக்கு உதவியாயிருக்கும்.

எல்லாத்தையும்விட மினிபஸ்ஸில ஏறாமல் பொடிநடையாவே பயணிக்கிறது உசிதனமாது.

இதேவேளை பாதசாரிகளுக்கும் கொஞ்சம் புத்திமதி சொல்ல வேணும். அவை நிரந்தரமா ஒரு ஹெல்மெட்டப் போட்டுக்கொண்டு நடமாடுறது முன்ஜாக்கிரதையா இருக்கும்.

மினிபஸ் தொலைவில வரக்கேயே பாக்கிறதுக்கு வசதியா பைனோகுலரொண்ட வாங்கி ஒவ்வொருத்தரும் கழுத்தில தொங்கப் போட்டுக் கொள்ளுறது ஸ்டைலுக்கு ஸ்டைலாயும் சேஃப்டிக்கு சேஃப்டியாவும் இருக்கும். ரோட்டக் குறொஸ் பண்ணக்க, மறக்காமல் பைனோகுலரால பாத்து மினிபஸ் எதுவும் கிட்டத்தில இல்லையெண்டதை உறுதிப்படுத்திக் கொண்டு குறொஸ் பண்ண வேணும்.

பாதசாரிகள் தாங்களும் ஒரு ஹோர்னைப் பூட்டிக் கொள்ளுறதும் நல்லது. பஸ் ஹோர்ன் அடிக்காட்டால் நீங்களாவது அடிச்சு அவையை அலேர்ட் பண்ணி விடலாம்.

எதுக்கும் உங்கட பெயர் விபரங்களையும் நெருங்கின உறவினரின்ர பெயரையும் எழுதி கழுத்தில தொங்கப்போட்டு வைக்கிறதும் நல்லது.

கடைசியா அரசாங்கத்துக்கு ஒரு புத்திமதி. சிக்கரெட் பெட்டிகளில 'உடல் நலத்துக்குத் தீங்காகலாம்' எண்டு எழுதிறது போல மினிபஸ்களிலையும் 'இதில் போவது ஆபத்தாகலாம்' எண்டு கொட்டையெழுத்தில கட்டாயம் எழுத வேணுமெண்டு ஒரு சட்டம் போடலாம்.

யாவும் கலப்படமற்ற கற்பனை

# இந்தவாரம் உங்கள் பலன்

07.07.2002 தொடங்கி 13.07.2002வரை

## சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

| | | | |
|---|---|---|---|
| மிதுனம் | - சூரியன், செவ்வாய் புதன். | விருட்சிகம் | - கேது |
| இடபம் | - சனி, இராகு, | மிதுனம் | - வெள்ளி, வியாழன் |

*சந்திரன், மேடம், இடபம், மிதுனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.*

**மேடம்**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) மனக்குறை நீங்கும். நோய் பிணிகள் அகலும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நிகழும். விவசாயிகளுக்கு வருவாய் குறையும். மாணவர்களுக்கு நன்மை இல்லை.
அதிஸ்ட நாள்: வெள்ளி
அதிஸ்ட இல.: 2.

**இடபம்**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) குடும்பத்தில் தொல்லைகள். ஆலய தரிசனம். உறவினர் பகை. தொழில் வருவாய் மத்திம பலன் தரும். வாகனத்தால் விபத்துக்கு இடமுண்டு.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல: 7.

**மிதுனம்**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) பிதுர் வழி சொத்துச் சேரும். உறவினரால் சஞ்சலம். வெளிநாட்டுப் பயணம் சித்திக்கும். வியாபாரிகள், விவசாயிகளுக்கு இலாபம்.
அதிஸ்ட நாள்: திங்கள்,
அதிஸ்ட இல.: 9.

**கர்க்கடகம்**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) புதிய முயற்சிகளில் அக்கறை. மனச் சஞ்சலம். வெளியிடத்திலிருந்து நல்ல செய்தி. பணவரவு மகிழ்ச்சி தரும். விவசாயிகள், வர்த்தகர்கள் குறைந்த பலனடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்,
அதிஸ்ட இல.: 6.

**சிங்கம்**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) காரியானுகூலம். குடும்பத்தில் மகிழ்ச்சி. உறவினர் ஒன்று கூடல். மாணவர்களுக்கு நன்மை. விவசாயிகள், வர்த்தகர்கள் பலன் குறைவு.
அதிஸ்ட நாள்: வெள்ளி,
அதிஸ்ட இல.: 4.

**கன்னி**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) நோய் துன்பம் அகலும். தூரத்து உறவினர் வரவு. பெரியோர் வாழ்த்துக் கிட்டும். ஆலய தரிசனம். விவசாயிகள், வர்த்தகர்கள் பலன் மத்திமம்.
அதிஸ்ட நாள்: வெள்ளி,
அதிஸ்ட இல.: 3.

**துலாம்**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) வெளியிடப் பயணம். பெரியோர் சகவாசம். பண வரவு மகிழ்ச்சி தரும். முயற்சிகள் மந்தமாகும். விவசாயிகள், வர்த்தகர்கள் மேன்மை அடைவர். மாணவர்கள் கவனம் குறைவு.
அதிஸ்ட நாள்: ஞாயிறு,
அதிஸ்ட இல.: 3.

**விருட்சிகம்**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழிலில் முன்னேற்றம். பழைய நிலுவைகள் வசூலாகும். மனமகிழ்ச்சி. வயதான உறவினர் பற்றிய கவலை. மாணவர் கல்வி உயர்ச்சி பெறும். விவசாயிகள், வியாபாரிகள் இலாப மடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்,
அதிஸ்ட இல.: 7.

**தனு**
(மூலம், பூராடம், உத்தராடத்து முன் முக்கால்) தேக சுகம் சீரடையும். குடும்பத்தில் மகிழ்ச்சி. வெளியிடத்திலிருந்து சுப செய்திகள். மாணவர் கல்வி பாதிப்படையும். விவசாயிகள் நன்மை அடைவர். வர்த்தகர்களுக்கு மந்தமான வருவாய்.
அதிஸ்ட நாள்: புதன்,
அதிஸ்ட இல.: 9.

**மகரம்**
(உத்தராடத்துப் பின் கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் மேன்மை. சுகக் குறைவு. உறவினர் வருகை. தொல்லைகள் நீங்கும். வாகனத்தால் இடையூறு. வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்,
அதிஸ்ட இல.: 5.

**கும்பம்**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) அன்னியர் உதவி. பயண அலைச்சல். பண வரவு குன்றும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு. விவசாயிகள், வர்த்தகர்கள் வருவாய் உயரும். மாணவர்கள் கல்வி நிலை மேன்மை.
அதிஸ்ட நாள்: வியாழன்,
அதிஸ்ட இல.: 3.

**மீனம்**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) முயற்சி பலிதம். பெரியோர் அனுசரணை. பிள்ளைகள் பற்றிய கவலை. திருமணப் பேச்சுக்கள் தடைப்படும். புதிய முதலீடுகள் பலனளிக்காது. விவசாயிகள், வியாபாரிகள் சவால்களை எதிர் கொள்ள நேரிடும்.
அதிஸ்ட நாள்: புதன்,
அதிஸ்ட இல.: 1.

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)





வருடம் முழுவதும் வீதியில் இரண்டு மூன்று அடி உயரத்திற்கு வெள்ளம் ஓடிக்கொண்டிருக்கும் அளவு மழை பெய்யும் ஓர் இடத்தின் வாழ்க்கை நிலை எப்படியிருக்கும்? ஆனால் அவ்வாறான ஊரிலும், மனிதர்கள் வாழத்தான் செய்கிறார்கள். உலகிலேயே அதிக அளவு மழைவீழ்ச்சி இந்தியாவின் மேகாலய மாநிலத்தில் உள்ள மவ்சின்ராம் என்ற இடத்திற்கே கிடைக்கிறது. இங்கு ஆண்டு தோறும் 38.94 கன அடி மழை கிடைக்கிறது. இரண்டாவதாக கூடுதல் அளவு மழை கிடைக்கும் சிராபூஞ்சியும் மேகாலயாவில்தான் இருக்கிறது. அங்கு 37.5 கன அடி மழை பெய்கிறது.

இந்த இரண்டு பகுதிகளிலும் உள்ள வீதிகளில் பெரும்பாலான நாட்களில் மழை நீர் ஓடிக்கொண்டேயிருக்கும். இந்த வீதிகளில் எரிபொருளால் இயங்கும் வாகனம் செல்வது சிரமமென்பதால் ரிக்ஷாதான் பிரதான வாகனம். முழங்கால் உயரத்திற்குத் வெள்ளம் வழிந்தோடும் வீதியில் அந்த வெள்ளத்தின் வேகத்தையும் எதிர்த்து வயிற்றுப் பசிக்காக ரிக்ஷாவுடன் போராடும் ஒரு மேகாலயச் சிறுவன்.




# மழையோ மழை



## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி பூஜா 28.06.2002**

பருத்தித்துறை 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தினேசராஜா - வனஜாதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வி 'பூஜா' தனது முதலாவது பிறந்த தினத்தை 28.06.2002 அன்று கவிற்சர்லாந்தில் குதூகலமாகக் கொண்டாடினார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பூட்டி, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், மச்சாள்மார், மச்சான்மார், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பூஜாவை பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என்று எல்லாம் வல்ல ஸ்ரீ கண்ணகை அம்மனை வேண்டுகிறார்கள்.

தகவல்: திரு. கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (தாத்தா), கொழும்பு -12.

## என் பசிக்கு கரப்பான் பூச்சிதான் தீர்வு!



கரப்பான் பூச்சியைக் கண்டாலே பயப்படுபவர்களுக்குத் தைரிய மூட்டும் வகையில் ஒரு நற்செய்தி! படத்தில் இருக்கும் நபரின் பெயர் கென் எட்வேர்ட். பிரிட்டிஷ் நாட்டவரான இவர் கலிபோர்னிய பல்கலைக் கழகம் ஒன்றில் பேராசிரியராக இருக்கிறார். இவரது பொழுதுபோக்கு உயிருள்ள கரப்பான் பூச்சிகளைச் சாப்பிடுவதுதான். ஓடித் திரியும் கரப்பான் பூச்சியை கையால் பிடித்து மென்று விழுங்குகிறார். ஓய்வாக இருக்கும் நேரங்களில் எலிகளைப் பிடித்து உண்ணுகிறார். ஒரு நிமிடத்தில் 36 கரப்பான் பூச்சிகளை சாப்பிட்டு ஏப்பமிட்டவர் என்ற கின்னஸ் சாதனையாளர் இவர். இவர் சாப்பிடுவதை அருவெறுப்பாகப் பார்த்துக் கொண்டிருப்பவர்களிடம் கரப்பான் பூச்சிகளின் சுவையே தனி என்று கூறிச் சிரிக்கிறார்.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**இரதிராஜன் கபிஷ்னா 09.07.2002**

[illegible]

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



முனைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட நடேசன் யோகேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வி ஜெயதுஷா தனது முதலாவது பிறந்த நாளை 04.07.2002 அன்று, இலக்கம் 10/2, நீழுகல்முனை வீதி மட்டக்களப்பில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

**செல்வி ஜெயதுஷா 04.07.2002**

ஜெயதுஷாவை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், தாத்தா, பாட்டி, மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் துணை கொண்டு பல்கலையும் கற்று, பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: அன்பு அப்பா, அம்மா, நடேசன் யோகேஸ்வரி, மட்டக்களப்பு.